உ

கடவுள் துணை.

# அணியிலக்கணம்.

திருத்தணிகை

சரவணப்பெருமாளையரவர்களியற்றியது.

இதனை,

கிரிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

ஈக்காடு - இரத்தினவேலு முதலியார்

பதிப்பித்தனர்.

சென்னை.

பண்டித மித்திர யந்திரசாலை.

1898.

# பதிப்புரை.

திருத்தணிகைப்பதியில், வீரசைவ குலோத்பவராய கல்வி யறிவொழுக்கங்களிற் சிறந்து, திருவாவடுதுறையாதீனத்துக் காசி யப்பமுனிவர் வழியி லிலங்கிய விலக்கணங்களை யாராய்ந்த ... ஆப் பை...ரெனப்பவ ரொருவரிருந்தனர். அவர் இல்லறி... சிலகாலொழுகி மகப்பேறடையாது மனமாழ்கி, தன்ப... பா ...னையமாரான தடன்பிறந்த வள்ளியம்மாளையு மண... னுஞ் சிலவருடங்கள் கழித்து, இருவரிலொருவர்பாலும் புத்திரோற்பவங் கைகூடாது கவலைகொண்டுளாழ்ந்து, தமது சீடர்கட்குக் கல்வி பயிற் றுவதிலேயே மனதைச்செலுத்தி ஒருவாறு துணிவுகொண்டனர்.

இவரிங்ஙனமிருக்க இவர் மனைவியரிருவருந் தணிகையம் பதிக்கருகிலுள்ள ஊருணியொன்றினின்று நீர் முகந்துவரச் செல்லுகையில், அவர்கள் கட்புலனுக்குத் தோற்றிய வேங்கடமலை யை நோக்கித் தணிகாசலபதியை வெறுத்தோர்போல, இச்செங் கல்வராயனுக்கு நம்மீது கருணையில்லைபோலும். இனி வேங்கடத் திறைவனேனும் நமக்கு நன்மக்களை யருளானோ வெனச் சம்பாஷித் துச்சென்று, நமதிடத்துக் ...ப்பின், திருமாலின் பெயரை யதற்களித்துமெனத் தீர்மானித்துக்கொண்டு வீட்டையடைந்தனர். சின்னாட்சென்றபின்னர் அவ்விரு சகோதரிகளுங் கருப்பவதிகளாய் முறையே ஒவ்வொரு ஆண்மகவைப் பெற்றனர். அவர்கள் ஒருவர்க் கொருவர் ஒருநாளின் வித்தியாசத்தாலேயே மூத்தோர் இளையோ ரெனப்பட்டனர். அவ்விரு சிறுர்க்கும் ...ந்த தமது மரபின்படி விசாகன் சரவணன் என நாமகரணஞ் செய்ய யத்தனிக்கையில், அவர் மனைவியர் திருப்பதிமலையைக்கண்டு தங்களுட்டீர்மானித்த வகையைவெளியிட ஐயரவர்கட்கிணங்கித் தாம்விரும்பிய நாமங்க ளுடன் பெருமாளென்பதைப் புணர்த்தினர். அதனால் விசாகப்பெரு மாளையர் சரவணப்பெருமாளையரென வழைக்கப்பட்டனர்.

# பதிப்புரை.

இச்சகோதரர்களிருவரும் மிக்க வொற்றுமையுடையராய்த் தமது தந்தையாரிடம் பலநூல்களைக் கற்று, பின்னர்ச் சென்னைநகரை யடைந்து சஞ்சீவிராயன்பேட்டையில் வாழ்ந்திருந்த இலக்கணக்கடலாகிய இராமாநுஜகவிராயரிடம் நன்னூன்முதலிய பன்னூல்களும் பயின்று கற்றோர் மதிக்கத்தக்க வித்துவசிகாமணிகளாயினர். இந்நூலாசிரியராகிய சரவணப்பெருமாளையர் சுமார் முப்பதுவருடங்கட்கு முன்னும், அவர் தமயனாராகிய விசாகப்பெருமாளையர் சுமார் பதினைந்துவருடங்கட்கு முன்னுங் காலகதியடைந்தனர்.

இவர்களில் விசாகப்பெருமாளையர் காலத்து அவர் பெயரால் வெளியாயுள்ள ஐந்திலக்கணம் - இலக்கணவினாவிடை யென்பவற்றுள், அவரால் எழுத்துஞ் சொல்லும், அவரிளவலாகிய சரவணப்பெருமாளையரால் யாப்பும் அணியுஞ் செய்யப்பட்டன. இந்நூலேயன்றி, நைடதம் திருக்குறள் நாலடியார் நன்னூல் முதலிய பல நூல்கட்குச் சரவணப்பெருமாளையர் உரைசெய்துள்ளார். இவர்களைப்பற்றி யாம் கர்ணபரம்பரையிலுணர்ந்த பிற விஷயங்களையும் இனியச்சிடப்படும் ஐந்திலக்கணத் தொடக்கத்திற் பரக்கக்காட்டுதும்.

இக்காலத்துத் தமிழ்பயிலுமாணவர்கட்கும், யூனிவர்சிடி பரீக்ஷைக்குப் புகும வித்தியார்த்திகளுக்கும் பெரிதும் பயன்படலாகுமென்னுங் கருத்தாலும், எமது மாணவருட் சிலரது விருப்பாலும் இதனை யச்சிடலாயினேம். கல்வி பயிலலாகிய புலத்தில் எம்மைப்போல முயன்றுவரும் பண்டித சகோதரர்களும், தமிழின் சுவையையறிய வவாவுங் கல்விமக்களும் இந்நூலை யாதரிப்பாராகளாக

இங்ஙனம்

ா - இரத்தினவேலு முதலியார்.

கடவுள் துணை.

# அணியிலக்கணம்.

அணி யென்பது செய்யுட்கழகு செய்துநிற்பதாம்.

அவ்வணி பொருளணி சொல்லணியென விருவகைப் படும். இவ்விரண்டினும் பொருளணியேசிறப்புடைத்தாம்.

அப்பொருளணி உவமையணிமுதல் ஏதுவணி இறுதி யாக நூறும். அவற்றிற்கு முறையே பெயரும் விதியும் உதாரணமும் வருமாறு:—

## க. உவமையணி.

இது இரண்டுபொருள்களுக்கு ஒப்புமையைவிளங்கச் சொல்லுதலாம். இதனை வடநூலார் உபமாலங்காரமென்பர். அது விரியுவமையுந் தொகையுவமையுமென விருவகைப் படும். அவற்றுள்,

### விரியுவமை

உபமானமும் உபமேயமும் பொதுத்தன்மையும் உவமையுருபும் ஆகியநான்கும் விரிந்துவருவதாம்.

உ-ம். "பால்போலு மின்சொற் பவளம்போற் செந்துவர்வாய்ச்
சேல்போற் பிறழுந் திருநெடுங்கண் மேலாம்
புயல்போற் கொடைக்கைப் புனனாடன் கொல்லி
யயல்போலும் வாழ்வ தவர்."

இதில், பால்போலுமின்சொல் என்புழி, பால் - உபமானம், சொல்-உபமேயம். இனிமை-பொதுத்தன்மை. போலும்-உவமையுருபு.

### தொகையுவமை

உபமேய மொழிந்த மூன்றனுள் ஒன்றும் பலவுந் தொகுதலாலாகிய வேழுமாம். அவை உருபுத்தொகை,

பொதுத்தன்மைத்தொகை, பொதுத்தன்மை யுருபுத் தொகை, உவமானத்தொகை, உருபுவமானத்தொகை, பொதுத்தன்மையுவமானத்தொகை, பொதுத்தன்மையுருபுவமானத்தொகை எனப் பெயர்பெறுமென்றறிக.

உ-ம். புயற்கருங்குழலாள்.
காந்தட்போதினை நிகர்க்குங்கையாள்.
கயற்கணுள்முகத்திற்கொப்பாங்காந்திகொள்பொரு
வாய்நயச்சிவப்புளதொன்றில்லை. [ளுண்டோ.
நாசிபோல்வதுமற்றுகும்.
குயிற்கிளவியினுள்.
பாவைகுணத்தையார்குறிக்கவல்லார்.

இதில் அவ்வேழு முறையேகாண்க. காந்திகொள் பொருளுண்டோ வென்புழி, பொருளுலகத்தி லுளதாகவு மில்லையெனலால் உபமானத்தொகையாயிற்று. குயிற்கிளவியினுள் என்புழி, குயிலினதிசைபோலு மதுரமாகியகிளவியினுள் எனவிரித்துரைக்கவேண்டுதலால் குயிலினதிசை உபமானமாம்.

வடநூலார் பொதுத்தன்மையைச் சாதாரண தருமமென்றும், உவமையுருபை உபமாவாசகமென்றும், ஒப்புமையைச் சாமியமென்றும் சாதுர்சியமென்றுங் கூறுவர்.

"போலப் புரைய வொப்ப வுறழ-மானக் கடுப்ப நேர நிகர - வியைய வேய்ப்ப வன்ன வின்ன - வென்பவும் பிறவு முவமத் துருபே." என்பது சூத்திரம்.

## உ. இயைபின்மையணி.

இது ஒருவாக்கியத்துள் ஒருபொருளையே யுபமானமாகவு முபமேயமாகவுஞ் சொல்லுதலாம். இதனைவடநூலார் அநந்வயாலங்காரமென்பர். தண்டியாசிரியர் பொது நீங்குவமையென்பர்.

உ-ம். "தேனே யனையமொழிச் சேயிழையாள் செவ்வியினுற்
றானே யுவமை தனக்கு."

இதில், இப்பொருளுக்கொப் பிரண்டாவ தொன்றில்லை யென்பது கருத்து.

## ௩. புகழ்பொருளுவமையணி.

இது இரண்டுவாக்கியங்களுள் முன்னதி லுபமானமாகச் சொல்லப்பட்டதைப் பின்னதி லுபமேயமாக்கியும், உபமேயமாகச் சொல்லப்பட்டதையுபமானமாக்கியுஞ் சொல்லுதல். இதனை வடநூலார் உபமேயோபமாலங்காரமென்பர். தண்டியாசிரியர் இதரவிதரமென்பர்.

உ-ம். "நின்புடை யறநிகர்த் தோங்கு நீள்பொரு
ளின்புடைப் பொருணிகர்த் தோங்கு மெய்தறந்
தன்புடைக் கடலுடைத் தரணி யோர்க்கெலா
மன்புடை முறைசிறந் தளிக்கு மண்ணலே" எனவரும்.

அன்றியும்,

"களிக்குங் கயல்போலு நின்கணின் கண்போற்
களிக்குங் கயலுங் கனிவாய்த்—தளிர்க்கொடியே
தாமரை போன்மலரு நின்முக நின்முகம்போற்
றாமரையுஞ் செவ்வி தரும்."

எனத்தொன்று தொட்டுவரும் உபமானோபமேயங்களை யவ்வாறு சொல்வதுமது. இதன்கருத்து மூன்றாவதொப்ப தொன்றின் றென்பதாம்.

உபமேயம் வர்ணியமென்றும் புகழ்பொருளென்றும் புனைவுளியென்றும், உபமானம் அவர்ணியமென்றும் அல்பொருளென்றும் புனைவிலி யென்றுஞ் சொல்லப்படும்.

## ௪. எதிர்நிலையணி.

இது உபமானத்திற்குக் குறைவுதோன்றச்சொல்லுதலாம். இது உவமையணிக்கு எதிரியதாய் நிற்றலி னப்பெயர்த்து. இதனை வடநூலார் பிரதீபாலங்காரமென்பர். அது ஐந்துவகைப்படும். அவற்றுள்,

௧-வது. உலகத்தி லுபமானமாய்ப் பிரசித்தமாக வழங்குகின்றபொருளை யுபமேயமாக்கிச்சொல்லுதல்.

உ-ம். "அதிர்கடல்சூழ் வையத் தணங்குமுகம் போல
மதியுஞ் செயுமே மகிழ்."

உ-வது. அவர்ணியத்தை யுபமேயமாகக்காட்டி வர்ணியத்தை யிகழ்தல்.

உ-ம். "பொன்செருக்கை மாற்றுமெழிற் பூவை திருமுகமே
யுன்செருக்குப் போது மொழிகவினிக்—கொன்செருக்கு
மிக்கமக ரக்கடற்பூ மிக்கண் மகிழ்செயலா
லொக்கு மதியு முனை."

ங-வது. வர்ணியத்தை யுபமேயமாகக்காட்டி அவர்ணியத்தை யிகழ்தல்.

உ-ம். "ஆற்ற லுறுகொலையி லாரெனக்கொப் பென்றந்தோ
கூற்றுவநீ வீண்செருக்குக் கொள்கின்றாய்—சாற்றுவல்கேள்
வெண்டிரைசூழ் ஞால மிசையுனக்கொப் பாகவே
யொண்டொடிதன் னீள்விழியு முண்டு."

ச-வது. வர்ணியத்தோடு அவர்ணியத்திற்கு ஒப்புமையின்றெனச் சொல்லுதல்.

உ-ம். "இறைவி மதுரமொழிக் கின்னமுதொப் பாமென்
றறைவ தபவாத மாம்."

ரு-வது. உபமானத்தை வீணென்றுசொல்லுதல்.

உ-ம். "செங்கயற்க ணையுன் றிருமுகத்தைப் பார்ப்பவர்க்குப்
பங்கயத்தா லுண்டோ பயன்."

## ரு. உருவகவணி.

இது உபமேயத்தி லுபமானத்தை யொற்றுமையானு லாவது அதன் செய்கையினாலாவது ஆரோபித்தலாம். இதனை வடநூலார் ரூபகாலங்காரமென்பர். ஆரோபமாவது உபமானவுபமேயங்களி னபேதவுணர்ச்சி. அது ஒற்றுமை யுருவகம், அதன்செய்கையுருவகம் எனவிருவகைப்படும். இவற்றை வடநூலார் அபேதரூபகமென்றும், தாத்ரூப்பிய ரூபகமென்றுங்கூறுவர். அவ்விரண்டும் மிகை, குறை, அவை யின்மை என்பவைகளான் மும்மூன்றாம். அவற்றுள்,

### க-வது. மிகையோற்றுமை யுருவகம்.

உ-ம். "உயர்புகழ்நங் கோனு முருவுடைய மார
னயவழகை நாடுமென் கண்."

இதில், மாரனுக்கு உருவமிகையாகச் சொல்லப் பட்டது.

### உ-வது. குறையோற்றுமை யுருவகம்.

உ-ம். "எல்லாரு மேத்துபுக ழேந்தலிவ னெற்றிவிழி
யில்லாத சங்கரனே யாம்."

இதில், சங்கரற்கு நெற்றிக்கண் குறைவாகச் சொல்லப்பட்டது.

### ஈ-வது. அவையிலோற்றுமை யுருவகம்.

உ-ம். "பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற்
படர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கல னடத்த வளர்ந்தெழுஞ் சோண
சைலனே கயிலைநா யகனே."

இதில், கடன்முதலியவை மிகைகுறைவின்றிச் சமனாகச் சொல்லப்பட்டன.

### ச-வது. மிகையதன்செய்கை யுருவகம்.

உ-ம். "மங்கை வதன மதியங் களங்கமுடைத்
திங்களை மிக் கெள்ளல் செயும்."

இதில், முகமதிக்குக் களங்கமில்லாமை யதிகமாகச் சொல்லப்பட்டது. ஈண்டு முகமதி யென்பதற்குச் சந்திரனது செய்கையையுடைய முகமெனப் பொருள் கொள்க.

### ரு-வது. குறையதன்செய்கை யுருவகம்.

உ-ம். "பொருதிரைசேர் தண்பாற் புணரிபிற வாவே
யொருதிருவிம் மாதென் றுணர்."

இதில், இத்திருவுக்குப் பாற்கடலிற் பிறத்தல் குறைவாகச் சொல்லப்பட்டது.

### சா-வது. அவையிலதன்செய்கை யுருவகம்.

உ-ம். "இம்மான் முகமதியே யின்பு செயுமதனு
லம்மா மதிப்பயனென் னும்."

இதில், முகமதிக்குமிகையுங் குறையுஞ்சொ லாமற் சமஞ்செய்ததுகாண்க.

## ௬. திரிபணி.

இது உபமானப்பொருளானது அப்பொழுது நிகழ் கின்ற செய்கையிற் பயன்படுதற்பொருட் டுபமேயத்தி னுருவத்தைக்கொண்டு பரிணமித்தலாம். இதனை வட நூலார் பரிணாமாலங்காரமென்பர்.

உ-ம். "செய்ய வடிக்கமலத் தாலத் திருந்திழையாள்
பைய நடந்து பசும்பொழிலுற்—றுய்ய
வலர்கட் குவளையினு னோக்கியகத் தன்பிற்
சிலசொற் றனளே தெரிந்து."

இதில், கமலமுங் குவளையுமாகிய வுபமானப் பொருள்கள் நடத்தனு நோக்கலுமாகிய செய்கையி லுப யோகித்தற் குபமேயருபத்தைக் கொண்டுதிரிந்தன. அடி யுருக்கொண்டுதிரிந்த கமலமெனவும்,கண்ணுருக்கொண்டு திரிந்த குவளையெனவும் விரித்துரைத்துக்கொள்க.

## ௭. பலபடப்புனைவணி.

இதனை, வடநூலார் உல்லேகாலங்காரமென்பர். அது இருவகைப்படும். அவற்றுள்,

௧-வது. ஒரு பொருளிற் பலரும் பலதருமங்களி னாலே பலபொருள்களை யாரோபித்தல்.

உ-ம்."ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுக ரானவர் காமநன்னூ
லேரணங் காணென்ப ரெண்ணெழுத் தென்ப ரிசைப்புலவோர்
சீரணங்காயசிற்றம்பலக்கோவையைச்செப்பிடினே" எனவரும்.

௨-வது. ஒருவரே யொருபொருளில் விஷய பேதங்களாற் பலபொருள்களை யாரோபித்தல்.

உ-ம். "செல்வ மதிற்றனதன் செப்புகொடை யிற்கன்னன்
கல்விதனிற் சேடனிவன் காண்." எனவரும்.

"தருமன் றண்ணளி யாற்றன தீகையால்
வருணன் கூற்றுயிர் மாற்றலின் வாமனே
யருமை யாலழ கிற்கணே யைந்துடைத்
திருமகன்றிரு மாநில மன்னனே." இதுவுமது.

அ. நினைப்பணி.

இது ஒருபொருளைக்கண்டு ஒப்புமையினாலே மற்றொருபொருளை நினைத்தலாம். இதனை வடநூலார் ஸ்மிருதிமதாலங்காரமென்பர்.

உ-ம். "காதலுறு கஞ்சமலர் கண்டவெந்துமனங்
கோதைமுகந் தன்னைநினைக் கும்."

கூ. மயக்கவணி.

இது ஒப்புமையினாலே யொருபொருளை மற்றொருபொருளாக வறிதலாம். இதனை வடநூலார் பிராந்திமதாலங்காரமென்பர். பிராந்தியாவது அதுவாகாததை யதுவென வறிதல்.

உ-ம். "மழைக்கண் மங்கையர் பயிறர மரகத மணியி
னிழைத்த செய்குன்றின் பைங்கதிர் பொன்னிலத் தெய்தக்
குழைத்த பைந்தரு நீழலிற் குலவுமா னினங்க
டழைத்த புல்லென விரைவொடு தனித்தனி கறிக்கும்."

இதில், மரகதமணிக்கதிரைப் புல்லென வறிந்தது.

ய. ஐயவணி.

இது ஒப்புமையினாலே யொருபொருளைக்கண்டிதுவோ வதுவோவெனச் சந்தேகித்தலாம். இதனை வடநூலார் சந்தேகாலங்காரமென்பர்.

உ-ம். "தாதளவி வண்டு தடுமாறுந் தாமரைகொல்
மாதர் விழியுலவும் வாண்முகங்கொல்—யாதென்
றிருபாற் கவர்வுற் றிடையூச லாடி
யொருபாற் படாதென் னுளம்." எனவரும்.

யக. ஒழிப்பணி.

இது ஒருதருமத்தை யாரோபித்தற் பொருட்டொரு தருமத்தை மறுத்தலாம். இதனை வடநூலார் அபநுதியலங்காரமென்பர்.

அது அறுவகைப்படும். அவற்றுள்,

### க-வது. வெற்றெழிப்பு.

இது உபமான தருமத்தை யாரோபித்தற்கு உபமேயதருமத்தை யொழித்தலாம்.

உ-ம். "மதியன் றிதுபுகலின் வானதியிற் றோன்றும்
புதியதொரு வெண்கமலப் பூ."

### உ-வது. காரணவொழிப்பு.

இது மேற்சொல்லப்பட்ட வொழிப்பே காரணத்தோடு கூடிவருதலாம்.

உ-ம். "பொங்கு வெம்மை பொழிதலி னலிது
திங்க ளன்று தினகரன் றானன்று
கங்கு லாதலி னற்கட னின்றெழீஇத்
தங்கு றும்வட வைத்தழ லாகுமே."

### ௩-வது. வேறுபாட்டொழிப்பு.

இது வர்ணியத்தி லாரோபித்தற்பொருட்டு மற்றொருபொருளின் றருமத்தை யொழித்தல்.

உ-ம். "தெரியு மிதுதிங்க ளன்று செழும்பூ
ணரிவைமுக மேதிங்க ளாம்."

இதில், திங்களின்றரும மதனிடத்தொழிக்கப் பட்டு வர்ணியமாகிய முகத்திலாரோபிக்கப்பட்டது.

### ச-வது. மயக்கவொழிப்பு.

இது ஒரு பொருளை மற்றொருபொருளென்று கொள்ளும் பிராந்தியை யுண்மைகூறி யொழித்தல்.

உ-ம். "மனக்கினிய தோழி மடந்தைமுக நோக்கி
யுனக்குடலி னின்றியெழு வெப்பந்—தனக்குச்
சுரநோயோ காரணநீ சொல்லெனவ தான்று
பொருமார னென்றனளப் பொன்."

இதில், மன்மதனிடத்துண்டாகிய சுரப்பிராந்தி மாரனென்று கூறியொழிக்கப்பட்டது.

## ரு-வது. வல்லோரொழிப்பு.

இது பிறரையமுற்று வினவிய தஞ்சொல்லி னுண்மைப்பொருளை வல்லோர் அச்சொல்லுக்கு மற் றொரு தாற்பரியத்தைக் கற்பித்து மறுத்தல்.

உ-ம். "இலங்கயிற்க ணொளிகுளைக் கென்காலைப் பற்றிப்
புலம்பியதுண் டென்று புகல—விலங்கியய
னின்றுவரு மற்றொருத்தி நின்கணவ னேவென்ன
வன்றுசிலம் பென்றா ளவள்."

## சு-வது. வஞ்சகவொழிப்பு.

இது வஞ்சனை கபடம் பெயர்முதலிய சொற் களால் வர்ணியத்தினது தருமத்தைமறுத்தல்.

உ-ம். "இம்மடந்தை கட்கடைநோக் கென்னும் பெயரினைக்கொண் டம்மதவேள் வாளி யபிம்."

## ம௨. தற்குறிப்பணி.

இது ஒருபொருளை மற்றொருபொருளினது தரும சம்பந்தத்தினாலே யிஃதஃதன்றென்று தெரிந்திருந்து மப்பொருளாக அத்தியவசயித்தலாம். இதனை வடநூலார் உத்ப்ரேக்ஷாலங்காரமென்பர். அத்தியவசாயமாவது—ஒரு பொருளில், மற்றொருபொருளி னபேதத்தை யையத்துட னறிதல். அத்தியவசாயம் - சம்பாவனை-தற்குறிப்பு-உத்ப் ரேக்ஷ என்பனவொருபொருட்சொற்கள். ஒருபொரு ளெனப்பட்டதை விஷயமெனவும் புலமெனவும்,மற்றொரு பொருளெனப்பட்டதை விஷயியெனவும் புலங்கொளி யெனவுஞ்சொல்லுவர். போல-நினைக்கின்றேன்-நிச்சயம்- உண்மை - துணிவு முதலிய சொற்க ளிதற்குருபுகளாய் விரிந்தேனுந் தொக்கேனும் வரும். அது பொருட்டற் குறிப்பு ஏதுத்தற்குறிப்பு பயன்றற்குறிப்பு எனமூவகைப் படும். இவற்றைமுறையே வடநூலார் வஸ்தூத்ப்ரேக்ஷ ஏதூத்ப்ரேக்ஷ பலோத்ப்ரேக்ஷ என்பர். இவற்றுள் விஷயம் விரிந்துநிற்றலுந் தொக்குவருதலுமாகிய விரண் டாலும் பொருட்டற் குறிப்பிரண்டாம். ஒழிந்தவிரண்டும்

விஷயமுளதாதலுமிலதாதலுமாகிய விரண்டாலுமிவ்விரண்டாம். அவைமுறையேகூறுதும்:

க-வது. விரிபுலப்பொருட்டற்குறிப்பு.

உ-ம். "நேமிப் பெடைத்திரளி னெஞ்சங் களிற்றோன்றுங்
காமத் தழலிற் கதித்தோங்கு—தூமத்தின்
கூட்ட மெனவே குறிக்கின்றேன் மேதினிமே
லூட்ட மறையிருளை நான்."

இதில், இரவின்கணெங்கும் வியாபித்தவிருளில் கருமை கண்மறைத்தன் முதலிய தருமசம்பந்தத்தினலப் போது தத்தஞ்சேவலைப் பிரிவுற்றுப் பலவிடங்களிலுமிருக்கின்ற சக்கிரவாகப்பேடைகளினுள்ளத்தெரிந்தெழுதற்கு மூளுகின்ற காமத்தீயிற்றோன்றும் புகைக்கூட்டமாகிய பொருளினபேதமத்தி யவசயிக்கப்பட்டது. இருளாகிய விஷயம் விரிந்து நின்றது. புகைக்கூட்டம் விஷயி. இவண்முகத்தைச் சந்திரனென்று நினைக்கின்றேன் என்பதுமது.

உ-வது. தோதுபுலப்பொருட்டற்குறிப்பு.

உ-ம். "காரிரு ளங்கங் கிளைப்பூ சுதல்போலும்
பேருலகந் தன்னிற் பெரிது." எனவும்,

"மைம்மா ரியைவானம் பெய்வதுமா னத்தோன்று
மிம்மா நிலத்தி னிருள்." எனவும்,

சொல்லப்பட்ட விவ்விரண்டிலும் இருளது வியாபித்தலில் விண்முதன் மண்காறுமெல்லாவற்றையுங்கரியனவாக்குதலாகிய தருமசம்பந்தத்தினலே இருளை வினைமுதலாகவுடைய பூசுதலினது அபேதமும், ஆகாயத்தைக் கருத்தாவாகவுடைய மைம்மழைபெய்தலினது அபேதமும் அத்தியவசயிக்கப்பட்டன. இவ்விரண்டிலுமிருளினது வியாபித்தலாகிய விஷயந்தொக்குவந்தது. பூசுதலும் பெய்தலும் விஷயிகள்.

ந-வது. உளபுலவேதுத்தற்குறிப்பு.

உ-ம். "ஏந்திழைநின் றுளவனி யின்மேன் மிதித்தலினூற்
சேந்தனவென் றுள்ளுமென் னெஞ்சு."

இதில், பாதங்களினதியற்கைச் சிவப்பிற்கேது வாகாத பூமியின் மிதித்தலில் ஏதுத்தன்மை அத்தியவச யிக்கப்பட்டது. மிதித்தலாகிய விஷயமுளதாகுகையாலுள புலமாம். ஏதுத்தன்மை விஷயி.

சு-வது. இல்புலவேதுத்தற்குறிப்பு.

உ-ம். "முகவொளியைப் பாவாய் பெறற்குமுண்ட கத்தோ
டிகலுமதி யைய மிலே."

இதில், இயல்பினுண்டாகிய தாமரை மதிகளின் பகைக்கேதுவாகாத பாவைமுகத்தொளி விருப்பத்தி லேதுத்தன்மையத்தியவசயிக்கப்பட்டது. அவ்விருப்ப மதிக்கின்மையா லில்புலம். விருப்பம் விஷயம். ஏதுத் தன்மை விஷயி.

ரு-வது. உளபுலப்பயன்றற்குறிப்பு.

உ-ம். "குயிற்றிரளே யோட்டுமொழிக் கோமளமின் னேநின்
வயிற்றுமடிப் பாகியநல் வண்பொற்—கயிற்றினன்
மொட்டுண்ட பார முலேயைச் சுமந்திடற்குக்
கட்டுண்ட தோநின் னிடை."

இதில், இடையானது கொங்கைகளைத் தன்னி யல்பிற் சுமத்தலான் மடிப்பாகிய பொற்கயிற்றின் கட்டுக் குப் பலனகாதிருக்க வச்சுமத்தலிற் பலத்தன்மையத்திய வசயிக்கப்பட்டது. சுமத்தலாகிய விஷயமுளதாகுகையால் உளபுலம். பலத்தன்மை விஷயி.

சூ-வது. இல்புலப்பயன்றற்குறிப்பு.

உ-ம். "ஒண்டொடிகே ளுன்பதசா யுச்சியத்தை யுற்றிடற்கே
முண்டகமென் போது முதுநிலத்திற்—றண்டுறைநீர்
நின்றொரு தாளி னெடிது தவம்புரியு
மென்றறைதற் கைய மிலே."

இதில், கமலத்தினது நீரினுறைதலாகிய தவஞ் செய்தற்கு ப்பலனகாத பதசாயுச்சியமடைதலிற் பலத் தன்மை யத்தியவசயிக்கப்பட்டது. பதசாயுச்சியமடைத லாகிய விஷயங் கமலத்திற்கு மெய்ம்மையாக வின்மையா லில்புலமாம். பலத்தன்மை விஷயி.

## ௰௩. உயர்வுநவிற்சியணி.

இது ஒருபொருளானது தன்சொல்லாற் சொல்லப்படாமற் கேட்போரை மகிழ்விப்பதும் இஃதஃதன்றென்று தெரிந்துந் தன்னிச்சையாலாமென்று கொள்ளப்படுவதுமாகிய வாரோப நிச்சயத்திற்கு விஷயமாகுதலாம். இதனை வடநூலார் அதிசயோக்தியலங்காரமென்பர். அது எழுவகைப்படும். அவற்றுள்,

### ௧-வது. உருவகவுயர்வுநவிற்சி.

இது உபமேயத்தை யதன் சொல்லாற் சொல்லாமலுபமானச் சொல்லினு லிலக்கணையாகச்சொல்லுதல்.

உ-ம். "புயலே சுமந்து பிறையே யணிந்து பொருவிலுடன்
கயலே மணந்த கமல மலர்ந்தொரு கற்பகத்தி [செந்நெல்
னயலே பசும்பொற் கொடிநின்ற தால்வெள்ளை யன்னஞ்
வயலே தடம்பொய்கை சூழ்தஞ்சை வாணன் மலையத்திலே."

இதில், புயன்முதலிய வுபமானச்சொற்களாற் கூந்தன்முதலிய வுபமேயங்க ளிலக்கணையாகச் சொல்லப்பட்டன.

### ௨-வது. ஒழிப்புயர்வுநவிற்சி.

இது முன்சொன்னவுயர்வு நவிற்சியொழிப்போடு கூடிவருதல்.

உ-ம். "பைந்தொடிநின் சொல்லி லமுதுளதாற் பாமரர்க
ளிந்துவிடத் துண்டென்ப ரே."

இதில், அமிர்தமென்னப்பட்ட வுபமானத்தினாற் சொல்லிலிருக்கின்ற மாதுரியமாகிய வுபமேயஞ்சொல்லப்பட்டுச் சந்திரனிடத் தில்லையென்பதாலொழிப்பை யுட்கொண்டிருக்கின்றது.

### ௩-வது. பிரிநிலையுயர்வுநவிற்சி.

இது உலகத்திற் பிரசித்தமாகிய தீரம் உருவம் செல்வம் முதலியவைகட்கினமாகிய தீராதிகளைப்பிரித்துச் சொல்லுதல்.

உ-ம். "பாந்தண் முடியிற் பரிக்குங் குவலயத்திவ்
வேந்தனது தீரமொன்றும் வேறு." எனவும்,

"போதார் மலர்க்கூந்தற் பூவை யிவள்படைப்புச்
சாதா ரணமான தன்று." எனவும்,

வரு மிவைகளில் தீரத்திலும் படைப்பிலு மிருக்கின்ற வபேதத்திற் பேத மாரோபிக்கப்பட்டது.

சு-வது. தொடர்புயர்வுநவிற்சி.

இது சம்பந்தமில்லாதிருப்பச் சம்பந்தத்தைக் கற்பித்தல்.

உ-ம். "அகழு மிஞ்சியு மண்டத்தி னடிமுடி காறும்
புகுது மென்றுதம் மாற்றலான் முரணுபு புகுங்கா
லிகலும் வெஞ்சினச் சேடனு டிராகுவென் றுமைக்கு
நிகரில் பாம்புக ணெறியிடைக் காண்டலு நின்ற."

இதில், சம்பந்தமில்லாமையிற் சம்பந்தமாரோபிக்கப்பட்டது. அன்றியுஞ் சம்பந்தமிருக்கச் சம்பந்தமில்லாமையைக் கற்பித்தலுமது.

உ-ம். "அற்பகத்தின் மன்னவனே நீயருள்செ யாநிற்பக்
கற்பகத்தை யாம்விரும்போங் காண்."

இதில், கற்பகத்தை விரும்புதலின் சம்பந்தமிருக்க வதி லதைன தில்லாமை யாரோபிக்கப்பட்டது.

ரு-வது. முறையிலுயர்வு நவிற்சி.

இது காரணமுங் காரியமு மொருகாலத்தி னிகழ்வனவாகச் சொல்லுதல்.

உ-ம். "மன்னநின் கணையு மொன்னலர் கூட்டமு
மேககா லத்தினு ணிகந்தோ டினவெனி
லுன்புகழ்த் திறத்தினை யுணர்ந்து
மன்பதை யுலகுள்யார் பாடவல் லாரே."

இதில், அம்பினது தாக்குகையாகிய காரணத்திற்கும் அரசர்களினோட்டமாகிய காரியத்திற்கும் முன் பின்றோன்றுகைத் தன்மையில், ஒருகாலத்திலுண்டாகுகை கற்பிக்கப்பட்டது.

"விரிந்த மதிநிலவின் மேம்பாடும் வேட்கை
புரிந்த சிலைமதவேள் போரும்—பிரிந்தோர்
நிறைதளர்வு மொக்க நிகழ்ந்தனவா லாவிப்
பொறைதளரும் புன்மாலைப் போழ்து." இதுவுமது.

சு-வது. விரைவுயர்வுநவிற்சி.

இது காரணவுணர்ச்சி மாத்திரத்திலே காரிய முண்டாதல்.

உ-ம். "அருளாக்கு நல்லறமுண் டாக்குமின்புண் டாக்குந்
தெருளாக்கு மென்றுளங்கொள் செம்மல்—பொருளாக்கற்
கேழையான் செல்வ னெனப்புகலா நிற்பவிர
லாழிவளை யாயிற் றவட்கு."

இதில், பிரிவுணர்ச்சியினாலேதானே நாயகியின் வாட்டமாகிய காரிய மோதிரம் வளையாயிற் றென்பதி னால் விளங்கிற்று. காரியம் பிறத்தல் விஷயம்.

எ-வது. மிகையுயர்வுநவிற்சி.

இது காரியத்தைமுன்னுங் காரணத்தைப்பின்னு நிகழ்வனவாகச் சொல்லுதல்.

உ-ம். "வணங்கியிறை யின்சொல் வழங்குமுனம் பேதைக்
குணங்கூட னீங்கிற் றுளத்து."

இதில், காரணகாரியங்களின் முன்பின் னிகழ்த லாகிய முறையில், முறைபிறழ் வாரோபிக்கப்பட்டது. இறுதிக்கண்ணின்ற மூன்றலங்காரங்களுங் காரியவிரை வைச் சொல்வனவாம்.

## ய௪. ஒப்புமைக்கூட்டம்.

இது வர்ணியங்களாகிய பல பொருள்களையாயினும் அவர்ணியங்களாகிய பல பொருள்களையாயினும் பொது வாகிய வொருதருமத்தின் முடித்தலாம். இதனை வடநூ லார் துல்லியயோகிதாலங்காரமென்பர்.

க-வது. புனைவுளியோப்புமைக்கூட்டம்.

உ-ம். "மாமதிதோன் றக்கணவர்த் தீர்ந்தமட வார்முகமுந்
தாமரைப்பூ வுஞ்சேர்ந்த ன."

இதில், சந்திரோதயவர்ணனையிற் சேர்ந்த தாமரைக்கும் பிரிவுற்றமாதர் முகங்களுக்கும் வாடுதலாகிய வொருதருமத்தின் முடிவுசெய்தது காண்க.

உ-வது. புனைவிலியொப்புமைக்கூட்டம்.

உ-ம். "தீதில் கழைச்சாறுந் தெள்ளமுத முங்கசக்குங்
கோதையிவள் சொல்லுணர்ந் தார்க் கு."

இதில், வசனமாதுரிய வர்ணனையில் அவர்ணியங்களாகிய கழைச்சாறு முதலியவைகளுக்குக் கசப்பாகிய வொருகுணத்திமேல முடிவுசெய்தது காண்க.

அன்றியு முறவினரிடத்தும் பகையினரிடத்துஞ் சமனுகநடந்ததாகச் சொல்லுதலு மோரொப்புமைக்கூட்டம்.

உ-ம். "வீரமிகு மன்னனிவன் விட்டார்க்கு நட்டார்க்குந்
தாரணியி னுக்கினனந் தல்."

இதில், நட்டவர்க்குநந்தல் ஆக்கம். விட்டவர்க்குநந்தல் கேடு.

உ-ம். "விரும்பி வளர்ப்போர்க்கும் வெட்டுதல்செய் வோர்க்குந்
தரும்வேம்பு வெங்கசப்பைத் தான்." எனவரும்.

இன்னும் உயர்வாகிய பொருள்களோடு கூட்டிச் சொல்வதுமது.

உ-ம். "ஈகுநர்கள் கற்பகமு மின்கதிர்ச்சிந் தாமணியு
மேகமுமன் னனீயு மே." எனவரும்.

யரு. விளக்கணி.

இது வர்ணியங்களு மவர்ணியங்களு மொருதருமத்தின் முடிதலாம். இதனை வடநூலார் தீபகாலங்காரமென்பர்.

உ-ம். "ஆதபத்தாற் சூரிய னும்பிரதா பத்தினன்
மேதகுவேந் தும்விளங்கு மே."

இதில், சூரியனும் வேந்தனும் விளங்குதலாகிய வொருதருமத்தின் முடிந்தன.

யசு. பின்வருவிளக்கணி.

இது முன்வாக்கியத்தில்வந்த விளக்கச்சொல்லேனும் பொருளேனுஞ் சொல்லும் பொருளுமேனும் பின்வாக்

யங்களிலும் வருதலாம். இதனை வடநூலார் ஆவர்த்தி தீபகாலங்காரமென்பர்.

க-வது. சொற்பின்வருவிளக்கு.

உ-ம். "மாரனழுங் கம்பெய்யு மான்கணழுங் கம்பெய்யும்
வீரனின்று வாரா விடின்."

உ-வது. பொருட்பின்வருவிளக்கு.

உ-ம். "அவிழ்ந்தன தோன்றி யலர்ந்தன காயா
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை—மகிழ்ந்திதழ்
விண்டன கொன்றை விரிந்த கருவிளை
கொண்டனசெங் காந்தள் குலை."

ஙு-வது. சொற்பொருட் பின்வருவிளக்கு.

உ-ம். "மகிழ்ந்த நெடுஞ்சா தகமகிழ்ந்த தோகை
புகழ்ந்திகொர் வானெழுந்த போது."

௰எ. தொடர்முழு துவமையணி.

இது இரண்டுவாக்கியங்களிலுஞ் சாதாரண தாமந் தைச்சொல்லுதலாம். இதனை வடநூலார் பிரதிவஸ்தூபமா லங்காரமென்பர். அது இருவகைப்படும்.

க-வது. நிகர்தொடர்முழுதுவமை.

உ-ம். "தாபத்தி லைவிளங்கும் வெய்யோன் றராபதிசீர்
சாபத்தி லேவிளங்குந் தான்."

உ-வது. மாறன்டொடர்முழுதுவமை.

உ-ம். "கற்றோ னருமை கற்றோனே யறியும் வந்திமகப்
பெற்றோ ளருமை யறியாள்."

இதில், கற்றோனே யறியுமென்றதற்கு, மலடி யறியாளென்பதாற்றோன்றும் பெற்றவளேயறிவாளென்ப துபமானமாம்.

பொருட்பின்வருவிளக்கிற்கு மிதற்கும் வேற் றுமை—அதில், வர்ணியங்களாவது அவர்ணியங்களாவது சொல்லப்படும். இதில், அவ்விரண்டுஞ் சொல்லப்படும்.

௰அ. எடுத்துக்காட்டுவமையணி.

இது பிம்பப் பிரதிபிம்ப பாவத்தைக் காட்டுதலாம். பிம்பப்பிரதிபிம்பபாவமாவது சுபாவத்திலே பின்னங்களா

யிருந்தாலு மொன்றற்கொன் றுண்டாகிய வொப்புமை யினால் அபின்னங்களாகிய வுபமானோபமேயங்களுடைய தருமங்களை யிரண்டு வாக்கியங்களிலே தனித்தனி சொல் லுதலாம். இதனை வடநூலார் திர்ஷ்டாந்தாலங்காரமென்பர். அது இருவகைப்படும். அவற்றுள்,

க-வது. நிகரெடுத்துக்காட்டுவமை.

உ-ம். "அண்ணனீ யேகீர்த்தி மானம் புலிதானே
வண்ணவுல கிற்காந்தி மான்."

இதில், கீர்த்திக்குங் காந்திக்கும் பிம்பப்பிரதி பிம்ப பாவஞ்சொல்லப்பட்டது.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு." இதுவுமது.

உ-வது. முரணெடுத்துக்காட்டுவமை.

உ-ம். "மன்னவநின் னெஞ்சிற் சினந்தோன்ற மாநிலத்தி
லொன்னலர்தங் கூட்ட மொழிந்ததாற்—பன்னி
னெதனளவும் வெய்யோ னுதயவெற்பெய் தானே
வதனளவு மேவுமே யல்."

இதில், தோன்ற வொழிந்த தென்றதற்கு எய் தானே மேவும் என்னும் பகைப்பொருளாற் றோன்று கின்ற அடைந்தா லிருணீங்கு மென்பதொப்பாதல்காண்க.

௰௬. காட்சியணி.

இதனை வடநூலார் நிதர்சனாலங்காரமென்பர். அது மூன்றுவகைப்படும். அவற்றுள்,

க-வது. வாக்கியப்பொருட்காட்சி.

இது இரண்டு வாக்கியார்த்தங்களுக்கு ஐக்கி யத்தை யாரோபித்தல்.

உ-ம். "முறைகெழுவள் ளற்கு முனிவின்மை திங்கட்
கறைகளங்க மில்லாமை யாம்."

இதில், கோபமில்லாமையிற் களங்கமில்லாமை யாரோபிக்கப்பட்டது.

உ-வது. பதப்பொருட்காட்சி.

இது உபமானோபமேயங்களு ளொன்றி லொன்றனது தருமத்தை யாரோபித்தல்.

உ-ம். "குவளை மலரழகைக் கொண்டனசீ ரார்ந்து
கவினுமிளந் தோகாய்நின் கண்." எனவும்,

"மருத்தகுகோ தாய்நின் வதனத் தொளியைத்
தரித்துளதா லொண்சீர்ச் சசி." எனவும்,

வரு மிவற்றுள் முறையே உபமேயத்திலுபமான தருமமும், உபமானத்திலுபமேயதருமமு மாரோபிக்கப் பட்டன.

ஙு-வது. பொருட்காட்சி.

இது தன்செய்கையினு னற்பொருளையாயினுந் தீப்பொருளையாயினுந் தெரிவித்தல்.

உ-ம். "ஆதவனற் செல்வந் தனக்குப் பலனடுத்தோர்க்
கீத லெனல்விளக்கா நின்றெழீஇத்—தாதொடுதேன்
மல்கு கமல மலர்க்கொருதன் காந்திவள
நல்குகின்றான் பேருலகி னன்கு." இது நற்பொருட்காட்சி.

"அற்பனுயர் வாமிடத்தை யண்மினுங்கீழ் வீழ்வதலா
னிற்பதிலை யென்னு நெறிவிளக்கி—வெற்பின்
சிகரமுறு நீர்த்திவலை தென்றலிற்றாக் குண்டு
மிகநடுங்கிக் கீழே விழும்." இது தீப்பொருட்காட்சி.

"வெண்மதிதோன் றத்திமிரம் வேந்தன் பகையழித
லுண்மையெனல் காட்டிற் றொழிந்து." இதுவுமது.

வேந்தன் சந்திரனுக்கு மரசனுக்குஞ்சிலேடை.

உல. வேற்றுமையணி.

இது உபமானோபமேயங்களில் யாதேனு மொன்றை விசேடமுடைத்தாகச் சொல்லுதலாம். இதனை வடநூலார் வியதிரேகாலங்காரமென்பர்.

உ-ம். "மலிதேரான் கச்சியு மாக்கடலுந் தம்மு
ளொலியும் பெருமையு மொக்கு—மலிதேரான்
கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ வெல்லாம் படும்."

இதில், உபமேயமாகிய கச்சிக்கு அதிகஞ்சொல் லப்பட்டது.

"நறைமலர்த்தார்க் கூந்தலுடை நாரி முகமு
நிறைமதியு நேரொக்கு மேனு—முறைதெரியின்
மாலிருளை யாக்கு மடந்தைமுகம் பூதலத்தின்
மாலிருளைப் போக்கு மதி."

இதில்,உபமானமாகிய மதிக்கு மாலிருள்போக்குதல் அதிகமாகச் சொல்லப்பட்டது. மால் மயக்கமும் பெருமையும்.

## உக. உடனிகழ்ச்சியணி.

இது கற்றோரை மகிழ்விக்கு முடனிகழ்தலைச்சொல் லுதலாம். இதனை வடநூலார் சகோக்தியாலங்காரமென்பர். தண்டியாசிரியர் புணர்நிலையென்பர்.

உ-ம். "இகந்த பகைவ ரினத்தொடுவேல் வேந்தே
திகந்த மடைந்ததுநின் சீர்." எனவரும்.

இதற்கு ஒடு ஓடு என்னு மூன்றும்வேற்றுமை யுருபுவரும்.

## உஉ. இன்மைநவிற்சியணி.

இது யாதேனுமொன்றனில்லாமையால் வர்ணியத்தை யுயர்வடைவதாகவேனுந் தாழ்வடைவதாகவேனுஞ்சொல் லுதலாம். இதனை வடநூலார் விநோக்தியலங்காரமென்பர்.

உ-ம். "மறங்கொள் கொடியோரி லாமையினெம் மன்று
சிறந்துளதுன் பேரவைசீர் சேர்ந்து."

இதில்,தீயரில்லாமையாற் சபைக்குயர்வு சொல் லப்பட்டது.

"புகழ்க்குரியன் கற்றோ னெனினும் புவியி
லிகழ்க்குரியன் சாந்தமில னேல்."

இதில், சாந்தமில்லாமையாற் கற்றோனுக்குத் தாழ்வு சொல்லப்பட்டது.

## உ௩. சுருங்கச்சொல்லலணி.

இது அடைமொழி யொப்புமையாற்றலால் அல்பொருட்செய்தி தோன்றப் புகழ் பொருட் செய்தியைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் சமாசோக்தியலங்கார மென்பர்.

உ-ம். "இந்தக் கன்னி மதிமுழுநோக்கெய்திச் செவ்வாய் வலியடை
சந்தச் சிங்கந் தனையடுத்த தக்க வரவின் வலிசார்ந்து [ந்து
முந்தைக்கொடிமீ னத்தலைவன் முனிவ ராகும் பகைவெல்லக்
கந்தப் பகழி பலவேழக் கருப்புச் சிலையிற் றொடுத்தனனால்."

இதில், வர்ணிக்கப்படுகின்ற மன்மத விர்த்தாந்தத்தில் அவர்ணியமாகிய கோசாரபலம் பார்த்துப் போர்க்குச் செல்லுமரசர் விர்த்தாந்தந் தோன்றிற்று. இது சிலேடை விசேஷணம்.

"கொந்தார் குழல்சரியக் கோல முகம்வியர்ப்பச்
சந்தார் திதலைத் தனமசையப்—பந்தேநீ
சிற்றிடையா ளார்வமொடு தீண்டிவிளை யாடுதற்கு
நற்றவமென் செய்தாய் நவில்."

இதில், பந்தின் சமாசாரம் வர்ணிக்கப்பட்டுக் கொண்டிருக்க விபரீதப்புணர்ச்சியி லிச்சையுடைய நாயகி சமாசாரந் தோன்றிற்று. இது பொதுவடை.

## உ௪. கருத்துடையடையணி.

இது அபிப்பிராயத்தோடு கூடியவிசேஷணத்தைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் பரிகராலங்காரமென்பர்.

உ-ம். "திங்கண் முடிசேர் சிவனுமது தாபத்தை
யிங்ககற்றி யாள்க வினிது."

இதில், திங்கண்முடிசேர் என்னு மடைமொழி தாபத்தை நீக்கவல்லனென்னுங் கருத்தை யுட்கொண்டிருக்கின்றது.

"நெடுங்கோலச் சென்னிமிசை நீர்கொளர னேகங்
கொடுங்காமத் தீயையவிக் கும்." இதுவுமது.

"வாளான் மகவரிந் தூட்டவல் லேனல்லன் மாதுசொன்ன
சூளா விளமை துறக்கவல் லேனல்லன் றொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்ல னினிச்சென்
றாளாவ தெப்படி யோதிருக் காளத்தி யப்பனுக்கே."

இதில், விசேஷணம் வாக்கியரூபமாயிருக்கின்றன. சிறுத்தொண்டருமல்லேன் திருநீலகண்டருமல்லேன் கண்ணப்பருமல்லே னென்பதாம்.

## உரு. கருத்துடையடைகோளியணி.

இது அபிப்பிராயத்தோடு கூடிய விசேஷியத்தைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் பரிகராங்குராலங்கார மென்பர்.

உ-ம், "முக்கணே யன்புடையார் மும்மலநீங் கப்பார்க்கத்
தக்கவனென் றென்னெஞ்சே சார்."

இதில், முக்கணனென்னும் விசேஷியம் ஆணவ முதலிய மும்மலங்களையு நீக்கவல்லனென்னுங் கருத்தை யுட்கொண்டிருக்கின்றது.

"சேர்த்த நின்புகழ் கூறற்குச் சேடனு மெழுதற் கந்தக்
கார்த்தவீ ரியனும் வேந்துங் கரிசறு நலத்தி னோடு
பார்த்திடற் கமரர் கோனும் வல்லரல் லதுபாண் வண்ட
ரார்த்திடு தாரோ யேனோர்க் காவது தானென் றுண்டோ."

இதில், விசேஷியங்கள் வாக்கியரூபகமாகவந்தன.

## உசா. பல்பொருட்சொற்றொடரணி.

இது பலபொருள்களைத் தருதற்குரிய சொற்களைப் புணர்த்துக் கூறுதலாம். இதனை வடநூலார் சிலேஷாலங் காரமென்பர். அது மூன்று வகைப்படும். அவற்றுள்,

### க-வது. புனைவுளிப்பல்பொருட்சொற்றொடர்.

உ-ம். "மணிமுடிமேற் கொண்டுலகை மாட்சிபெறத் தாங்கி
யணிநற் பொறிநிறஞ்சேர்ந் தாரும்—பணியிறைமை
மிக்கபுகழ் நீளரியே மேவுகூ வத்திறைக்குத்
தக்கவில்லிற் சேர்நாரி தான்."

இது திருமாலுக்கு மனத்தனுக்குஞ் சிலேடை. அவ்விரண்டும் வர்ணியங்களாம்.

உ-வது. புனைவிலிப்பல்பொருட்சொற்றொடர்.

உ-ம். "தெருட்டுங் கலைபலவுஞ் சேர்ந்த மதியை
மருட்டு முகத்தினளம் மான்."

இது சந்திரனுக்கும் புத்திக்குஞ் சிலேடை. இவ்விரண்டு மவர்ணியம்.

ரு-வது. இருமைப்பல்பொருட்சொற்றொடர்.

உ-ம். "ஏர்க்கதிர் வாள்கொடே யீர்வர் வீக்கிமெய்
வேர்க்கவங் கெடுத்துராய் வீழ்த்தி யெற்றுவர்
சூர்க்கரும் பகட்டினுற் றுவைப்பித் தார்ப்பராற்
போர்க்களம் புகுந்துபோர் புரிந்த மள்ளரே."

இதில், நெற்போர்படுத்தல் வர்ணியம். அமர் செய்த லவர்ணியம்.

உஎ. புனைவிலிபுகழ்ச்சியணி.

இது அவர்ணியத்தை வர்ணிக்க வதனது சம்பந்தத்தால் வர்ணியந்தோன்றுதலாம். இதனை வடநூலார் அப்பிரஸ்துதபிரசம்சாலங்காரமென்பர். அது ஐந்துவகைப் படும். அவற்றுள்,

க-வது. ஒப்புமைப்புனைவிலிபுகழ்ச்சி.

இது அவர்ணியத்தினொப்புமையின் சம்பந்தத்தினால் வர்ணியந்தோன்றுதல்.

உ-ம். "மேதகுசீர்க் காரையன்றி வேறொன்றையுமிரவாச்
சாதகமே புள்ளிற் றலை."

இங்கே யவர்ணியமாகிய சாதகப்புள் வர்ணனையில் அதற்கொப்பாகிய வொருமன்னனைச்சேர்ந்து பிறரை யாசியாத மானியின் செய்தியாகிய வர்ணியந்தோன்றிற்று.

உ-வது. பொதுப்புனைவிலிபுகழ்ச்சி.

இது அவர்ணியமாகிய பொதுப் பொருளால் வர்ணியமாகிய சிறப்புப்பொருடோன்றுதல்.

உ-ம். "மைந்தகேள் கல்வி வளமுணரா மாந்தரெலா
மந்தகரே யாவ ரவர்வடிவிற்—சந்தந்
தவழ்திரைக ளார்த்தெழூஉந் தண்கடல்சூழ் வையத்
தவிழ்முருக்கம் பூவினிற மாம்."

இதில், தந்தை விளையாட்டுச் சிந்தையையுடைய மைந்தற் கறிவுகொளுத்தலாகிய சிறப்புப்பொருடோன் றப் பொதுப்பொருள் சொல்லப்பட்டது.

## ௩-வது. சிறப்புப்புனைவிலிபுகழ்ச்சி.

இது அவர்ணியமாகிய சிறப்புப்பொருளால் வர்ணியமாகிய பொதுப்பொருடோன்றுதல்.

உ-ம். "மன்னு மிருகமதைத் தாங்கு மதிகளங்க
னென்னும் பெயர்கொண் டிழிவுற்றான்—பன்மிருகக்
கூட்டங்கொல் சீயமிடல் கொண்மிருக ராசனெனப்
பீட்டினொடு கொண்டதொரு பேர்."

இதில், கொடியவன் புகழுடைவான், மெல்லியன் புகழுடையானென்கிற பொதுப்பொருடோன்றச் சிறப்புப் பொருள் சொல்லப்பட்டது.

## ௪-வது. காரணப்புனைவிலிபுகழ்ச்சி.

இது அவர்ணியமாகிய காரணத்தால் வர்ணிய மாகிய காரியந்தோன்றுதல்.

உ-ம். "ஒழுகொளி விரிந்த கதிர்மணி வண்ண
னுந்தியந் தாமரை வந்தோன்
முழுமதிக் கலையு ணிறைந்தபே ரழகை
மொண்டுகொண் டரிபரந் தகன்ற
மழைமதர் நெடுங்கட் டமையந்தி வதனம் வகுத்தனன்."

இதில், காரணமாகச் சொல்லப்பட்ட சந்திர சாரத்தினுல் உயர்வுடைய முகத்தழகாகிய காரியந் தோன் றிற்று.

## ௫-வது. காரியப்புனைவிலிபுகழ்ச்சி.

இது அவர்ணியமாகிய காரியத்தால் வர்ணிய மாகிய காரணந்தோன்றுதல்.

உ-ம். "மருக்கமழ்பூங் கோதை மடநடையைக் காணிற்
செருக்கடையா தன்னத் திரள்."

இதில், செருக்கடையாமையாகிய காரியத்தினாலே மெல்லிய நடையழகாகிய காரணந்தோன்றிற்று.

## உஅ. புனைவுளிவிளைவணி.

இது சொல்லப்பட்ட வொருவர்ணியத்தினாற் சம்மதமாகிய மற்றொரு வர்ணியந் தோன்றுதலாம். இதனை வடநூலார் பிரஸ்துதாங்குராலங்காரமென்பர்.

உ-ம். "அம்புயநற் போதிருப்ப வஞ்சிறைவண் டேகொடுமுட்
பம்புகைதை யாலென் பயன்."

இதில், தடாகக்கரையில் தலைவனுடன் விளையாடுந் தலைவிசொல்லிய வர்ணியமாகிய வண்டின் சமாசாரத்தினன் மனோகரமாகியவவளை விட்டு அச்சமுறுத்தும்பரத்தைபாற்செல்லுந் தலைவனிந்தையாகிய மற்றொரு வர்ணியந் தோன்றிற்று.

## உகூ. பிறிதினவிற்சியணி.

இதனை வடநூலார் பரியாயோக்தாலங்காரமென்பர். அது இரண்டுவகைப்படும். அவற்றுள்,

### க-வது. கருதியபொருளையதற்குரியவிதத்தாற்கூறாது மற்றொருவிதத்தாற்கூறுதல்.

உ-ம். "இராகு மனைவிமுலைக் கில்பயனைச் செய்தோற்
பராவுகநீ நெஞ்சே பணிந்து."

இதில், வாசுதேவனை யிராகுவை வென்றவனென்னாது அப்பொரு டோன்றப் பிறிதோராற்றாற் கூறினர்.

### உ-வது. கபடத்தினாலேதன்னாலிச்சிக்கப்பட்டதைச்சாதித்தல்.

உ-ம். "மின்னிகரா மாதே விரைச்சாந் துடன்புணர்ந்து
நின்னிகரா மாதவிக்க ணின்றருணீ—தன்னிகராஞ்
செந்தீ வரமலருஞ் செங்காந்தட் போதுடனே
யிந்தீ வரங்கொணர்வல் யான்."

இதில், தலைவியைத் தலைவனிடத்துவிட்ட தோழி மலர்க்குப்போதலாகிய கபடத்தினு லவ்விருவரு மெண்ணப்படி நடத்தலாகிய தன்னிஷ்டத்தைச் சாதித்தாள்.

## ௩௰. வஞ்சப்புகழ்ச்சியணி.

இதனை வடநூலார் வியாஜஸ்துதியலங்காரமென்பர். அது மூன்றுவகைப்படும். அவற்றுள்,

### க-வது. பழிப்பினுற்புகழ்ச்சிதோன்றல்.

அப்புகழ்ச்சி பழிக்கப்பட்ட பொருட்கே யாகியும, பிறிதொன்றற்காகியும வரும.

உ-ம். "பேசுகொலை யாதிப் பெரும்பா தகர்தமையுந்
தேசுமிகு வானுலகிற் சேர்க்கின்றாய்—வீசுதிரை
பின்னியெழு மோதை பெரிதுறுபா கீரதியே
நின்னறிவென் னென்பே னியான்."

இதில், விவேகமிலலையென்னு நிந்தையாற் பெரியோரைப்போல மகாபாதகரையுஞ் சுவர்க்கமடைவித்தலாகிய மகிமைதோனறிற்று.

"அன்றிலங்கை யெரித்தகுரங் கெங்கெனவி ராவணன்பே
ரவையோர் கேட்ப
நன்றியிலந் திரசித்து வென்பவனூற் பிணிப்புண்டு
நணணி னனிங
கென்றிறைவ னடிபரவும் வானரர்க ளவனைநனி
யிகழ்ந்து மோத
வொன்றியவச சத்தினிரிந் தொளித்தவிட மங்குதன்யா
னுணரே னென்றான."

இதில, அனுமனிநதையான் மற்றைவானரர்களுக்குப புகழ்ச்சிதோன்றிற்று.

### உ-வது. புகழ்ச்சியாற்பழிப்புந்தோன்றல்.

இதுவுமப்பொருட்கேயாகியு மற்றொருபொருட்காகியும் வரும.

உ-ம். "எற்காகத் தூதர சன்புடை யேகி யிளங்கொடிநீ
யற்கா ரளகங் குலையமெய் வேர்வை யரும்பவந்தோ
பற்கா யமுநகத் தூறு நனியுறப் பட்டுகொந்தாய்
நிற்கா முறைசெய்கை மாறுமுண் டோவிந்த நீணிலத்தே."

இதில், நொந்தாயென்னும் புகழ்ச்சியாலெனக் காகவன்று நீ புணர்தற்குப் போயினையென்னு நிந்தை தோன்றிற்று.

"இரவறியா யாவரையும் பின்செல்லா நல்ல
தருநிழலுந் தண்ணீரும் புல்லு—மொருவர்
படைத்தனவுங் கொள்ளாவிப் புள்ளிமான் பார்மேற்
றுடைத்தனவே யன்றோ துயர்."

இதில், மான்புகழ்ச்சியா லரசன் சேவையில் வருந்திய தன்னிந்தை தோன்றிற்று.

௬௰வது. புகழ்ச்சியாற்புகழ்ச்சிதோன்றல்.

உ-ம் "சீரார்ந் திலகுசிறைச் செந்தார்ப் பசுங்கிள்ளை
வாரார் முலையாய்நின் வாயிதழ்க்கு—நேராகுங்
கொவ்வைக் கனிநுகர்தற் குத்தவமென் செய்ததோ
செவ்வைத் திறத்திற் றெரிநது."

இதில், கிள்ளைப்புகழ்சசியால் வாயிதழினழகு தோன்றிற்று.

௬௧. வஞ்சப்பழிப்பணி.

இது நிந்தையினுனிநதை தோன்றுதலாம். இதனை வடநூலார் வியாஜநிந்தாலங்காரமென்பர்.

உ-ம். "நீயுந் தவறிலை நின்னைப் புறங்கடைப்
போதர விட்டது மருந்த வறிலர்
நிறையழி கொல்யானை நீர்கருவிட் டாங்கு
பறையறைந் தல்லது செல்லற்க வென்னு
விறையே தவறுடை யான்."

இதில், இறைவனிநதையாற் றீச்செய்கையுடைய மற்றொருவர் நிநதைதோன்றிற்று.

௬௨. எதிர்மறையணி.

இது ஒழிப்பணிக்கு வேறாகியுங் கேட்போரை மகிழ் விப்பதாகியு மிருக்கின்ற மறுப்பைச் சொல்லுதலாம. இதனை வடநூலார் ஆக்ஷேபாலங்காரமென்பர். அது மூவகைப்படும். அவற்றுள்,

க-வது. தன்னாற்சொல்லப்பட்ட பொருளை யொருநிமித்தத்தினன் மறுத்தல்.

உ-ம். "ஒண்கதிர்த்திங் காணீ யுன்வடிவை யிங்கெமக்குக்
கண்களிகூ ரக்கடிது காட்டிடுவாய்—வண்கவின்கூர்
பூண்டாங்கு கொங்கையுடைப் பூவைமுக முண்டதனால்
வேண்டாம்போ வெற்றுக்கு வீண்"

இதில், தான்விரும்பிய சந்திர தரிசனத்தை முகமிருக்கையால் வீணென்று மறுத்தது காண்க.

உ-வது. மறுப்புத்தான்றன்னுண்டு மற்றொருபொருளைத் தோன்றச்செய்தல்.

உ-ம். "தண்ணுரு வுண்டளிசூழ் தாமமணி திண்டிறற்றோ
ளண்ணலே யான்றூதி யல்லேன்காண்—வண்ணமிகு
வேயெனுந்தோ ளான்மெய் விரகதா பம்வடவைத்
தீயெனவே தோன்றுஞ் செறிந்து."

இதில், அல்லேனென்னுமறை தன்னுண்டு கூட்டுதற்குத்தக்க வஞ்சச்சொல்லை நீக்கி யுண்மைகூறுவோர் தன்மையைக்காட்டிக்கொண்டு விரைந்து வந்து அவளைக் காப்பாற்றென்னு மற்றொருபொருளைத் தோற்றிற்று.

ங-வது. உடம்பாட்டுச்சொல்லான்மறுப்பைக்காட்டுதல்.

உ-ம். "விளைபொருண்மே லண்ணல் விருப்புளையே லீண்டங்
கிளையழுகை கேட்பதற்கு முன்னே—விளைதேன்
புடையூறு பூந்தார்ப் புனைகழலாய் போக்குக்
கிடையூறு வாராம லேகு."

இதில், ஏகு என்னு முடன்பாட்டுச்சொல்லாற் போகேலென்னுமறுப்பு சுற்றத்தழுகையாற் குறிக்கப்பட்ட தலைவி யிறக்கு மென்பதைக்கொண்டு காட்டப்பட்டது.

## ஙங. முரண்விளைந்தழிவணி.

இது ஓரிடத்துள்ளனவுங் காரியகாரணங்க ளாகாதனவுமாகிய விரண்டு தருமங்களுக்கு மேன்மேலுந்தோன்றி யழியும் பகைமையைச்சொல்லுதலாம். இதனை வடநூலார் விரோதாபாசாலங்காரமென்பர்.

உ-ம். "சந்தமில வாயுறினுஞ் சந்த முடையனவே
கொந்தவிழ்தார்ப் பாவை குயம்."

இதில், சந்தமில்லனவற்றைச் சந்தமுடையன வேயா மென்னும் பகைமை அழகுடையன வென்னும் பொருளாலழிந்தது.

## ௩௪. பிறிதாராய்ச்சியணி.

இதனை வடநூலார் விபாவனாலங்காரமென்பர். அது அறுவகைப்படும். அவற்றுள்,

க-வது. உலகறிகாரணமில்லாதிருப்பக்காரியம்பிறத்தலைச் சொல்லுதல்.

இதுவே பொதுவிதியுமாம்.

உ-ம். "கடையாமே கூர்த்த கருநெடுங்கண் பேடிப்
படையாமே யேய்ந்தனம் பாவாய்—கடைஞெமிய
கோட்டாமே கோடும் புருவங் குலிகச்சே
ரூட்டாமே சேந்த வடி."

இதில், கடைதன்முதலிய பிரசித்தகாரணமில்லாமற் கூர்மையாதன்முதலிய காரியஞ் சொல்லப்பட்டன. இவற்றிற்கு இயல்பென்னும் பிறிதோர்காரண மாராய்ந்து கொள்ளப்பட்டது.

உ-வது. காரணத்தினது தருமமாவது சம்பந்தமாவது குறைவாக விருப்பக்காரியம்பிறத்தலைச்சொல்லுதல்.

உ-ம். "திண்மையுங் கூர்மையு மில்லாக் கணைகளைச் சிந்துபுவன்
கண்மையின் மூவுல கங்களும் வென்றவக் காமனிக
லுண்மை யுணர்ந்து மொருநீ மறந்திடி னுண்டொடிதன்
பெண்மையென் பாடு படும்பக லாயெம் பெருந்தகையே."

இதில், வெல்லுதற்கேதுவாகிய வம்பிலே திண்மையுங் கூர்மையுங் குறைவாம்.

௩-வது. காரியம்பிறத்தற்குத்தடையுளதாகவுமதுபிறத்தலைச் சொல்லுதல்.

உ-ம். "அடுத்த நின்பிர தாப வருக்கனீ
ருடுத்த பார்மிசை மன்னவ வொண்குடை
விடுத்த வேந்தரை விட்டு விடாதுமே
லெடுத்த வேந்த ரினத்தைக் கனற்றுமே."

இதில், பிரதிபந்தகமான குடையிருப்பவுஞ்சுடுத லாகிய காரியம் பிறந்தது.

ச-வது. காரணமல்லாதமற்றென்றற்காரியம்பிறத்தலைச் சொல்லுதல்.

உ-ம். "வழுவாத மானிவள்பால் வண்சங்கி னின்று
மெழுமோசல் யாழி னிசை."

ரு-வது. பகையாகியகாரணத்தினின்றுங்காரியம் பிறத்தலைச் சொல்லுதல்.

உ-ம். "சீர்தரு சோமன் பொழிசீ தளக்கதிர்கள்
சோர்தரவெம் மாதைச் சுடும்."

சு-வது. காரியத்தினின்றுங்காரணம்பிறத்தலைச்சொல்லுதல்.

உ-ம். "மற்பெறுவள் ளாலுதித்த தேர்பெறுநின் வண்மையெனுங்
கற்பகத்திற் சீர்ப்பாற் கடல்."

இதில், சீர்ப்பாற்கடல் கீர்த்தியாகிய பாற்கடல்.

## ௯௫. காரணவாராய்ச்சியணி

இது குறைவில்லாத காரணமிருந்துங் காரியம் பிறவாமையைச்சொல்லுதலாம். இதனை வடநூலார் விசேஷோக்தியலங்காரமென்பர்.

உ-ம். "இறைமதனுந் தீப மெரிவுறு நின்றுங்
குறைவிலது நேயமென்றோ கூறு."

இதில், விளக்காகிய காரணமிருந்தும் நேயநாசமாகிய காரியம்பிறவாமைகாண்க. நேயமென்பது தயிலமு மநுராகமுமாம்.

## ௯௬. கூடாமையணி.

இது ஒருகாரியம் பிறத்தலையருமை யுடைத்தாகச் சொல்லுதலாம். இதனை வடநூலார் அசம்பவாலங்கார மென்பர்.

உ-ம். "அடுக்கலையோர் கையினு லாயச் சிறுவ
னெடுக்குமென யாரறிவா ரிங்கு."

இதில், இடைக்குலச்சிறுவனுக்கு மலையெடுத்த லாகிய காரியமரிதாகச்சொல்லப்பட்டது. கோவர்த்தன

கிரியைக்குடையாக வெடுத்த கண்ணனை நோக்கி யிந்திர னிவ்வாறு கூறினன்.

## ௬௭. தொடர்பின்மையணி.

இதனை வடநூலார் அசங்கதியலங்காரமென்பர். அது மூன்றுவகைப்படும். அவற்றுள்,

க-வது. காரணமோரிடத்திருப்பக்காரியமற்றோரிடத்துப் பிறத்தலைச் சொல்லுதல்.

உ-ம். "வேறொரு மாதர்மேல் வேந்த னகநுதியா
லூறுதர விம்மா துயிர்வாடு—கூறி
னிருவரே மெய்வடிவி னேந்திழை நல்லா
ரொருவரே தம்மி லுயிர்."

இதில், ஊறுசெய்தலாகிய காரணமோரிடத் திருப்பவாடுதலாகிய மோரிடத்துப்பிறந்தது.

"தீயனென்னும் பாம்பு செவியிலொரு வற்கௌவ
மாயுமே மற்றொருவன்." இதுவுமது.

உ-வது. ஓரிடத்திற்செய்தற்குரியதைமற்றோரிடத்திற்செய்தல்.

உ-ம். "கங்கணங்கண் ணிற்றிலகங் கையிற் றரித்தனர்சீர்
தங்கிறையொன் னார்மடவார் தாம்."

இதில், கங்கணம்-கடகமு நீர்த்துளியுமாம். திலகம்-திலோதகமும் பொட்டுமாம்.

௩-வது. ஒன்றைச்செயத்தொடங்கி அதற்குப்பகையாகிய மற்றொன்றைச்செய்தல்

உ-ம். "கண்ணன் மயலகற்றக் காமருருக் கொண்டதனாற்
பண்ணுமயன் மாதர் பலர்க்கு."

## ௬௮. தகுதியின்மையணி.

இதனை வடநூலார் விஷமாலங்காரமென்பர். அது மூன்றுவகைப்படும். அவற்றுள்,

க-வது. பொருந்துதற்குத்தகுதியில்லாத பொருள்களுக்குப் பொருத்தத்தைச்சொல்லுதல்.

உ-ம். "பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே
யென்பேதை செல்லற் கிசைந்தனளே—மின்போலு
மானவேன் முட்டைக்கு மாறுய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு."

இதில், பேதையது மெல்லியவுருவத்திற்கும் பாலைநில வெப்பத்திற்கும் பொருத்தஞ்சொல்லப்பட்டது.

உ-வது. ஒரு காரணத்திற்பகைக்குணமுடைய காரியம் பிறத்தலைச் சொல்லுதல்.

உ-ம். "மருவெறுழ்நங் கோன்கரிய வாள்வெண் புகழைத்
தருமா லுலகந் தனில்."

௩-வது. ஒருகாரியத்தைச் செயத்தொடங்கி

"எலியுணவிற் றென்றுரகப் பெட்டிகறித் தாயிற்
றொலியரவிற் குத்தா னுணு."

என விஷ்டத்தை யடையா தநிஷ்டத்தையடைதலும்.

"பாவை யலர்க்குடைநீ பற்றுதற்கு வாரிசத்தை
வாவியில்வைத் தன்றோ வளர்க்கின்றாய்—மேவுகலி
யிவ்வுலகு செய்நன்றி யெண்ணாது நின்வதனச்
செவ்வியது வௌவல் செயும்."

என மலர்க்குடையைத்தான் பெறுதலுமது தன்முகவொளியை யபகரித்தலுமாகிய விஷ்டத்தையு மநிஷ்டத்தையுமடைதலும்,

"இலகு மதிகளங்க மேந்திழையாய் நீத்தற்
குலகிலுன தானனமா யுற்றுந்—திலகமென்பேர்
சேர்களங்க மேபெற்றான் பேதையரைச் சேர்ந்தக்கால்
யார்களங்கி யாகா ரறை."

எனக் களங்கமொழித்த லாகிய விஷ்டத்தை யடையாமையுமாகிய விம்மூன்றுவகையானும் வரும்.

௩௩. ததுதியணி.

இதனை வடநூலார் சமாலங்காரமென்பர். அது மூன்று வகைப்படும். அவற்றுள்,

க-வது. ததுதியாகிய விரண்டு பொருள்களுக்குச் சம்பந்தத்தைச் சொல்லுதல்.

உ-ம். "இந்தத் தரளவட மேந்திழைநின் கொங்கைகளிற்
சந்தமுறச் சேர்த றகும்."

உ-வது. காரியத்தை யதன்காரணத்தோடொத்த
செய்கையுள்ளதாகச் சொல்லுதல்.

உ-ம். "கானந் தனிலுதித்தக் கானந் தனையழித்திட்
டீனஞ்செய் தீயி னுதித்தபுகை—தானு
மெழிலி யுருவாகி யீரம்புனலைப் பெய்தத்
தழலை யவித்த தரும்."

௩-வது. விரும்பத்தகாததை யடையாமல்
விரும்பம்பட்டதையே யடைதல்.

உ-ம். 'பொற்கொடிநீ நின்று புரிதவத்தாற் கஞ்சமலர்
சொற்கவினின் றொருவாய்த் தோன்றியே—நற்கதியைச்
சேர்வுற் றனவுலகிற் செய்யதவ நற்கதியைச்
சார்விக்கு மென்பதுமெய் தான்."

இதில, நற்கதிபுண்ணிய லோகமு நல்ல நடையுமாம்.

"நந்தனுறு தீவினைசெய் யேலென்று நான்மறைதே
ரந்தணன்பல் கானன் கறைந்துமவன்—மைந்தனினி
நந்தனுறு தீவினையை நாடோறுஞ் செய்துமொரு
தந்தை யுளைகடவான் றன்."

இதில், எதிர்மறையா லநிஷ்டந்தோன்றினு மக்கினிகாரியமென்னும் பொருளாலிஷ்டமடைதலேயாம்.

"மாதர்சுவர்க் கத்துநசை வைத்தமர்செய் வேந்தடைந்தான்
மாதர்சுவர்க் கத்தினையே மாண்டு."

இதில், அநிஷ்டந்தோன்றினுஞ் சிலேஷையாலிஷ்டமடைதலேயாம்.

## ௪௰. வியப்பணி.

இது ஒருபயனைக் கருதியதற்குப் பகையாகிய முயற்சியைச்செய்தல். இதனை வடநூலார் விசித்திராலங்கார மென்பர்.

உ-ம். "ஓதுந் திறத்தி லுயர்ந்தோர்க டாழ்குவரெப்
போதுமுயர் வெய்தற் பொருட்டு." எனவரும்.

## ௪௧. பெருமையணி.

இதனை வடநூலார் அதிகாலங்காரமென்பர். அது இருவகைப்படும். அவற்றுள்,

க-வது. பெரியவாதாரத்தினு மாதேயத்தைப் பெரிதாகச்சொல்லுதல்.

உ-ம். "உலக முழுதடங்கு மாவிசும்பி லுன்ற
னலகில் குணமடங்கா வாம்."

உ-வது. பெரியவாதேயத்தினு மாதாரத்தைப் பெரிதாகச்சொல்லுதல்.

உ-ம். "மன்சீ ருலகெவ் வளவுபெரு மைத்தளவி
லுன்சீ ரடங்கி யுள."

## ௪௨. சிறுமையணி.

இது அற்பமாகிய வாதேயத்தினுமாதாரத்தை மிகவற்பமாகச்சொல்லுதல். இதனை வடநூலார் அல்பாலலங்காரமென்பர்.

உ-ம். "விரலாழி கைவளையாய் விட்டதினி யார்த்து
வரலாழிக் கென்செயுமெம் மாது." என வரும்.

ஆதாரம் - இடம்.

## ௪௩. ஒன்றற்கொன்றுதவியணி.

இது ஒன்றற்கொன் றுபகரித்தலைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் அந்நியோந்நியாலங்காரமென்பர்.

உ-ம். "திங்களிர வால்விளங்குஞ் செப்புங் கதிர்த்திங்கள்
கங்குலினு லேவிளங்குங் காண்." எனவரும்.

## ௪௪. சிறப்புநிலையணி.

இதனை வடநூலார் விசேஷாலங்காரமென்பர். அது மூன்றுவகைப்படும். அவற்றுள்,

க-வது. பிரசித்தமாகிய வாதாரமில்லாதிருப்ப வாதேயத்தினிருப்பைச் சொல்லுதல்.

உ-ம். "தினகரனில் லாமலவன் செய்ய கதிர்க
ளினிதிலங்குந் தீபத் திருந்து."

உ-வது. ஒருபொருளைப் பலவிடங்களிலிருப்ப தாகச்சொல்லுதல்.

உ-ம். "ஆயிழை நல்லா ளகம்புறமுன் பின்னெங்கு
மேயவெனக் குத்தோன்று மே."

ங-வது. அற்பகாரியஞ் செயத் தொடங்கி யருமையாகிய மற்றொருகாரியமுஞ் செய்தல்.

உ-ம். "மாட்சியினிற் காண்பேற்கு வள்ளலே கற்பகநற்
காட்சியுங்கிட் டிற்றெளிது காண்."

## ௪௫. மற்றதற்காக்கலணி.

இதனை வடநூலார் வியாகாதாலங்காரமென்பர். அது மூவகைப்படும். அவற்றுள்,

க-வது. ஒரு காரியத்தின துலகறி காரணத்தை யொருவனதற்குப் பகையாகிய காரியத்திற்குக் காரணமாக்குதல்.

உ-ம். "உலகைமகிழ் விக்கு முயர்மலர்கொண் டேவே
ளுலகை வருத்து முடன்று."

உ-வது. ஒருவனொருகாரியத்திற்குச் சாதனமாகக்கொண்டபொருளை மற்றொருவனதற்குப் பகையாகிய காரியத்திற்குச் சாதனமாகக் கொள்ளுதல்.

உ-ம். "கண்ணாற் கொலப்பட்ட காமனையிக் காரிகையார்
கண்ணா லுய் விக்கின்றார் காண்."

ங-வது. ஒருகாரியத்தை யுண்டாக்குதற்கொருவராலுட்கொளப்பட்ட பொருளான் மற்றொருவ ரதன் பகைக்காரியத்தை நன்றாகச் சமர்த்தித்தல்.

உ-ம். "உலுத்தன்|மிடிவருமென் றுள்வெருவி நல்கா
னிலத்தென் றொருவ னிகழ்த்த—நலத்திசைகூர்
வள்ளலுமவ் வச்ச மருவியே நல்குமென
விள்ளலுற்றான் மற்றொருவன் மெய்."

## ௪௬. காரணமாலையணி.

இது பின்பின்னாக வருவனவற்றிற்கு முன்முன்னாக வருவனவற்றைக் காரணங்களாகவேனும் காரியங்களாக வேனுஞ்சொல்லுதல்.

உ-ம். "நீதியாற் செல்வ நிகழ்செல்வத் தாற்கொடைமற்
றேறுகொடை யாற்சீ ருள."

இதில், நீதிமுதலியன செல்வமுதலியவற்றிற்குக் காரணமாதல்காண்க.

"படர்நரகம் பாவத்தாற் பாவ மிடியான்
மிடியீ விலாமையினு மே."

இதில், நரகமுதலியன பாவமுதலியவற்றிற்குக் காரியமாதல் காண்க.

## ௪எ. ஒற்றைமணிமாலையணி.

இது பின்பின்னாக வருவனவற்றிற்கு முன்முன்னாக வருவனவற்றை விசேஷியங்களாகவேனும் விசேஷணங்களாகவேனுஞ் சொல்லுதலாம். இதனை வடநூலார் ஏகாவளியலங்காரமென்பர்.

உ-ம். "மன்னிவன்கண் காதளவுங் காதுதோண் மட்டியையுந்
துன்னுறுதோள் சானுத் தொடும்."

இதில், கண்முதலியன விசேஷியம்.

"திறைவெளியு மதிலியங்கு தினகரனு மவன்கதிர்சேர் நிலவு மன்றேன், குறைவில்பிறப் பிடமாய புனலுமத னதுபித்தக் கூறுந் தீயு, மறைநெறியி னதனிலவி வழங்குபுரு டனுமவற்குப் பிராண னாகி, யுறைவளியு மதுகொண்மண முறுநிலனு மாமிறையெட் டுருவுட் கொள்வாம்."

இதில், வெளிமுதலியன விசேஷணம்.

## ௪அ. மாலைவிளக்கணி.

இது தீபகத்தையுமேகாவளியையுஞ் சேர்த்துச்சொல்லுதலாம். இதனை வடநூலார் மாலாதீபகாலங்காரமென்பர்.

உ-ம். "மனைக்கு விளக்க மடவாண் மடவா
டனக்குத் தகைசால் புதல்வர்—மனக்கினிய
காதற் புதல்வர்க்குக் கல்வியே கல்வித்தனக்
கோதிற் புகழ்சா லுணர்வு."

இதில், எல்லா வாக்கியங்களுக்கும் விளக்க மென்னு மொருசொன்முடிபாய் வருதலாற் றீபகவிதியும்,

மடவாண் முதலியவற்றை முன்முன்னாகவரு மனை முதலிய வற்றிற்கு விசேஷியங்களாகச்சொல்லுதலால் ஏகாவளி விதியும் வந்தன.

## ௪௯. மேன்மேலுயர்ச்சியணி.

இது மேன்மேலு மொன்றற்கொன் றுயர்குணத்தா லேனுமிழிகுணத்தாலேனு முயர்வாதலைச்சொல்லுதலாம். இதனை வடநூலார் சாராலங்காரமென்பர்.

உ-ம். "தேன்மதுர மாமதனிற் றெள்ளமுத மேமதுர
மான்சொலதி னும்மதுர மாம்." இது உயர்வு.

"நீரினு நுண்ணிது நெய்யென்பர் நெய்யினும்
யாரு மறிவர் புகைநுட்பந்—தேரி
னிரப்பிடும்பை யாளன் புகுமே புகையும்
புகற்கரிய பூழை நுழைந்து." இது இழிவு.

## ௫0. நிரனிறையணி.

இது வரிசையாகச் சொல்லப்பட்ட பொருள்களுக் குச் சம்பந்தமுள்ளவைகளை யம்முறையே சொல்லுதலாம். இதனை வடநூலார் யதாசங்கியாலங்காரமென்பர்.

உ-ம். "தரியலர்க்குந் தன்னிற் பிரியலர்க்கு மெங்கோன்
றெரிதுன்பு மின்புஞ் செயும்." எனவரும்.

## ௫௧. முறையிற்படர்ச்சியணி.

இது முறையாக வொருபொருள் பலவிடங்களிற் சென்றடைதலையேனு மோரிடத்திற் பலபொருள் சென் றடைதலையேனுஞ் சொல்லுதலாம். இதனை வடநூலார் பரியாயாலங்காரமென்பர்.

உ-ம். "நஞ்சமே நீபண்டை நாளி னதிபதிதன்
னெஞ்சிலிருந் தாங்கதன்பி னீங்கியே—செஞ்சடிலச்
சங்கரனார் கந்தரத்திற் சார்ந்திக் கொடியோன்வாய்
தங்குதியிக் காலந் தனில்." எனவும்,

"முன்னா ளிருவர்க்கும் யாக்கையொன் றாக முயங்கினம்யாம்
பின்னாட் பிரியன் பிரியையென் றாயினம் பேசலுறு
மிந்நாட் கணவன் மனைவியென் றாயின மெண்ணினினிச்
சின்னாளி லெப்படி யோமன்ன நீயிங்கு செப்புகவே." எனவும்
வரும் முறையேகாண்க.

## ௫௨. மாற்றுநிலையணி.

இது இழிவாகிய பொருளைக்கொடுத் துயர்வாகிய பொருளைவாங்குதலைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் பரிவிர்த்தியலங்காரமென்பர்.

உ-ம். "சடாயு கிழவுடம்பைத் தான்கொடுத்துப் பெற்றான்
கெடாததொரு கீர்த்தி யுடம்பு."

## ௫௩. ஒழித்துக்காட்டணி.

இது ஒருபொருளையோரிடத்தில்லையென வொழித்து மற்றோரிடத் துண்டென்று நியமித்தலாம். இதனை வடநூலார் பரிசங்கியாலங்காரமென்பர்.

உ-ம். "சிறைபடுவ புட்குலமே யன்றிநின் றேயத்
திறைவமக் கட்கு ளிலை" எனவரும்.

"சிந்துநிகர் தானையாய்த் தீத்தொழிலைச் செய்வோர்க
ளந்தணரே நின்னாட் டகத்து."

இதில், ஒழிப்புச்சொல்லானது தொக்கு நின்றது.

## ௫௪. உறழ்ச்சியணி.

இது சமானமாகிய வலியையுடைய விரண்டு பக்ஷங்களைக்காட்டி விகற்பித்தலாம். இதனை வடநூலார் விகல்பாலங்காரமென்பர்.

உ-ம். "தலையையே னும்விரைந்தெந் தார்வேந்தர்க் கோர்நின்
சிலையையே னும்வளைத்தல் செய்."

## ௫௫. கூட்டவணி.

இதனை வடநூலார் சமுச்சயாலங்காரமென்பர். அது இரண்டுவகைப்படும். அவற்றுள்,

க-வது. பகையில்லாமையா லொருகாலத்திற் கூடத்தக்க பொருள்களுக்குக் கூட்டத்தைச்சொல்லுதல்.

உ-ம். "நின்சீ ருருவு வெளிப்படுதே ஞேக்கி நோக்க நிலைதளரு
மென்பூ டுருக விளமுலைமேற் புலலு முனிந்தா யெனவருந்து
மன்போ டேட நீர்த்தனன்போ னகைக்கு மகன்று யெனவெளியிற்
பின்போ தருநல் லுணர்விழந்த பித்தர் போலப் பேதுறுமால்."

இதில், நிலைதளர்தல் புல்லல் நகைத்தல் முதலிய கூடின.

உ-வது. பலகாரணங்கள் கூடுதலா லொருகாரியம் பிறத்தல்.

உ-ம். "குலமு முருவுங் குணமுந் திருவு
நலமுமுயர் கல்வி நயமும்—வலமுஞ்
செருக்கைவிளைக் கின்றனவிச் செம்மற்கு நாளுந்
திருக்கறுநன் மாண்பிற் செறிந்து."

## ருசு. வினைமுதல்விளக்கணி.

இது ஒரு கர்த்தாவைச சேர்ந்த முறையுள்ள பல செய்கைகளை முறைபிறழாமற் சொல்லுதலாம். இதனை வடநூலார் காரகதீபகாலங்காரமென்பர்.

உ-ம். "துயில்கின்றான் வாசநீர் தோய்கின்றான் பூசை
பயில்கின்றான் பல்சுவைய வுண்டி—யயில்கின்றான்
காவலனென் றேங்குகடைக் காப்பவராற் றள்ளுணுமிப்
பாவலனைப் பொன்னேகண் பார்." எனவரும்.

## ருஎ. எளிதின்முடிபணி.

இது ஒருவன் செயத்தொடங்கிய காரிய மற்றொரு காரணவுதவியா லெளிதின்முடிதலாம். இதனை வடநூலார் சமாதியலங்காரமென்பர்.

உ-ம். "மதிநுதலாட் கியானூடன் மாற்றத் தொழும்போ
லுதவிமுகில் செய்தன் றொலித்து."

## ருஅ. விறல்கோளணி.

இது வலியுடைய பகையின்மேலாதல் அதனாற்றுணையின்மேலாதல் பராக்கிரமித்தலைச் சொலலுதலாம. இதனை வடநூலார் பிரத்தியநீகாலங்காரமென்பர்.

உ-ம், "வண்டினங்கே ளூட்மெனை வாட்டவிற்சீற் றங்கொடு
கண்டதுதிங் கட்குக் களங்கு." இது பகை. [போய்க
"தாக்குவிழிக் குத்துணையாய்ச் சார்ந்திலங்கு காதைக்கீ
ழாக்கிநின்ற நீலத் தலர்." இது பகைத்துணை.

## ருசு. தொடர்நிலைச்செய்யுட்பொருட்பேறணி.

இது ஒருபொருளைச் சொல்லத் தண்டாபூபிகா நியாயத்தினன் மற்றொருபொருடோன்றுதல். [தண்டாபூபிகா

நியாயமாவது தண்டத்தையபகரித்தலினாலதனிற்சேர்த்து வைத்த அப்பமுதலிய வுணவபகரிக்கப்படுதலுந்தானே விளங்கல்.] இதனை வடநூலார் காவியார்த்தாபத்தியலங்கார மென்பர்.

உ-ம். "மங்கைமுகந் திங்களையே வாட்டிற் றறைகுவதென்
பங்கயமென் போதுபடும் பாடு." எனவரும்.

## ௬௰. தொடர்நிலைச்செய்யுட்குறியணி.

இது சாதிக்கத்தக்கபொருளைவாக்கியார்த்தத்தினாலாயினும் பதார்த்தத்தினாலாயினு மவ்விரண்டினாலுமாயினுஞ் சாதித்தலாம். இதனை வடநூலார் காவியலிங்காலங்கார மென்பர்.

உ-ம். "காம நினைவென்றேன் கண்ணுதலோ னென்மனத்தின்
மீமருவு கின்றான் விடாது."

இதில், பின்வாக்கியார்த்தத்தைக்கொண்டு வெல்லுதல் சாதிக்கப்பட்டது. இது வாக்கியப்பொருட் செய்யுட்குறி.

"மிளிர்நீறே யீசன் விழிமணியே வாழி
தெளியுமையான் மீதணியுஞ் சீரா—லுளதாய
வின்பவெளி யைக்கவர்வீ டென்றுமோ கத்தழுந்தற்
கன்பினேன் செல்வே னமைந்து."

இதில், வீடடைதலை மோகமாகச்சொல்லுத லப்பிரசித்தமாகையா லது சுகவொளியை யபகரித்த லென்னும் பதார்த்தத்தினாற் சாதிக்கப்பட்டது. இது பதப்பொருட்செய்யுட்குறி.

"கலைதேர் புலமைநிறை காரிகையா லோர்தன்
றலைமேற்கோட் பட்டதெக்கே சஞ்சீர்—நிலையதற்குப்
பேசுவிலங் காங்கவரி பின்புறங்கொள் சாமரையை
யேசுறயார் சொல்வா ரிணை."

இதில், புலமையிற்சிறந்த காரிகையாற் சிரமேற் கொளப்பட்ட தெக்கேசமென்னும், வாக்கியார்த்தமும் விலங்கு பின்புறங்கொண்டவென்னும் பதார்த்தமுஞ்

சேர்ந்து காரிகைகூந்தற்குச் சாமரையொப்பாகாமை சாதிக்கப்பட்டது. இது இருமைச்செய்யுட்குறி.

## கூக. வேற்றுப்பொருள்வைப்பணி.

இது பொதுப்பொருளாற் சிறப்புப்பொருளையுஞ் சிறப்புப்பொருளாற் பொதுப்பொருளையுஞ் சாதித்தலாம். இதனை வட நூலார் அர்த்தாந்தாந்யாசாலங்காரமென்பர்.

உ-ம். "நிறைவாரி யைத்தாண்டி நின்ற னனுமனைறபெரியோர்க ளென்றோ வரிது."

இதில், பெரியோர்க்கரிதில்லையென்னும் பொருளால் அனுமன் கடலைத்தாண்டி நின்றனென்னும் வர்ணியமாகிய சிறப்புப்பொருள் சாதிக்கப்பட்டது.

"ஊரங் கணனீ ருரவுநீர்ச் சேர்ந்தக்காற்
பேரும் பிறிதாகித் தீர்த்தமா—மோருங்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோ னிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து."

இதில், முன்னிரண்டடியிற் சொல்லப்பட்ட சிறப்புப்பொருளாற் பின்னிரண்டடியாலுஞ் சொல்லப்பட்ட வர்ணியமாகிய பொதுப்பொருள் சாதிக்கப்பட்டது.

தாழ்ந்தோ ருயர்வ ரென்றுமிக வுயர்ந்தோர் தாழ்வ ரென்றுமறஞ்
சூழ்ந்தோ ருரைக்கு முறைகண்டா மதில்சூழ் கிடந்த தொல்லகழி
தாழ்ந்தோ ரனந்தன் மணிமுடிமே னின்றன றுயர்ந்து தடவரையைச்
சூழ்ந்தோர் வரையி னுதிப்பவன்றாட் கீழ்நின் றதுபோய்ச்சூழெயிலே.

இதில், பின்சொல்லப்பட்ட வர்ணியமாகிய சிறப்புப்பொருளான் முன்சொல்லப்பட்ட அவர்ணியமாகிய பொதுப்பொருள் சாதிக்கப்பட்டது. பிறவுமன்ன.

## கூஉ. மலர்ச்சியணி.

இது சிறப்புப்பொருளைச் சாதித்தற்குப் பொதுப்பொருளையு மீட்டு மப்பொதுப்பொருளைச் சாதித்தற்கு மற்றொரு சிறப்புப்பொருளையுஞ் சொல்லுதலாம். இதனை வடநூலார் விகஸ்வராலங்காரமென்பர்.

உ-ம். "தேடு மணிபலவுஞ் சேரிமைய மால்வரைக்குக்
கூடுபனி யாலோர் குறைவுண்டோ—நீடுபல
வின்குணத்திற் குற்றமொன் றிந்து பலகதிரிற்
புன்களங்கம் போலடங்கிப் போம்."

இதில், முன்னிரண்டடியிலுஞ் சொல்லிய சிறப்புப்பொருளைச் சாதிக்கப்பலகுணங்களிலொருகுற்ற மறையுமென்னும் பொதுப்பொருளைச்சொல்லி அதைச் சாதித்தற்குச் சந்திரகிரணங்களிற் களங்கம்போ லென்னுஞ் சிறப்புப்பொருள் கூறப்பட்டது.

## சஈ. கற்றோர்நவிற்சியணி.

இது மிகுதிக்குக் காரணமாகாததை அதற்குக்காரணமாகச் சொல்லுதலாம். இதனை வடநூலார் பிரௌடோக்தியலங்காரமென்பர்.

உ-ம். "தக்கவிவள் கண்யமுனை தன்னி லலர்குவளை
யொக்குங் கருமை யுள."

இதில், குவளையின்கருமை மிகுதிக்கேதுவாகாத யமுனையிற் பிறந்த லேதுவாகச் சொல்லப்பட்டது.

"ஐந்தாரு வின்மலர்த்தா தங்காம தேனுவின்பால்
சிந்தா மணியினொளி சேர்த்தனத—னந்தா
வுயிர்ப்பினொடு சங்கரிதி யுள்வெளியைந் தாலும்
வியப்பவிவற் றந்தான் விதி." இதுவுமது.

## சஉ. உய்த்துணர்வணி.

இது ஒருகாரியமுற்றுப் பெறுதற்கிஃதிவ்வாறுமெனின் னென ஊகித்தலாம். இதனை வடநூலார் சம்பாவனலங்காரமென்பர்.

உ-ம். "சேடுறுநங் கோன்புகழைச் சேடனவி லத்தொடங்கிற்
பீடுறவே முற்றுப் பெறும்."

## சஙு. பொய்த்தற்குறிப்பணி.

இது ஒருபொருளைப் பொய்யாக்குதற்கு மற்றொரு பொய்ப்பொருளைக் கற்பித்தலாம். இதனை வடநூலார் மித்தியாத்தியவசிதியலங்காரமென்பர்.

உ-ம். "வான்பசுந்தோல் போர்த்சுருட்ட வல்லோன் பசுபதியைத்
தான்பரவா தெய்துறூஉம் வீடு."
"விண்மலர்த்தார் வேய்ந்தோனே வேசையரைத் தன்வசமாப்
பண்ணுதற்கு வல்லனென் பார்." எனவரும்.

## சுசு. வனப்புநிலையணி.

இது வர்ணியத்தை விசேஷியமாக்கிக்கொண்டு வர்ணிக்கவேண்டிய வாக்கியார்த்தத்திற் கொப்பாகிய மற்றொரு வாக்கியார்த்தத்தை வர்ணித்தலாம். இதனை வடநூலார் லலிதாலங்காரமென்பர்.

உ-ம். "பெருகறன்முற் றும்போன பின்கரைகோ லற்கித்
திருவனையாள் வேட்டல் செயும்."

இதில், சிறிதன்போடு வந்த நாயகனையிகழ்ந்து மற்றொருத்தியிடத்தி லவன்போனபின்பு, தன்னைத் தூது விடவிரும்பிய நாயகியைக் குறித்துத் தூதி தான்சொல்ல வேண்டியதற்கொத்த நீர்போயபின் கரை கோலல் கூறினள்.

## சுஎ. இன்பவணி.

இதனை வடநூலார் பிரஉஷர்ஷணாலங்காரமென்பர். அது மூன்றுவகைப்படும். அவற்றுள்,

க-வது. முயற்சியின்றிவிரும்பப்பட்டகாரியஞ்சித்தித்தல்.

உ-ம். "தன்னு யகன்விழைந்த தையலையே தூதாக
வன்னான்க ணுய்த்தா ளணங்கு."

உ-வது. விரும்பப்பட்டபொருளினுமதிகமாகியபொருள்சித்தித்தல்.

உ-ம். "மழுங்குவிளக் கைத்தூண்ட மங்கையெழும் போது
செழுங்கதிர்தோன் றிற்றிருள்கால் சீத்து."

ந-வது. உபாயஞ்சித்தித்தற்பொருட்டுச்செய்யுமுயற்சியாற்
பலமே சித்தித்தல்.

உ-ம். "தங்கு நிதியஞ் சனமூ விகையகழ்ந்தோ
னங்குநிதி யேகண்டா னன்று."

### ௬௫. துன்பவணி.

இது விரும்பப்பட்ட பொருளைக்குறித்து முயற்சி செய்ய வதற்குப் பகைப்பொருள் கிடைத்தலாம். இதனை வடநூலார் விஷாதனுலங்காரமென்பர்.

உ-ம். "சோருஞ் சுடர்விளக்கைத் தூண்டு கையிலவிந்த
தாருமிடர் கூர வகத்து."

### ௬௬. அகமலர்ச்சியணி.

இது ஒன்றன் குணகுற்றங்களான் மற்றொன்றற்கு அவையுளவாதலைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் உல்லாசாலங்காரமென்பர். அது நான்குவகைப்படும். அவற்றுள்,

க-வது. குணத்தினுற்குணத்தைச்சொல்லுதல்.

உ-ம். "இக்கற் பினண்மூழ்கித் தூய்மைசெயு மோவெனையென்
றக்கங்கை கொள்ளு மவா."

இதில், கற்பினள் பெருமைக்குணத்தாற் கங்கைக்குப் பரிசுத்தகுணஞ் சொல்லப்பட்டது.

உ-வது. குற்றத்தினுற்குற்றத்தைச்சொல்லுதல்.

உ-ம். "சினக்கதிர்வேல் வேந்தேநின் றெவ்வர் மடவார்
வனத்திலடைந் தோடுங்கான் மாழ்கித்—தனத்திலுற
வைத்தபெருந் திட்பமடி வையாத நான்முகனை
மைத்தவிழி நீருகவை வார்."

இதில், பாதங்களின் மென்மைக்குற்றத்தால் வீணாக முலைகளிற் கடினத்தைவைத்த நான்முகனிந்தை கூறப்பட்டது.

ஙு-வது. குணத்தினுற்குற்றத்தைச்சொல்லுதல்.

உ-ம். "நாறுந் தகடேபோ னன்மலர்மேற் பொற்பாவாய்
நீறாய் நிலத்து விளியரோ—வேறாய
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போலு
நன்மக்கள் பக்கந் துறந்து."

இதில்,நல்லோர் பெருமைக்குணத்தாற் றிருமகளுக்கு அவரையடையாமைக்குற்றங் கூறப்பட்டது.

ச-வது. குற்றத்தினுற்குணத்தைச்சொல்லுதல்.

உ-ம். "கோவடுவேற் கொற்றவநீ கொல்லாமை விட்டதுவே
சேவகர்க்குப் பேரு தியம்."

இதில், அரசன் கொடுமைக்குற்றத்தினுற் கொலை யின்றிப் புறம்போதற்குணஞ் சொல்லப்பட்டது.

## எ௰. இகழ்ச்சியணி.

இது ஒன்றன்குணகுற்றங்களான் மற்றொன்றற்கு அவையுளவாகாமையைச் சொல்லுதலாம். இதனை வட நூலார் அவக்ஞியாலங்காரமென்பர். அது இரண்டுவகைப் படும். அவற்றுள்,

க-வது. குணத்தினுற்குணமுண்டாகாமை.

உ-ம். "ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடனீர்
நாழி முகவாது நானுழி."

இதில், கடலின்பெருமைக்குணத்தா னுழிக்கு அதிக நீர் கொள்ளலாகிய குணமுண்டாகாமை கூறப் பட்டது.

உ-வது. குற்றத்தாற்குற்றமுண்டாகாமை.

உ-ம். "கமலமலர் தற்கண்டு கூம்புதலாற் காம
ரமுதகிர ணற்கென் குறைவு."

இதில், கமலங் கூம்புதற்குற்றத்தாற் சந்திர னுக்குக் குறைவாகிய குற்றமுண்டாகாமை கூறப்பட்டது.

## எக. வேண்டலணி.

இது குற்றத்தாற் குணமுண்டாதலைக்கண்டு அக்குற் றத்தைப் பிரார்த்தித்தலாம். இதனை வடநூலார் அநுக்ஞியா லங்காரமென்பர்.

உ-ம். "வெண்டிரு நீறு புனையுமா தவர்க்கு
விருந்துசெய் துறுபெரு மிடியுங்
கொண்டநல் விரதத் தினைக்கும்யாக் கையுநீ
கொடியனேற் கருளுநா ளுளதோ."

## ௭௨. இலேசவணி.

இது குற்றத்தைக் குணமாகவுங் குணத்தைக்குற்றமாகவுஞ் சொல்லுதலாம்.

உ-ம். "பறவைக ளெலாமனப் படியே திரிதரக்
குறைவிலிக் கிளிக்குக் கூட்டுச்
சிறைநீங் களவியிற் சேர்பய னுமே."

இது அரசனுக்கினியனாய்த் தன்னினீங்கி அவன்புரத்து நெடுநாளாகவிருக்குங் கல்விசான்ற புதல்வனைப் பார்த்தற்கு விரும்பிய தந்தையாற் சொல்லப்பட்டது. இதில், மதுரச்சொல்லாகிய குணம் பஞ்சரச்சிறைக்குக் காரணமாகையாற் குற்றமாகவும் மதுரச்சொல்லில்லாமையாகிய குற்றம் வேண்டியவாறு திரிதற்குக்காரணமாகையாற் குணமாகவுஞ் சொல்லப்பட்டன.

## ௭௩. குறிநிலையணி.

இது புகழ்பொருளை யுணர்த்துஞ்சொற்களாற் குறித்தறிதற்குத் தகுதியாகிய பொருளைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் முத்திராலங்காரமென்பர்.

உ-ம். "மந்திர கினியணி வேணிப் பிரான்வெங்கை மன்னவனீ
கொந்தார் குழன்மணி மேகலை நூனுட்பங் கொள்வதெங்ஙன்
சிந்தா மணியுந் திருக்கோ வையுமெழு திக்கொளினு
நந்தா வுளையை யெழுதலெவ் வாறு நவின்றருளே."

இதில், சிந்தாமணி முதலிய செய்யுள் குறிக்கப்பட்டன.

## ௭௪. அரதனமாலையணி.

இது சொல்லத்தொடங்கிய பொருள்களை முன்பின் முறைவழுவாது வரச்சொல்லுதலாம். இதனை வடநூலார் ரத்நாவளியலங்காரமென்பர்.

உ-ம். "உனதுபிர தாப முயிரிழந்த தெவ்வர்
மனைவியரா னேருறுப்பின் மண்ணுஞ்—சினவிழியி
னரமுநெஞ் சிற்றீயு நாசியிற்கா லும்மறிவி
னரும் வெளியுருவு மாம்."

இதில், பஞ்சபூதங்களு முறைபிறழாமற் சொல்லப்பட்டன.

## ௭௫. பிறிதின்குணம்பெறலணி.

இது ஒருபொருளானது தன்குணத்தையிழந்து பிறிதொன்றின் குணத்தைக் கவர்தலாம். இதனை வடநூலார் தத்குணாலங்காரமென்பர்.

உ-ம். "இவண்மூக் கணிமுத் திதழொளியாற் பெற்ற
துவண்பதும ராகத் தொளி."

இங்கே குணம் - சுவையொளியூறோசை நாற்ற முதலியன.

## ௭௬. தோல்லுருப்பெறலணி.

இதனை வடநூலார் பூர்வரூபாலங்காரமென்பர். அது இருவகைப்படும். அவற்றுள்,

க-வது. ஒன்றுமற்றொன்றன்குணத்தையடைந்திருந்துமீட்டுந் தன்குணத்தையேயடைதலாம்.

உ-ம். "நித்தன் களக்கறையா னீலுருக்கொள் சேடனுஞ்சீ
ருற்றடைந்தான் றன்முன் னுரு."

உ-வது. ஒருபொருள் விகாரத்தை யடைந்தபோதிலும் பூர்வதிசையைச் சொல்லுதலாம்.

உ-ம். "வளியால் விளக்கவிந்து மாதுளத்தி ணை
மொளிமே கலைசெயலா லுண்டு." எனவரும்.

"நின்னொடு முரணிய நிருபர்நா டழிந்து
மரசுக ளுறையிடத் தரசுக ளுறையு
மாவினம் பொருந்திட மாவினம் பொருந்து
மத்திகள் வாழிடத் தத்திகள் வாழு
முரசொலி கெழுமணி முன்றிற்
பரசுசீர் சிறந்த பண்புடை வேந்தே." இது சிலேடை.

## ௭௭. பிறிதின்குணம்பெறாமையணி.

இது ஒருபொருளானது தன்னோடு சம்பந்தித்த பிறிதொன்றன் குணமடையாமையாம். இதனை வடநூலார் அதத்குணாலங்காரமென்பர்.

உ-ம். "புனைகழற்கா னங்கோன் புகழ்திசைவே ழுங்க
ணனைமதத்திற் றோய்ந்து நயவார்—மனைவியர்வாட்
கண்மை யறத்துடைத்துங் காமர் மதிபோல
வெண்மையுடைத் தாய்விளங்கு மே."

புகழ் கரிதாகாமை காண்க.

## எஅ. தன்குணமிகையணி.

இது மற்றொன்றன் சார்பினாலே தனதியற்கைக் குண மிகுதலாம். இதனை வடநூலார் அநுகுணாலங்கார மென்பர்.

உ-ம். "வார்செவிசேர் காவிமலர் மானனையாய் நின்கடைக்கட்
பார்வையினான் மிக்ககரும் பண்பு."

இதில், கடைக்கட்பார்வையின்சார்பினாற் குவளை யின் கருமைக்கு மிகுதல் சொல்லப்பட்டது.

## எகூ. ம றை வ ணி.

இது பொதுக்குணத்தினா லிரண்டுபொருள்களுக்கு வேற்றுமை தோன்றாமையாம். இதனை வடநூலார் மீலிதா லங்காரமென்பர்.

உ-ம். "பேதமுறத் தோன்றாதிப் பேதையியற் கைச்சிவப்பார்
பாதமுற வூட்டியசெம் பஞ்சு."

## அ0. பொதுமையணி.

இது ஒப்புமையா லிரண்டுபொருள்களுக்கு விசேஷந் தோன்றாமையாம். இதனை வடநூலார் சாமானியாலங்கார மென்பர்.

உ-ம். "வண்பதும வாவி யடைந்தமட வார்வதனம்
பண்பி னறியப் படா."

## அக. மறையாமையணி.

இது பொதுக்குணத்தினா லொற்றுமையுடைய விர ண்டுபொருள்களுக் கொருகாரணத்தால் வேற்றுமை தோன்றுதலாம். இதனை வடநூலார் உந்மீலிதாலங்கார மென்பர்.

உ-ம். "ஒழுகுறு மருவி யீட்ட மொலியிரு ளருவெண் டிங்கள்
பழகுறு முடற்க ளங்காற் பாகசா தனன்கூர்ங் கோட்டு
மழகளி றுமிழ்ம தத்தான் மலர்மிசைக் கடவு ளூர்தி
யழகுறு நடையா லன்றி யறிதரப் படாவக் குன்றில்."

இது கைலாசவர்ணனை.

## ௫௨. சிறப்பணி.

இது ஒப்புமையாற் பொதுமையுற்றிருந்த விரண்டு பொருள்களுக் கொருகாரணத்தால் விசேஷந் தோன்றுதலாம். இதனை வடநூலார் விசேஷகாலங்காரமென்பர்.

உ-ம். "விதுவெழலுஞ் சோர்வுறலான் மின்னார் முகத்திற்
பதுமமலர் வேறு படும்."

## ௫௩. இறையணி.

இதனை வடநூலார் உத்தராலங்காரமென்பர். அது இரண்டுவகைப்படும் அவற்றுள்,

### க-வது. மறைப்பிறை.

இது ஒரபிப்பிராயத்தைத் தன்னுண்மறைத்து வைத்துக்கொண்டிருக்கின்ற வுத்தரத்தைச்சொல்லுதலாம்.

உ-ம். "மாயையை யகன்ரு னடக்கக்கா லெழுமோ வாயிடை மாற்றமொன் றுண்டோ, போயொரு விடைய முணமனம் வருமோ பொருந்துறு பகலிர வுளவோ, காயமு முயிருங் கலந்துவாழ் வுறுமோ கண்டன மெனவெனை யொருவர், நீயறி வுறவிங் குரைப்பவ ருளரோ நேரிழா யென்றன னிமலன்."

மாயை பிரிவப்பெயரினள். பிரிவுண் மறைந்தது.

### உ-வது. வியப்பிறை.

இது ஒருவினாவிற்கு அதனையே விடையாகவும், பலவினாக்களுக்கு ஒன்றேவிடையாகவுஞ் சொல்லுதலாம.

உ-ம். "என்பணி பூண்டா னிறைவன்."

இதில், என்பணி - யாதுபூணெனவும், எலும்புப் பூணெனவுமாம்.

"மாதவன்கைக் கொள்வதெது மந்திரமீ சற்கேது
காதலுறு மஞ்சக் கரம்."

## ருச. நட்பவணி.

இது பிறர்கருத்தை யறிந்துகொண்டு கருத்தோடு கூடிய செய்கையா லெதிர்மொழி கொடுத்தலாம். இதனை வடநூலார் சூக்ஷ்மாலங்காரமென்பர்.

உ-ம். "காதலன் மெல்லுயிர்க்குக் காவல் புரிந்ததாற்
பேதையு ராயம் பிரியாத—மாதர்
படரிருள்கால் சீக்கும் பகலவனை நோக்கிக்
குடதிசையை நோக்குங் குறிப்பு."

இதில், மாதர் கூட்டத்திலிருக்கின்ற தலைவி தலைவன்கருத்தை யறிந்து தன்செய்கையா லிரவிடைவருக வென்று சொல்லியது காண்க.

## ருரு. கரவுவெளிப்படுப்பணி.

இது ஒருவரது மறைத்த செய்கையை, அதனைத்தானறிந்த கருத்தோடுகூடிய தன்செய்கையால் வெளிப்படுத்தலாம். இதனை வடநூலார் பிகிதாலங்காரமென்பர்.

உ-ம். "கடிமனைக்குக் காலைவரு காவலற்குத் துஞ்சும்
படிவிரித்தா ளோரணங்கு பாய்."

இதில், காலையி லமளிவிரித்தலா லிராமுழுதும் பரத்தையரில்லிற் கண்டுஞ்சாதிருந்தமை வெளிப்படுத்தப் பட்டது.

## ருசு. வஞ்சநவிற்சியணி.

இது ஒருகாரணத்தானிகழ்ந்த சத்துவமாகிய குணத்தை மற்றொரு காரணங்கூறி மறைத்தலாம். இதனை வடநூலார் வியாஜோக்தியலங்காரமென்பர். சத்துவமென்பன: கண்ணீர்வார்தல்-புளகரும்பல் - வியர்த்தல் - நகைதோன்றன் முதலியவாம்.

உ-ம். "கல்லுயர்தோட் கிள்ளி பரிதொழுது கண்பனிசோர்
மெல்லியலார் தோழியர்முன் வேறொன்று-சொல்லுவராற்
பொங்கும் படைப்பரப்பின் மீதெழுந்த பூந்துகள்சேர்ந்
தெங்கண் கலுழ்ந்தன வென்று."

இதில், சோழனைக்கண்ட மங்கையர் தாங்கொண்ட மயலேயினா லுளதாகிய கண்ணீர்வார்தலைச் சேனாபராகத்தா லுளதாயதெனத் தோழியர்க்கு மறைத்தது காண்க.

## ௭௭. குறிப்புநவிற்சியணி.

இது ஒருபொருளைக்குறித்துச் சொல்லவேண்டியதை மற்றொருபொருளைக் குறித்துச்சொல்லுதலாம். இதனை வடநூலார் கூடோக்தியலங்காரமென்பர்.

உ-ம். "பிறன்புலத்தில் வாய்நயச்சொல் பெட்புடன்கொள் காளா
யிறைவனடை கின்றனன்விட் டேகு."

இது மறைவிடத்திற் பிறன்மனையாள் வாய்ச்சொல்லைக்கேளாநிற்கும் விடனைக்குறித்துச்சொல்லவேண்டியதைப் பிறனவிளைநிலத்தி னெல்லைமேய்கின்ற வெருதைக்குறித்துச் சொல்லியது காண்க. சொல் - நெல்லுமொழியுமாம்.

## ௭௮. வெளிப்படைநவிற்சியணி.

இது சிலேடையான் மறைத்தபொருளைப் புலவன் வெளிப்படுத்தலாம். இதனை வடநூலார் விவிர்தோக்தியலங்காரமென்பர்.

உ-ம். "பிறன்புலத்தில் வாய்நயச்சொல் பெட்புடன்கொள் காளா
யிறைவனடை கின்றனன்விட் டேகு—துறையினெனப்
பண்பி னுணரப் பகர்ந்தான் குறிப்பாக
நண்பினுயர் பாங்க னயந்து."

## ௭௯. யுத்தியணி.

இது தனது மாமத்தை மறைத்தற்பொருட்டுச்செய்கையாற் பிறரைவஞ்சித்தலாம்.

உ-ம். "மாணிழையா ளன்பன் வடிவைப் படத்தெழுதும்
பாணியிலங் கோர்சிலர்தன் பாங்கருற—நாணிமுகங்
கோட்டினாள் சித்திரத்த கோலவுரு வின்கரத்திற்
றீட்டினாள் கன்னற் சிலை."

இதில், தன்கணவனுருவைக் கருப்புவில்லெழுதி வேறுபடுத்திப் பிறரைவஞ்சித்தது காண்க. பாணி-காலம்.

## கூல. உலகவழக்குநவிற்சியணி.

இது உலகவழக்கச் சொல்லைத் தழுவிக்கொண்டு சொல்லுதலாம். இதனை வடநூலார் லோகோக்தியலங்காரமென்பர்.

உ-ம். "அண்ணணீ பேசாதைந் தாறுமா தம்வரையிற்
கண்ணைமூ டிக்கொண் டிரு."

## கூக. வல்லோர்நவிற்சியணி.

இது அவ்வுலகவழக்கச்சொல்லே மற்றொருபொருளையுட்கொண்டிருத்தலாம். இதனை வடநூலார் சேகோக்தியலங்காரமென்பர்.

உ-ம். "பறிமலர்ப்பூங் குஞ்சியாய் பாம்பேபாம் பின்கா
லறியுமுல கத்தென் றறி."

இதில், ஒருவன் மற்றொருவன் செய்தியைத் தன்னைக்கேட்க, அவன் சமீபத்திருக்கின்றவனைக்காட்டியிவனுக்கே அது தெரியுமென்று சொல்லுங்கருத்தை யுட்கொண்டிருத்தல் காண்க.

## கூஉ. மடங்குதனவிற்சியணி.

இது ஒருவரொருபொருளை யறிவுறுத்தற்குச் சொல்லிய சொல்லுக்கு மற்றொருவன் சிலேடையினாலாதல், எடுத்தல் படுத்தன் முதலிய விசைவிகாரத்தினாலாதன் மற்றொருபொருளைக் கற்பித்தலாம். இதனை வடநூலார் வக்ரோக்தியலங்காரமென்பர்.

உ-ம். "என்பிழைநெஞ் சிற்பொறுமென் றோதவர சென்பிழைசே
மன்பொறுக்கு நெஞ்சிலென்றாண் மாது."

## கூரு. தன்மைநவிற்சியணி.

இது சாதிசுபாவதருமத்தையாவது தொழிற்சுபாவதருமத்தையாவது சொல்லுதலாம். இதனை வடநூலார் சுபாவோக்தியலங்காரமென்பர்.

உ-ம். "அப்பூருஞ் செஞ்சடைமே லம்புலியைப் பார்த்துப்பார்த்
தெப்போதுஞ் சீத்துப்பூத் தென்னுமே—வெப்போடும்
வாலங்காட் டாநிற்கும் வாயங்கா வாநிற்கு
மாலங்காட் டான்பூ ணரா." இது சாதித்தன்மை.

"புதுமணத்த காதலனும் பூவையும்புன் வாயி
லெதிருற்று நாண்டமர்கண் டெய்திக்—கதுமென்
றொருவர்க் கொருவர் வழிவிடப்பல் காற்பின்
னிருவரும்போய் மீள்வ ரெதிர்" இது தொழிற்றன்மை.

## ௬௪. நிகழ்வினவிற்சியணி.

இது முன்னடந்ததையேனும் பின்னடப்பதையேனு மப்போது நடக்கிறதாகச் சொல்லுதலாம். இதனை வடநூலார் பாவிகாலங்காரமென்பர்.

உ-ம். "பிரிவுணர்ந்த வந்நாளப் பேதைவிழிக் கஞ்சஞ்
சொரிதரளம் யான்றூர நாட்டின்—மருவலுறு
மிப்போதுங் காண்கின்றே னென்செய்கோ விங்கிதற்குத்
துப்போது தோழநீ சூழ்ந்து." இது நடந்தது.

## ௬௫. வீறுகோளணி.

இது செல்வமிகுதியையேனும் புகழத்தக்க வொரு சரித்திரத்தைப் புகழ்பொருளுக் கங்கமாகவேனுஞ் சொல்லுதலாம். இதனை வடநூலார் உதாத்தாலங்காரமென்பர்.

உ-ம். "மணிப்பொற் குழைகொண்டு கோழியெறி வாழ்க்கை
யணிப்பொற் கொடிகா ணவள்." இது செல்வமிகுதி.

"உமையா ளருந்தவஞ்செய் யொண்கச்சி யூரே
யெமையாள் பரமற் கிடம்."

## ௬௬. மிகுதிநவிற்சியணி.

இது ஆச்சரியப் படத்தக்கதாகவும் பொய்யாகவு மிருக்கின்ற கொடை சௌரிய முதலியவற்றைப் புகழ்தலாம். இதனை வடநூலார் அதியுக்தியலங்காரமென்பர்.

உ-ம். "ஓதுபுகழ்த் தாதாவாய் நீயுறவிப் போதுலகி
லாதுலர்கள் கற்பகமா னார்." இது பெருங்கொடை.

"உன்பிரதா பத்தழலின் வற்றுகட லொன்னலர்மா
னன்னவர்கண் ணீரினிறைந் தன்று." இது சௌரியம்.

## ௬௭. பிரிநிலைநவிற்சியணி.

இது பெயர்ச்சொற்களுக்கு உறுப்பாற்றலான் மற்றொருபொருளைத் தந்துரைத்தலாம். இதனை வடநூலார் நிருக்தியலங்காரமென்பர்.

உ-ம். "நலமாயில ராக்குபழி நண்ணுதலால் வேத
வலரவனென் றுன்னையறை வார்."

### கூ௭. விலக்கணி.

இது பிரசித்தமானதாகியு மபிப்பிராயத்தோடுகூடியு மிருக்கின்ற விலக்கைச்சொல்லுதலாம். இதனை வடநூலார் பிரதிஷேதாலங்காரமென்பர்.

உ-ம். "சூதாடு வோய்சூத மன்று சொரிகணைகண்
மீதாடு பூசலிது மெய்."

இதில், போரிற் சூதத்தன்மையி னில்லாமை பிரசித்தமாகவுளதாகவும்,அன்றென்னும்விலக்குநீ சூதாட்டத்தன்றிப் போரிற் சமர்த்தனல்லையென்னு மிகழ்ச்சியை யுட்கொண்டிருக்கின்றது. இது சகுனிக்குச்சொன்னது.

### கூகூ. விதியணி.

இது பிரசித்தமாகிய பொருளின் விதியானது ஓரபிப்பிராயத்தோடு கூடிவருதலாம்.

உ-ம். "குயில்குயிலே யாகுங் குவலயத்திற் சீர்மிக்
குயர்வசந்த கால முறின்."

இதில், குயிலுக்குக்குயிற்றன்மையை விதித்தல் வீணாய் இளவேனில்வரின் மதுரவோசையைச் செய்யுமென்பதை யுட்கொண்டிருக்கின்றது.

### ரா. ஏதுவணி.

இது இரண்டுவகைப்படும். அவற்றுள்,

க-வது. காரணத்தைக் காரியத்துடன் சேர்த்துச்சொல்லுதல்.

உ-ம். "பெருந்திங்க டோன்றுமே பெய்வளையார் நெஞ்சிற்
பொருந்தூட றீர்த்தற் பொருட்டு."

இதில், ஊடறீர்த்தல்-காரியம். தோன்றுதல்-காரணம்.

உ-வது. காரணத்தையுங் காரியத்தையும்
அபேதப்படுத்துச் சொல்லுதல்.

உ-ம். "கூர்கொணெடு வேலுடைநங் கோன்கடைக்கட் பார்வையே
சீர்கொள்கவி வாணர் திரு."

பொருளணி முற்றிற்று.

---

# சொல்லணி.

இது மடக்குஞ்சித்திரமுமென விருவகைப்படும். இவை பெரும்பயனுடையவல்ல. மேற்சொல்லப்பட்ட வணிகளுட் செய்யுளகத்திரண்டு முதலியன கூடிவரின், ஒருவரணியும் பலவணிகளின் கூட்டத்தைப்போல மிக்கவழகைச் செய்து நிற்றலால், வேறணியாகவே கொள்ளவேண்டும்.

அது சேர்வையணியும் கலவையணியும் என விருவகைப்படும். அவற்றுள்,

## சேர்வையணி.

எள்ளுமரிசியுஞ் சேர்ந்தாற்போல விளங்குகின்ற பேதத்தையுடைய பலவணிகளது சேர்க்கையாம். இதனை வடநூலார் சம்சிருஷ்டியலங்காரமென்பர். அது மூன்று வகைப்படும். அவற்றுள,

க. பொருளணிச்சேர்வை. இது பொருளணிகள் பலசேர்ந்து வருதலாம்.

உ-ம். "காரிரு ளங்கங் களைப்பூசல் போன்றிடுமைம்
மாரியைவா னம்பெய் வதுமானும்—பேருலகிற்
றீயரைச்சேர்ந் தாங்கே சிறிதும் பயன்படா
வாயினவா லந்தோ விழி"—இதில், இரண்டு தற்குறிப்புமோருவமையுஞ் சேர்ந்து வந்தமைகாண்க.

உ. சொல்லணிச்சேர்வை. இது சொல்லணிகள் பலசேர்ந்து வருதலாம்.

உ-ம். "கந்தரங் கானந் தனிற்சென் றடங்கிலென் காசிக்கரே
கந்தரங் கானந்த நண்ணிலென் கன்னியா கட்டளகக்
கந்தரங் கானந்த நின்றா டெழிற்செந்தில் கண்டிறைஞ்சிக்
கந்தரங் கானந்த நல்கச் சனனங் கடந்திலரே."

இது நிரோஷ்டகமும் யமகமுங்கலந்து வந்தது.

ங. சொற்பொருளணிச்சேர்வை. இது சொல்லணியும் பொருளணியுஞ் சேர்ந்துவருதலாம.

உ-ம். "ஆன்றூர்ந்த காவி னளியாடு பூந்தேன்
மான்றீன்ற வேரன் மணியீர்ங்க வுணமாச

சான்றோருங்கு கோட்டிற் றயங்கு மணிமுத்தோ
டேன்றூர்ந்து நாட்டி னடக்கவெழு மார்த்து."

இது கலிவிருத்தமாகவேனும் வெண்பாவாக வேனும் வாசிக்கப்படுதலாற் பிறிதுபடுபாட்டென்னுஞ் சொல்லணியும், மலையினது பெருஞ்சம்பத்தைச் சொல்லுதலால் வீறுகோளென்னும் பொருளணியுமாம்.

## கலவையணி.

பாலு நீருஞ்சேர்ந்தாற்போல விளங்காத பேதத்தையுடைய பலவணிகளது கலப்பாம். இதனை வடநூலார் சங்கராலங்காரமென்பர். அது நான்குவகைப்படும். அவற்றுள்,

க. உறுப்புறுப்பிக்கலவை. இது ஒன்று தலைமைத்தாயு மொழிந்தன தலைமையில்லனவாகியுங் கலந்துவருதலாம்.

உ-ம். "காற்றினசை தாருநிழல் கண்மதிய மென்னுமரி
யேற்றிற் றமிப்புண் டிகெருமை—தோற்றருவி
னல்லெனுமால் யானை யவயவத்துண டோவென்று
சொல்லுறவே தோன்றுந் துடித்து."

இதில், மதியமென்னுமரியேறு அல்லெனுமால் யானை எனனப்பட்ட விரண்டுருவகங்களும், அவயவத்துண்டோவென்னுந் தற்குறிப்பிற் குறுப்பாதலால், உறுப்பாகிய வுருவகத்திற்கும உறுப்பியாகிய தற்குறிப்பிற்குங் கலப்பாம.

உ. நிகர்தலைமைக்கலவை. இது பலவணிகளுந் தலைமை யுடையனவாய்க் கலந்துவருதலாம்.

உ-ம். "அங்குலி யாற்கா ரோதிக் கற்றைநீக் குதல்போ லல்லைத்
திங்கடன் கதிரா னீக்கல் செய்துமூ டிறுகண் போலும்
பங்கய மலர்ப டைத்துப் பாருல கதனின் மேய
கங்குன்மான் முகஞ்சு வைக்கின் றனனெனக் கருதத்தோன் [றும்."

இதில், உறுப்புகளாகிய விரண்டுவமைகளாலுந் தோன்றுஞ்சந்திரனை வினைமுதலாகவுடைய விராத்திரியின் முகசும்பனத் தற்குறிப்பு திங்களிலும் இராத்திரியிலுந் தலைவன் றலைவிகளின் செய்கை யாரோபமாகிய சுருங்கச் சொல்லலணியை யுட்கொண்டே தோன்றுகின்றது. சுருங்கசசொல்லலை யுட்கொள்ளாமற் போனாற் சும்பனத்தற்

குறிப்பிற்கு வேறோராதாரமில்லாமையா லிரண்டுவமைகளுந் தற்குறிப்பையுஞ் சுருங்கச்சொல்லலையுஞ் சமமாகத் தோன்றச்செய்கின்றன ஆதலாலவ்விரண்டு நிகராயின.

௩. ஐயக்கலவை. இது இதுவோவதுவோ வென்றையுறப் பலவணிகள் கலந்துவருதலாம்.

உ-ம். "அழற்கவொய் நாக மடியிலுள தேற்பல்
பழத்தருவா லுண்டோ பயன்."

இதில், பாம்பின் செய்தி வர்ணிக்கப்பட்டுக் கொண்டிருப்ப, அரசனரண்மனைவாயிலிலிருக்குங் கொடியோனது செய்தியுந் தோன்றுகின்றது. இங்கே பாம்பின் செய்தி வர்ணியமாகக் கொடியோனது செய்தியவர்ணியமாயிற் சுருங்கச்சொல்லலாம். அங்ஙனமன்றி, வர்ணியமாகிய கொடியோன் செய்தி தோன்றுதற்பொருட்டு அவர்ணியமாகிய பாம்பின் செய்தி சொல்லப்பட்டதென்றூற் புனைவிலிபுகழ்ச்சியாம். அங்ஙனமன்றிப் பார்க்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற பாம்பின்செய்தியை வர்ணித்தலாற் சமீபத்திருக்குங் கொடியோன்செய்தி வெளிப்படுத்தப்படின் இரண்டும் வர்ணியங்களாதலாற் புனைவுளிவிளைவாம். என்றிவ்வாறையுற மூன்றணிகள் கலந்துவந்தமைகாண்க.

௪. ஒருதொடர்ப்பொருட்கலவை. இது ஒருபாட்டிற் சொற்களனைத்து மொரு பொருளையே சொல்லாநிற்ப வப்பொருளிலிரண்டணிகளி னிலக்கணமுண்மையால் அவ்விரண்டுந் தோன்றுதலாம்.

உ-ம். "சோலை வாயிற் சுடரு நிலாமணி
யால வாலத் தவிர்மதி யாற்புனல்
கால வாய்ந்த கதிர்மணி முல்லையின்
கோல நாண்மலர் கொய்வதற் கெய்தினாள்."

இதனுட் சொல்லப்பட்டபொருள் செல்வமிகுதியைச் சொல்லுதலென்னுமிலக்கணத்தால் வீறுகோளும், சம்பந்தமில்லாதிருப்பச் சம்பந்தத்தைக் கற்பித்தலென்னுமிலக்கணத்தால் உயர்வு நவிற்சியுமாம்.

அணியிலக்கணம்
முற்றிற்று.

28563

கரு. உயிர்மெய் போல வொற்றுமிம் முறைபெறும். (க0)

கசா. உயிர்மெய் வழக்க மெய்யெழுத் தாகும்
வேற்றுமைக் கண்ணே யென்றார் பிறரும். (கக)

கஎ. நால்வகை வருணத் தோர்க்கு நால்வகை
யியம்பு மெழுத்தை யியம்புவர் முதன்மொழி
மற்றவை மயங்கினும் வரையா ரண்டே. (கஉ)

கஅ. மக்கட் சாதி நான்கிற்கு மொருத்த
தத்தஞ் சாதி யெழுத்தே யவரவர்க்கு
வைத்துமுன் னெடுபி னதுதான் புடைத்தே
மயங்கினும் வரையார் பான்பட வறிநே:

இந்திரகாளியார். (கங)

## ங.—கதி.

ககூ. வானவர் மக்க ணரகர் விலங்கென
வூனமில் கதியே யொருநான் காகும். (க)

உ0. கதியெனப் படுபவை நான்கு நவிற்பிற்
றேவர் மக்க ணரகர் விலங்கென
மேவிய கதிக ளிரிரண் டாகும்:

இந்திரகாளியார். (உ)

உக. தேவர் மக்க ணரகர் விலங்கென
மேவிய நான்கே யெழுத்தியல் கதியே:

பரணர். (ங)

உஉ. அவற்றுள், உயிர்க்குறில் வலிமை யீற்றெழுத் தொழியப்
பயிர்பாறு வானவர் கதியெனப் படுமே. (ச)

உங. தேவர் கதியே தெரியுங் காலை
அஇஉஎ கரட தபவே:

பரணர். (ரு)

உச. மக்கட் கதியே நெட்டுயிர் நான்கொடு
மிக்க சிறப்பின ஙஞண நமவே. (சா)

உரு. அவை தாம்;—ஆஈ ஊஏ ஙஞண நமக்கள். (எ)

௨௬. ஒழிந்தன ஐஔ ஆய்த வெழுத்துங்
கழிந்தன வளனவு நரகர் கதியே. (௮)

௨௭. எ ஒ விரண்டும் யரல றழவெனத்
தொக்கன வைந்தும விலங்கின் கதியே. (௯)

௨௮. மன்னுவர் தேவர் மக்கள் செய்யுளுண்
மன்னோர் விலங்கொடு நரகர் கதியே. (௧0)

௨௯. விலங்கு ¶நரகும விலங்கின வென்ப:
இந்திரகாளியார். (௧௧)

௩0. ||நரகும் விலங்கும் வரைவ ரீண்டே
தேவரு மககளு மேவின பாட்டே. (௧௨)

ச.—உண்டி.

௩௧. அமுதென விடமென வருமிரு வகையு
முணவெனப் புலவ ருரைத்தன ருளரே. (௧)

௩௨. நஞ்சென வமுதென நவிலவும படுமே:
பொய்கையார். (௨)

௩௩. உணவே யமுதம விடமு மாகும:
அவிநயனார். (௩)

௩௪. உயிர்க்குறி லொன்கொடு கசதப நமவ
*மயக்கற வமுத வெழுத்தாகு மென்ப.
அவை:—அ, இ, உ, எ, க, ச, த, ப, ந, ம, வ. (௪)

௩௫. இவ்வுயிர் மெய்யோ டியைந்தன கொளலே (௫)

௩௬. ஆஓ விரண்டும யரல மூன்றுந
தாவிலிவ் விருவகைக கூட்டத் தியைந்தவு
மளவு மாய்தமு மைவகைக குறுக்கமு
†முளமலி புலவ ருரைத்தனர் நஞ்செனு
றவையொரு பெயர்மருங் கணைய நிற்பி
‡னவையுறு துஞ்சலு நடுக்கமுஞ் செய்யும். (௬)

---

¶ || நரகரும் பி-ம.
* எனப்பதி னொன்று மமுதென மொழிப பி-ம்.
† முளமகிழ் பி-ம்.
‡ னவையுறத் துஞ்சலுங் கெடுதலுஞ் பி-ம்.

௩௭. இருவகைக் கூட்டத் தியைந்தமேற் கூறிய
ஆகார வோகாரத் தொடிய லக்க
மொன்னு மொற்றொடு மியைந்தவுயி ரளபெடை. (௭)

௩௮. ஐவகைக் குறுக்கமு மறையுங் காலை
இகர ஒகர ஐகார ஔகார
மகர மென்னு மிவற்றின் குறுக்கம். (௮)

௩௯. ஆ ஒ யரல முதலிய வளபெடை
யாய்தனைங் குறுக்க முளப்பட வெல்லாம்
விடமென மொழிப மெய்யுணர்ந் தோரே:
பரணர். (௯)

௪0. ஈந்தா மொற்றொடு நடந்த வுயிர்களும
வருசாமில புலவர் மறுத்தில ரென்ப; (௧0)

௪௧. இருவகை யுண்டியென் றெடுத்தன வல்ல
தாமே நிறபினுந் தோமில வென்ப; (௧௧)

௪௨. நஞ்சு மமுதா மங்கலம புகினே; (௧௨)

௪௩. அமுதெழுத் தென்ற வாதியுயிர் நான்கொடும
புணர்ந்த மெய்யை யுணர்ந்தமு தென்ப; (௧௩)

௪௪. பெய்யா மமுதின் மேவிய வுயிரும்
பொய்தீர் புலவர் பொருந்தின வென்ப:
$இவை இந்திர காளியார். (௧௪)

## ரு.—பால்.

௪ரு. ஆண்பால் பெண்பா லலியென நின்ற
மூன்றே பாலென மொழிந்தனர் புலவர். (௧)

௪௬. இருவகை யைங்குறி லாண்பா லென்ப. (௨)

௪௭. அகரமோ டைங்குறி லென்று ராண்பால். (௩)

---

$ "தெரிந்த யாவமேல்" என்னும் வெண்பாவுரையில் இவ்வைந்து சூத்திரங்களையு மெடுத்தோதி இவற்றை இந்திரகாளியமென்றார் வச்சணந்தி மாலையுரைகாரரும்.

௪௮. நெடிலே ழிருவகை பெண்பா லென்ப. (௪)

௪௯. ஒற்று மாய்தமு மலியெனப் படுமே. (௫)

௫0. ஒற்றின் வருக்கமு மொன்பதிற் றிரட்டியும்
பெற்ற வாய்தமும் பேடெனப் படுமே. (௬)

௫௧. அவ்வவ் வெழுத்தே யப்பாற் குரிய
விரவினும் வரையா ரலியெழுத் தொழிந்தே. (௭)

௫௨. அவ்விரு பாற்கு மலியெழுத் தாகா
தம்முண் மயங்கினு ¶தாவின் றென்ப.|| (௮)

௫௩. உயிரீ ராறு மாணென மொழிப
வுயிர்மெய் யெல்லா மெண்ணென மொழிப
வுடம்பெழுத் தெல்லா நபுஞ்சக மாகும்:
பொய்கையார். (௯)

௬.—தானம்.

௫௪. குறிலந் துடனெடில கூட்டி நின்ற
ஐ ஔ விரண்டும் இ உ வடக்கிய
பால குமார வரச மூப்பு
மரணமென் றைவகைத் தானம் வகுத்தனர். (௧)

௫௫. முன்பிற் செய்யுண் முதலெழுத் ததற்குப்
பொருத்தமும் விருத்தமும் பகையுங் கொளலே:
அகத்திய பாட்டியல் (௨)

௫௬. நட்பே யுதாசீ னம்பகை யென்று
மொப்புடைக் குறிப்பி னொருமூன் றாகும். (௩)

௫௭. பால குமார வரச வென்று
மூவகைத் தானமு நட்பெனப் படுமே. (௪)

௫௮. ஒழிந்த விரண்டு முதாசீ னம்பகை.* (௫)

---

¶ தவறின்றதுவே பி-ம்.

|| இது பரணர் பாட்டியல் என்பது "குற்றெழுத்தாறே" என்னும் நவநீதப்பாட்டியலுரையால் விளங்குகின்றது.

* பகையுமாம். பி-ம்.

௫௯. பாட்டுடைத் தலைவ னியற்பெயர் முன்னெழுத்துப்
பால னாதி நால்வகை யெழுத்தும்
வட்டமாய் முறைமையி னியலு மென்ப. (௬)

௬௦. பெயர்முத லெழுத்துப் பால னாதி
நால்வகை யெழுத்தினும் வட்ட மாக
முறையே நட்புதா னம் பகைவரும். (௭)

௬௧. அகரந் தனக்காய நட்பென் றுரைப்ப
விகர வுகரங்க டாம்; (௮)

௬௨. அகரக் கெகர முதாசின மாகு
மகரக் கொகரம் பகை; (௯)

௬௩. உகர மெகர மெனவிரண்டு மென்ப
விகரந் தனக்காய நட்பு; (௧௦)

௬௪. இகரக் கொகர முதாசீன மாகு
மிகரக் ககரம் பகை; (௧௧)

௬௫. உகர வெழுத்துக்கு நட்பாய் வருமே
யெகர வொகரங்க டாம்; (௧௨)

௬௬. உகரக் ககர முதாசின மென்ப
†வுகரக் கிகரம் பகை; (௧௩)

௬௭. எகரக் கொகர மகரநட் பாகு
மிகர முதாசின மாம்; (௧௪)

௬௮. எகரந் தனக்குப் பகையென் றுரைப்ப
துகர வெழுத்தென் றுணர்; (௧௫)

௬௯. ஒகர வெழுத்துக் ககர வெழுத்து
மிகர வெழுத்துநட் பாம்; (௧௬)

௭௦. ஒகரக் குகர முதாசின மாகு
மெகரம் பகையா மெனல்; (௧௭)

---

விகரம் பகையென் றறி பி-ம்.

எக. நட்புப் பகையாம் பகையுநட் பாமவை
வைத்த முறையே ‡கொளல்:

இவை கல்லாடனூர். (கஅ)

## எ.—கன்னல்.

எஉ. குணபாற் பரிதி தென்பா லியமன்
குடபால் வருணன் வடபாற் சோமன்
றிசைமுக னடுவாந் தெய்வ நிலைகளிற்
குறிலைந் தமைத்து முதன்மூன் றுங்கொள்கென
நெறியறி புலமை யறிஞர்நேர்ந் தனரே. (க)

எங. அருக்க னியமன் வருணன் சோமன்
பிரமனுந் தெய்வ நிலையெனப் பேசுவர். (உ)

எச. அகரமுத லாக முறையா னைந்தவத்
தெய்வந் தம்மேல் வைக்கப் படுமே:

கபிலர். (ங)

எரு. உரைத்த குறிலைந் தொரோவொன் றாக
வருக்கனே டாகுமவ் வாறு நாழிகை. (ச)

எசு. அகரந் தானே யருக்கனே டுதிப்ப
விகர மின்புற வெய்தி யிருக்கு
முகர நடக்கு மெகர முறங்கு
மொகரந் துஞ்சுமென் றுரைத்தனர் புலவர். (ரு)

எஎ. அவரவர் பெயர்முத லெழுத்துவந் துதிப்ப
வவரவர்ப் பாடி னாக்கந் தருமே:

இந்திரகாளியார். (சு)

எஅ. இராப்பொழு திற்கு மிவ்வகை கொள்க. (எ)

## அ.—புள்.

எகூ. ஐவகைக் குறிலு மகரமுத லாக
வல்லூ றாந்தை வலியன் குருகே
மெல்லியன் மயிலென விளம்பின ரிவற்றின்

‡ கொளின் பி-ம்.

பொருத்தமும் விருத்தமும் பகையும் பலனும்
விரித்தினி தெண்ணி மேவினர் கொளலே. (க)

அ0. எண்ணப் பட்ட அகரமுத லெந்தும்
வல்லூ றுந்தை வலியான் குருகே
மெல்லியன் மயிலென விளம்பிய வியற்கையிற்
புள்ளென விளப்பும் புலவரு முளரே :
பரணர். (உ)

கூ.—நாள்.

அக. §மொழிக்கு முதலா வாகிய வெழுத்துக்
கோதிய நாள்வகை யியற்றுதல் கடனே. (க)

அஉ. உயிர்முத லொன்குந் ¶செயிர்தபு கார்த்திகை
யைந்து மூன்று மவற்றி னடைவே
வந்தபூ ராட முத்திரா டம்மே. (உ)

அங. ககர வருக்க வகைநாள் விரிப்பி
னொன்கு மிரண்டு மூன்று மூன்று
மோணை மாதிரை புனர்பூசம் பூசம். (ங)

அச. சகர நான்கைந் தொருமூன் றிவற்றின்
வகைநா ளிரேபதி முதன்மூன் றென்ப. (ச)

அரு. ஞகர வருக்கத் ||தொருமூன் றவிட்டம்.
ஞா, ஞெ, ஞொ. உ-ம்-ஞாலம், ஞெகிழி, ஞொள்கல். (ரு)

அசு. தகர வருக்கத் திரண்டேழ் மூன்றற்கு
வகைநாள் சோதி விசாகஞ் சதயம். (சு)

அஎ. நகரத் தாறு மநுடத் தடைவே
யேனை யாறுங் கேட்டைபூ ரட்டாதி. (எ)

அஅ. *பத்திய பகரத் தொருநான் கிரண்டா
றுத்திர மத்தஞ் சித்திரை யாகும். (அ)

§ நாமநாண் மொழிக்கு முதலாகிய வெழுத்து. பி-ம்.
¶ செயிர்தீர் பி-ம்.
|| மூன்றுமவிட்டம் பி-ம்.
* பற்றிய பி-ம்.

அகூ. மகரத் தாறு மூன்று மூன்று
மகமா யிலியம் பூர மாகும். (௯)

கூ0. யாவே யுத்திரட் டாதி யேனை
யூயோ மூலமென றுணர்ந்திசி னோரே. (௧0)

கூக. யூயோ விரண்டு பேறெண் மூவ
யாவே யுத்திரட் டாதிநாள பெறுமே. (௧௧)

கூஉ. ஒருநான் குரோகணி மகர மவமாகை
மற்றை நான்கு மகசிர மாகும். (௧௨)

கூ௩. †மூவகை யாமபசபெய தொனை மு ய வறந்தே
பூட்டம ராசி மைா சியதாரல
விட்டனர் பினைனா யேனைய பொருளே. (௧௩)

கூச. இரண்டெ ரிரண்டா றெட்டொரா பானொன்ற
திரண்ட நாளை செல்வம பந்தரு. (௧௪)

கூரு. நன்மை பொருளமே யெனப்ப த தமமெனத்
தொனமெனறிய புவெ றுணைதகனா நுவலிமே.
அவை,- மூவகை யொனபதின மூதலாபு ஞைாய. (௧௫)

கூசா. சிறந்தசீர்த தலைவன் பிறந்தநா ளாயினும
பெயர்நா ளாயினு மியறுற வுணராதமின
ஞென்றற் கேனு மிரணடற் கேனு
‡மூன்றிகழ் பொருத்த மொழிவது கடனே. (௧௬)

எழுத்தியல் முற்றிற்று.

---

† "சொல்லியநாளிருபத தேழையும ஒனபதொன்பதாக மூன்று கூறுக்கிப் பாட்டுடைததலைவனியற்பெயரின முதலெழுத்திறுளைத் தொடங்கிக் கூறுகளையெண்ண, ஒன்று மூன்று ஐநது எழ்வரிற் பொருநதா. அல்லாத நாட்களுட் பாட்டுடைசதலைவன பெயா முதலெழுததினிராசி தொடங்கி எட்டாமிராசி நாட்களும பொருநதா. வைநாசியமாகிய எண்பதெட்டாங்கால் நின்றநாளும் பொருநதாது." எனபது வச்சணந்திமாலையுரை.

‡ மூன்று இகழ் பொருத்தம் ௩, ௫, ௭ என்னும் மூன்றினையும் விட்டபொருத்தம்.

# சொல்லியல்.

௯௭ நவையறு சீர்க்கண மங்கலச் சொற்பெய
ரிவையொரு நான்கு மியம்புதல் சொல்லியல். (௧)

## ச.—சீக்கணம்.

௯௮ ஈரசைச் சீரே மூவசைச் சீரே
நாலசைச் சீரே யோரசைச் சீரென
சீர்வகை நான்கு தெரிந்தனர் புலவர். (௨)

௯௯ ஈரசை யகவல் மூவசை நான்கு
நேரீற்றில் வெண்பா நிரையீற்றில் வஞ்சி
நாலசை பொதுமற் றோரசைச் சீரே. (௩)

௧௦௦ மூவசைச் *யெஞ்சீர் கனாவொடு மொழிந்தன
ரீரசைச் சாலா யோரசை யொழிந்தே. (௪)

௧௦௧ கனமோ மூவசைக் கட்ட யாகும்:

கபிலர். (௫)

௧௦௨ முற்பட்ட டேற்பாயின முதலீ ரசைச்சொல்
சொற்பான் மங்கலப் பொருளொடு தோன்றி
நிற்பி னுயக் கொள்ளப் படுவுணர்ந் தோரே. (௬)

௧௦௩ நவைசெய் பாறு றையு வைறறிறுக்குத்
தொன்னெறி பரிதி மிசைப யானே
நாலசைச் சீரு மேலே மொழிந்தனர்:

இந்திரகாளியார். (௭)

௧௦௪ நிழப் பானை நிங்க ணிலதீ
சூரியம் வானம் பனிசா றமிற்றன
வியப்பினாற் றெய்வ நவைபெறு புலவர். (௮)

௧௦௫ †நேரசை மூன்றிய மானந் தறக்குச்
சீர்புனை நாளே பரணி வாழ்நாள்
மற்றது பயக்குமென் றாய்ந்துணர்ந் தனரே. (௯)

---

* யொணசா பி-ம்.

† இயமானனைச் சுவாகக மென்னும் பெயராற் கூறுவர் **வெண்பாப் பாட்டியலார்.** இந்திரகணமென்பர் **நவநீதப்பாட்டியலுரைகாரர்.** "இந்திர கணமே பெருக்கஞ் செய்யுஞ், சந்திர கணமே வாழ்நா டருமே"—**மாமூலம்:** என்பது நவநீதப்பாட்டியலுரை மேற்கோள்.

௧௦௬ நிரைநேர் நேரது நீண்மதி யதற்கு
வருநாண் மகசிர மவிபுக மாகும். (௧௦)

௧௦௭ நிரையுசை மூன்று நிலக்கண மதற்குத்
தருநாள் கேட்டை திருமிகத் தருமே. (௧௧)

௧௦௮ நீர்க்கண நேர்நிரை நிரைநாள் சதயம்
பார்க்கதிர்ப் பெருக்கம் பார்கரு மென்ப. (௧௨)

௧௦௯ கண்ணிய நேர்நிரை நேர்வரிற் கடுங்கதிர்
நண்ணிய நோய்தரு நாள்புனர் பூரம
நிரைநிரை நேர்தாம் வரின அவ் வானம்
பெருகிய கேடது ‡தருநா ளோணம். (௧௩)

௧௧௦ நெருப்பின் கணநிரை நேர்நிரை கார்த்திகை
விருப்புறு நாள திங்கள் செய்யும். (௧௪)

௧௧௧. காட்டிய நேர்நேர் நிரைவரிற் காற்றது
நாட்டறை போக்குநாள் சோதி யாகும. (௧௫)

௧௧௨ நிற்பன தீக்கண நான்கவை நீக்கி
நற்கண நான்கவை நாட்டினர் கொளலே. (௧௬)

௧௧௩ அவைதாம்;—
நீரே நிலனே வானே நீண்மதி
சீரிய மானன் செந்தீத் தெறுகதிர்
காற்றெனக் கிளர்ந்த கூற்றன வென்ப. (௧௭)

௧௧௪ நேர்முத லாகி நிரையிணை பின்வரி
னீர்க்கண மென்ப நெறியுணர்ந் தோரே. (௧௮)

௧௧௫ நிரைமூன் றியைநதது நிலனெனத் தகுமே. (௧௯)

௧௧௬ மூன்றுநிரை யிணைந்து நேரிறு மூவகை
யந்தர கணமென் $றறிதல் வேண்டும். (௨௦)

௧௧௭ முதனிரை யாகி யிணைநேர் வழிவரி
னதுமதிக் கணமென் ¶றறிந்தனர் கொளலே. (௨௧)

---

‡ நாளோண மென்ப பி-ம்.
$ றைதல் பி-ம்.
¶ றைந்தனர் பி-ம்.

ககஅ நேரசை மூன்றிய மானன் கணமே.|| (உஉ)

கககூ நேர்நடு வாகி நிரையிரு பாலுஞ்
சேரு மாயிற் செந்தீக் கணமே. (உங)

கஉ0 நிரைநடு வாகி நேரிரு பாலவரி
னலர்க்கதிர்க் கணமென் றறிந்தனர் கொளலே. (உச)

கஉக ஈறுநிரை யாகி யிணைநேர் முன்வரின்
மாறி வந்த மாருதக் கணமே. (உரு)

கஉஉ நிலனு மதியு நீருமிய மானனு
நலமிகு முதலவரிற் பிறநான் கும்பகை. (உசா)

கஉங யாவர்செய் யுட்கு மினமொடு புணர்ந்
மூவகைச் சீரோ முதனிற் பனவே. (உஎ)

கஉச அவைதாம்;—
பெருக்கஞ் செய்தலின் வாழ்நாள் பயத்தலிற்
றருக்கிய சீர்த்தி தன்னைத் தருதலின்
மிகுதிரு வாக்கலின் வேந்தர்க்கும் பிறர்க்குந்
தகுமெனப் பகரினுந் தகாது மற்றச்
சீர்க்குரிய நாளொடு செய்யுட் செய்யும்
பொருட்படைக் குரிசிற் பொருந்தாக் கடையே. (உஅ)

கஉரு அவைதாம்;—
நோயம் போக்குதல் செல்வந்து விளிதல்
சூனிய மாதல் நழுவே யுறுத
லூனம் பயக்குமென் றுரைத்தன ராயினு
மாதி யமுதெழுத் தாகிய சீர்கட்
கோதிய தெய்வத் திற்குரித் தாக
வோதிய நாளொடு பாடப் படுமே. (உகூ)

---

|| "நேரசை மூன்றிய மான னிரைப்பின்பு நேரிரண்டு-சேர்வன திங்க ணிரையசை மூன்றுஞ் செழுநிலமா-நேரசைப் பின்னர் நிரையிரண் டாய்வரி னீர்க்கணமாந-தேரிய லல்குற் றிருவே யிதுநல்ல சீர்க்கணமே." என்பது நவநீதப்பாட்டியல்.

கஉ௬ எல்லாக் கணமு நாணல மிலவெனிற்
பொல்லாங்கு தருமெனப் புகல வேண்டும்.:
இந்திரகாளியார். (௩௦)

கஉஎ மங்கல மமைந்த சொல்லொடு பொருந்திய
வீரசை நான்கினு ளோரி ரெழுத்து
நிரையிற் றியற்சீர் முதற்க ணிற்பினும்
வரையார் மூவகை வாராக் காலே. (௩௧)

கஉஅ ஈரசை முதலா நேரீ ரெழுத்து
நிரையீற்று மங்கலம் புணர்ந்தனர் கொளலே. (௩௨)

கஉகூ நிரைநிரை சொற்றவை நேர்நிரை ராகுநன். (௩௩)

க௩௦ அவைதாம் :—
மிகுதரு திருவும் புகழுஞ் செய்யும்:
சேந்தப்பூதனார். (௩௪)

க௩க ஓரசைச் சீரு நாலசைச் சீரு
மீரசைச் சீரு ளோரிரு சீரு
மங்கலம் புணரினு மங்குதல செய்யும்:
கோவூர்க்கிழார். (௩௫)

உ.—மங்கலச் சொல்.

க௩உ பொன்பூத் திருமணி புனலா ரணங்கடல்
செங்கதிர் திகிரி தேர்பரி யெழுத்தே
மாநிலங் கங்கை மலைபுக ழமுதங்
கார்புய லுலகங் களிறே யருந்ததி
பார்மதி நாள்சீர் ரெண்டுட னென்ன
வெண்ணிய சொல்லே யவையல பிறவுங்
கண்ணிய மங்கலச் சொல்லெனக் காட்டினர். (க)

க௩௩ சொல்லெனப் படுபவை சொல்லுங் காலைத்
திருப்பொன் பூமி புனன்மணி கடல்யா
றெழுத்தமு தெழின்மழை பசுங்கதிர் செஞ்சுடர்
நாள்சொன் ஞெண்டு நாட்டிய பரிமலை
கருட னருந்ததி மற்றிவை யென்ப
நிலைபெறு மங்கல நெறிநிற் பனவே:
பொய்கையார். (உ)

௧௫௪ செப்பிய வுடமையொடு சேரா தாயின்முத
னிற்பன மக்கட் காவெனி னோர்ந்திலர்
பற்றவை கடவுளா முன்னிலை யாகுமே. (௩)

௧௫௫ உயிரொடு புணரா வெண்ணப் பிணையுஞ்
செயிர்ற விணையுந் தெய்வத் தகுமே. (௪)

௧௫௬ முதிய வெய்யொடு புணரா துயரெழுத
நாதி நிற்பி *னைந் தகவே. (௫)

௧௫௭ உடமை பிரிவு பிரா தந் லோ:

இந்திரகாளியார். (௬)

௧௫௮ நரக நட் விலகு டமுதொடு வினைமை
புகில வெண்ப புலமை யோரே:

பரணர். (௭)

௧௫௯ முன்னைந் தேமுதன் பானெழுத் தான்ற
வொற்றுட னென்னெழுஞ் சொற்ற முறையிற்
பலமொழு நட் படர்று சொல்லா லகறுமி
யொருமொழு டடி வருமொழி பற்றித்
திரிந்த வொழியத் திரிந்த சொல்லினுட்
டெரிவோர் வனைபுனி மறந்து நட்டது
மங்கலச் சொலவென வகுத்தனர் புலவர். (௮)

௧௬௦ முன்னிலை யெழுத்தின் †வியநிலை நலனே
‡சமநிலை யாயின் முதல்வற் கனமே. (௯)

௧௬௧ சொல்லிய மரபின் மங்கலஞ் சிதைந்தப்
புல்லுதல் குற்றப் பொருட்டலை மகற்கே. (௧௦)

௧௬௨ தொடுகழல் வேந்தன் றன்னை தோறும்
வடுவறு பரிசில் வழங்கா தோருங்
கெடுதல் வேண்டி சிதைத்தலு முரித்தே. (௧௧)

---

* ஆனந்தம்—சாக்காடு.

† வியம்—ஒற்றை யெண்.

‡ சமம்—இரட்டை யெண்.

## ௩—பெயர்ப் பொருத்தம்.

௧௪௩ எண்வகைப் பெயரு நண்ணுதல் செப்பிற்
குலங்குடி கோத்திர நலம்பெறு குணமே
மனமே யாணை மன்னிய சிறப்பே
யியற்பெய ரென்றிவை நயமு ளியன்ற
சிறப்பியற் பெயரெனு மிருதிறத் திற்கு
மயக்கற மொழிமுத லெடுக்குஞ் சொல்லுடன்
பொருத்தங் கொள்வர் கருத்துணர்ந் தோரே. (௧)

௧௪௪ பார்ப்பா ரரசர் வணிகர்வே ளாளரெனப்
பாற்படு நாற்பெயர் குலப்பெய ராகும். (௨)

௧௪௫ குடிப்பெய ராவன கூறுங் காலைச்
சேரன் சோழன் பாண்டிய னென்றிப்
போல்வன பிறவும் பொருந்தக் கொளலே. (௩)

௧௪௬ கோத்திரப் பெயரே கூறுங் காலைத்
தாதைகுடிப் பெயரைத் தந்தகைத் தியற்றல். (௪)

௧௪௭ குணப்பெய ரேனைப் புலவோர் கொடுப்பத்
தணப்பில வாகித் தழூஉம் பெயரே. (௫)

௧௪௮ மனப்பெய ராவன தனக்குத் தானே
யெனக்கிது வேண்டுமென் றெய்தும் பெயரே. (௬)

௧௪௯ ஆணைப் பெயரே வலியோ ரஞ்ரப்
பேணி யுலகம் பேசும் பெயரே. (௭)

௧௫0 சிறப்புப் பெயரே தெரியுங் காலைச்
சிறப்புடை வேந்தன் கொடுக்கும் பெயரே. (௮)

௧௫௧ சாதியி னுள்ளோர் தமக்குத் தாமே
நீதிகொள் சிறப்பியற் பெயர்கொளற் குரியர். (௯)

௧௫௨ முடியுடை வேந்தன்முற் குலத்தோர்க் கல்லது
பட்டமும் பூவும் பூணு மாழியு
நட்டமி னலமலி சிறப்புப் பெயருங்
கொடாஅ ரெனமொழிப குலமொழிப் புலவர். (௧0)

௧௫௩ வினைசெயன் மருங்கின்மிக் கோரும் பெறுப. (௧௧)

கடுச தந்தை மகப்பெயர் முந்திய குலப்பெயர்
மனப்பெயர் கோத்திரங் குணப்பெய ராணை
யியற்பெயர் சிறப்புடைப் பெயரிரண் டாகுங்
கயக்கறு முதன்மொழி பொருத்தங் கொளலே. (கஉ)

சொல்லியல் முற்றிற்று.

## இனவியல்.

கடுடு வெள்ளை யகவ றுள்ளுகலி வஞ்சி
யென்னு நாற்பா விவற்றுட னியன்மருட்
பாழிசை துறைவிருத் தங்களென் றிவற்றிற்
சூழ்வகை யினம்பல சொல்லுத லினவியல். (க)

கடுசு ஒன்றே யாகியு மொன்றுபல வாகியும்
பலவொன் றாகியும் பாற்படு மினமே. (உ)

கடுஎ அவற்றுள் ;—
ஒன்றே யாகிய வினமெனப் பட்டன
உலாவாற் றுப்படை வகைமடன் முதலாயின. (ங)

கடுஅ ஒன்றுபல வாகிய வினமந் தாதி
கோவை காப்பிய மாதியாகக் கூறுவன. (ச)

கடுகூ பலவொன் றாகிய வினமெனப் பட்டன
கலித்தொகை குறுந்தொகை * நெடுந்தொகை முதலாயின. ()

கசுo பலவொன் றாகிய வினமெனப் பட்டன
கலம்பக மும்மணிக் கோவைமுத லாயின. (சு)

### க.—பாப்பொருத்தம்.

(வெண்பா.)

கசுக அந்தணர் சாதி யாகிய வெள்ளைக்குச்
சந்திரன் றன்னொடு தகைமிகு வியாழன்
கடவுளர் கார்த்திகை முதலேழ் நாளா
மீனங் கடகந் தேளோ யோரை
சந்தனம் விரைபூ வந்தண் மல்லிகை

* நெடுந்தொகை என்பது அகநானூறு.

வெண்மதி நிறனே வண்ண நிலனே
முல்லை யென்னச் சொல்லினர் புலவர். (க)

(ஆசிரியப்பா.)

கசுஉ காவலர் சாதி யாகிய வகவற்
காகிய கடவுளர் செங்கதிர் செவ்வாய்
நாளே மகமுத லுளே பூராடுஞ்
சிங்கந் தனுவே மேட மோரை
செஞ்சந் தனம்விரை கழுநீர் பூவே
செந்நிற நிறனே நன்னிலங் குறிஞ்சி. (௨)

(கலிப்பா)

கசுங நெடுநிலைக் கலியே வணிகர் சாதி
கடவுளர் சனிபுதன் கருதிய நாளே
யநுடமுத லாறே யோரை துலாங்குட
மிதுனஞ் சந்தனம் விரைபூர சண்பகம
பொன்னிற நிறனே நன்னில நெய்தல். (ங)

(வஞ்சிப்பா.)

கசுச எஞ்சிய வேளாண் சாதி வஞ்சி
நாளே யவிட்ட முதலேழ் நாளா
மிடபங் கன்னி மகர மோரை
சார்ந்த விரையே தண்ணறுங் கலவை
யேந்திய போதே யின்னறு நீல
நீல நிறனே நெடுநில மருதம். (ச)

கசுரு நால்வகைப் பாவிற்கு மேலோர் வகுத்த
வினங்களும் பெறுமென நினைந்தனர் கொளலே. (ரு)

கசுசு நால்வகைப் பாவு நால்வகைக் குலத்தின்
பால்வகைப் படுமே முதலன விரண்டின்
புணர்ச்சி மருட்பாப் பொருந்தா வருணம். (சு)

கசுஎ நாளு மோரையு நலத்தகு நிலனும்
விரையுஞ் சாதியு நிறனுங் குணனு
முறைபெறும் * பாநரர்க் குடைய வென்ப;
கல்லாடனூர். (எ)

* 'பாநான்குடைய' பி-ம்

௧௫௮ அந்தர் சாதிக் கந்தப் பாவே
தந்தனர் புலவர் தவிர்ந்தனர் வரையார். (௮)

௧௫௯ வெள்ளையு மகவலும் விருத்தமுங் கலியும்
வஞ்சியு மெஞ்சா மங்கலம் பொருந்தும். (௯)

௧௬0 வெள்ளை யகவல் விருத்தங் கலியே
வஞ்சி யென்றிவை மங்கலப் பாவே;

அவிநயனார். (௧0)

## உ—பாவினம்.

௧௬௧ மேதகு சாதகம் பிள்ளைப் பாட்டே
கோதில் வேந்தன் குடைமங் கலமே
யோதிய வொருபோ கம்மந்த கலம்பக
மூலாவே சின்னப் பூவே பரணி
பழுதின் படன்மறம் பல்சந்த மாலை
யிணைமணி மாலை யிரட்டைமணி மாலை
மும்மணி மாலை நான்மணி மாலை
கலம்பக மாலை மும்மணிக் கோவை
யருங்கலி யொலியே யானைத் தொழிலே
வருக்க மாலை நாம மாலை
திருக்கிளி யின்னிசை சிலப்பி கழியே
யெழில்புனை வாள்குடை தொழில்புனை வேல்கோ
லழிவி றேரைப் படை விருத்த
நாழிகைக் கவியே நவமணி மாலை
கைக்கிளை யரிபிறப் பட்டமங் கலமே
யில்லற வெள்ளை யெழில்புனை தாரகை
சொல்லிய தாண்டகந் துகளறு பதிகஞ்
சீர்மெய்க் கீர்த்தி செருக்கள வழியே
யாற்றுப் படைவகை கண்படை துயிலெடை
விளக்கு நிலையே வெஞ்சினக் கடாநிலை
யெண்ணிய யாண்டே கண்ணிய பறைநிலை
யரும்பொரு ணிறுத்த வந்தா தித்தொகை
புறநிலை வாயுறை செவியறி வுறூஉவே

பாத மாதி பணைமுலை நயனங்
குற்றமி லுழத்தி குறத்திப் பாட்டே
யொருபா வொருபஃ திருபா விருபஃது
கோவை கணக்கே தொடர்நிலைப் பாட்டே
கடைநிலை கையறு நிலையெனக் கருதி
யிடனறி புலவ ரியம்பின ரினமே. (க)

க.—சாதகம்.

கஎஉ தோற்றிய சாதகஞ் சாற்றுங் காலைப்
பற்றிய கலியுகத் துற்ற யாண்டிற்
றிருந்திய சகாத்தமு மாண்டும் பொருந்திய
ஞாயிறும் பக்கமு மேய வாரமு
மிராசியு மன்னுற மொழிதற் குரிய. (உ)

உ.—பிள்ளைப்பாட்டு.

கஎங பிள்ளைப் பாட்டே தெள்ளிதிற் கிளப்பின்
மூன்று முதலா மூவே ழளவு
மான்ற திங்களி னறைகுவர் நிலையே. (ங)

கஎச ஒன்றுமுத லையாண் டோதினும் வரையார்;

பொய்கையார். (ச)

கஎரு தோற்ற முதல்யாண் டிரெட் டளவு
மாற்றல் சான்ற வாண்பாற் குரிய. (ரு)

கஎசா காப்புமுத லாகிய யாப்புவகை யெல்லாம்
பூப்பு நிகழ்வளவும் பெண்பாற் குரிய;

இந்திரகாளியார். (சா)

கஎஎ தொன்னிலை வேந்தர் சுடர்முடி சூடிய
பின்னர்ப் பெறுஅர் பிள்ளைப் பாட்டே;

பரணர். (எ)

கஎஅ காப்பொடு செங்கீரை தால்சப் பாணி
யாப்புறு முத்தம் வருகவென் றன்முத
லம்புலி சிற்றில் சிறுபறை சிறுதேர்

நம்பிய மற்றவை * சுற்றத் தளவென
விளம்பினர் தெய்வ நலம்பெறு புலவர். (௮)

௧௭௯ தந்தை தாயே பாட்டன் பாட்டி
முந்துற வுரைத்தன் முறைமை யென்ப. (௯)

௧௮௦ திருந்திய பெண்டக வாயின் விரும்பிய
பின்னர் மூன்று மன்னுநீக கென்றனர். (௧௦)

௧௮௧ சிற்றில் சிறுதேர் சிறுபறை யொழித்து
மற்றவை மகளிர்க்கு வைப்ப தாகும். (௧௧)

௧௮௨ சிற்றி லிழைத்தல் சிறுசோ றாக்கல்
பொற்புயர் குழமகன் புனைமணி யூசல்
யாண்டு ராடுதி லெழிற்காம னோன்பொடு
வேண்டுத லுள்ளி விளம்பினர் புலவர். (௧௨)

௧௮௩ திருமா லரனே திசைமுகன் கரிமுகன்
பொருவேல் முருகன் பரிதி வடுக
னெழுவகை மங்கைய ரிந்திரன் சாத்த
னிதியவ னீலி † பதினொரு மூவர்
திருமக ளுமைக டிகழ்மதி யென்ப
மருவிய காப்பினுள் வருங்கட வுளரே. (௧௩)

௧௮௪ காப்பின்முத லெடுக்குங் கடவு ளானே
பூக்கமழ் துழாய்முடி புனைந்தோ னாகும். (௧௪)

௧௮௫ அவன்றன்—
காவற் கிழமை யுடைமை யானும்

---

* "சுற்றத் தளவுங் கவிக்கிகல்லை யாயக்கொண்டு சொல்லுவரே." என்றார் நவநீதப்பாட்டிய லுடையாரும்.

† பதினொருமூவர்—பன்னிருவர் ஆதித்தர், பதினொருவர் உருத்திரர், எண்மர் வசுக்கள், இருவர் மருத்துவர் ஆகிய முப்பத்து மூவர். "நால்வே றியற்கைப் பதினொரு மூவரோடு" என்றார் திருமுருகாற்றுப்படையினும். "பதினொரு மூவரும் பங்கயத் தோனும் பகவதியு, நிதிமுத லோனும் பரிதி யுஞ் சாத்தனும்" என்பதனன் நவநீதப்பாட்டியலாரும் பன்னிருவர்ஆதித் தரின் வேறாய்ப் பரிதியெனக் கூறுதல்காண்க.

பூவின் கிழத்தியைப் புணர்த லானு
முடியுங் கடகமு மொய்பூந் தாருங்
குழையு நாலுங் குருமணிப் பூணு
மணியுஞ் செம்ம லாக லானு
முன்னுற மொழிதற் குரிய னென்ப. (கரு)

கஅசு. விரிசடைக் கடவுளும் வேய்த்தோ ளொருவரு
மருளொடு காக்கவென் றறையுங் காலைக்
கொலையுங் கொடுமையுங் கூற்று மாகிய
பெயருஞ் சின்னமும் பிறவுந் தோன்றக்
கங்கை திங்கள் கடுக்கை மாலை
மங்கல மழுவொடு பலபக ளொன்றிவை
விளங்கக் கூறல் *விளம்பிய மரபே. (கசு)

கஅஎ ஒன்பது பதினொன் றென்பது காப்பே.

பரணர். (கஎ)

கஅஅ. அகவல் விருத்தமுங் கட்டளை யொலியுங்
கலியின் விருத்தமுங் கவின்பெறு பாவே. (கஅ)

கஅகூ. பிள்ளைப் பாட்டே நெடுவெண் பாட்டெனத்
தெள்ளிதிற் செப்பும் புலவரு முளரே. (ககூ)

முதற்க ணெடுக்கு மகவல் விருத்த
மெழுத்தின் பகுதி யெண்ணினர் கொளலே. (உ0)

ககூ0. நீணெறி புவகை யாண்மக விற்கே
மைம்மூ வாண்டே †யவர்முதற் சாற்றல். (உக)

ககூக. பொங்குகதி ரிளம்பிறை புலியின் சிறுபறழ்
குஞ்சரக் குழவி கோளரிக் குருளை
யடலிள விடையே யாறிரண் டாண்டி
னிடைநிக ழுவமை யென்மனார் புலவர். (உஉ)

* 'வழங்கிய' பி-ம்.

† 'யாறுமுதற்' பி-ம்.

௧௬௨. பெண்மக விற்குப் பேசு மிடத்து
மானின் கன்று மயிலின் பிள்ளை
தேனி னின்பத் தெள்ளாத் தேறல்
கரும்பி னிளமுளை கல்லாக் கிள்ளை
யிளங்கனிர் வல்லி யென்றிவை யெல்லாம்
பொய்வளை மகளிர்க் கெய்திய வுவமை. (உ௩)

௧௬௩. இளங்கதிர்த் திங்க ளெல்லார்க்கு முரித்தே: (உ௪)

பரணர்.

௧௬௪. அவைதாம்—
பிள்ளைப் பாடலிற் பிள்ளைப் பாட்டாய்ப்
பிறப்பே யோகை காப்பே வளர்ச்சி
யச்ச முறுத்த லுடன்செங் கீரை
தால்சப் பாணி முத்தம்வா ரானை
யம்புலி சிற்றில் குழமக னூச
லென்றனர் பிறவுந் தொன்னெறி மரபிற்
றத்தந் தொழிற்குத் தகுவன புகற
லெத்திறத் தோர்க்கு முரிய வென்ப
கொச்சகக் கலியொடு நெடுவெண் பாட்டே. (உ௫)

௧௬௫ நெடுவெண் பாட்டின் முந்நான் கிறவாது
தொழிலொடு குறித்துத் தோன்றுஞ் செய்யு
ளொன்றுமுதன் றைந்தே ழொன்பான் பதினொன்
றென்றிவை யிவற்றி *னிகந்தன விழுக்கே. (உ௬)

௧௬௬ பிறப்பே யோகை பேணுறு வளர்ச்சி
சிறைப்பட வச்ச முறுத்தலொடு நான்கு
மாரா யுங்கா லந்நுமுன் றிடையா
யோரே மொருபொருட் குயர்ச்சியிழி பொன்றே:

இந்திரகாளியார். (உ௭)

௩.—வேந்தன்றுடைமங்கலம்.

௧௬௭ முன்னீ ரடியினுங் குடைத்தொழி லியம்பியும்
பின்னீ ரடியிற் றனிநிலை யிரட்டியுங்

* 'னிழிந்தன' பி-ம்.

கொற்றவற் *புகழ்ந்து குடையென முடிக்கு
நற்றிற நேரசைக் குடைவெண் பாட்டே. (௨௮)

௧௯௮ அதுவே ;—
குடைச்சொற் சிந்தடி யீற்றிலவைத் தரசக்
குடைச்சொல் லாதிக் குளகத் தடக்கி
யீற்றய லடியினு மீற்றினு மிறைவனைப
போற்றிப் புகழ்ந்து புகறல் வேண்டும

இந்திரகாளியார். (௨௯)

௧௯௯ ஒட்டிய குடைப்பொரு ளுரைக்கு நேரசை
கட்டளை யாகுதல் கடனென மொழிப. (௩0)

௨00 கட்டளை யென்பது கருதுங் காலை
யீற்றடி யொழிய வேனைமூன் றடியும
பாற்படு மெழுத்தின் பகுதியொப் பதுவே. (௩௧)

௨0௧ இதற்கே யாமெழுத் தெண்ணுங் காலைக்
குற்றிய லுகரமுங் குற்றிய லிகரமு
மொற்று மொழித்துயி ருயிர்பெயயுங் கொளலே. (௩௨)

௨0௨ மோனையு மெதுகையுந் தொடையென மொழிப. (௩௩)

௨0௩ சாற்றியமா ஞெத்த றனிமை மிகுதிசயம்
போற்றுமுடன் பாடு புலனுண்மை-யேற்றுந
தலைப்பாடு பாதி தருகொடை பதது
நிலைப்பாடு நேரசையா னேர். (௩௪)

ச.—ஒருபோது.

௨0௪ தன்மை முன்னிலை படர்க்கையுட் டன்மை
யொழித்திரு வகையு மொன்றுற் கடவுட்
பழிச்சு மொருபோ கிருமூன் றுறுப்பு
மமைந்தொருங் கியலு நயந்திகழ் கலியுள்
வண்ணகம் போதினு மெண்ணே போதினு
மோதிய வுறுப்பாற் பேர்புகன் றனரே. (௩௫)

* 'புணர்ந்து' பி-ம்.

உ0ரு. வரன்முறை பிறழ வுறுப்பு மயங்கி
மிக்குங் குறைந்தும் வருவது கொச்சக
வொருபோ காமென வுரைத்தனர் புலவர். (ருசு)

உ0சு. * கொச்சகத் தன்மையிற் கொச்சக மென்ப. (ருஎ)

உ0எ. தேவப் பிரணவ மெனும்வட மொழியைத்
தேவ பாணியெனத் திரித்துவழங் கினரே. (ருஅ)

உ0அ. தேவ பாணி தெரியுங் காலை
மாசறு துழாய்முடி மலிந்த சென்னி
நீர்நில மளந்த நெடியோன் மேற்றே. (ருகூ)

உ0கூ. சுடர்கதிர்த் திங்கள் சூடி யோற்கும்
படர்திரைப் பனிக்கடன் மாகடிந் தோற்கு
முரிய காலமு முளவென வொழிப. (சு0)

உக0. வேந்தன் வேண்டு நெறிசெய் தாலும்
வாய்ந்த மதியு மரபும் வாழ்த்தலும்
விதியென மொழிப மெய்ந்நெறிப் புலவர். (சுக)

## ரு—கலம்பகம்.

உகக. சொல்லிய கலம்பகஞ் சொல்லி லொருபோகு
முதற்கண் வெண்பாக் கலித்துறை புயமே

---

* 'கொச்சக மென்பது ஒப்பினாகியபெயர். ஓராடையுள் ஒருவழியடுக்கியது கொச்சகமெனப்படும்: அதுபோல, ஒரு செய்யுளுட் பல குறள் அடுக்கப்படுவது கொச்சக மெனப்படும்' (தொல், செய், கஉக) எனவும், 'இனிக் கொச்சக மென்பது ஒப்பினாகியபெயர்: என்னை? பலகோடுபட அடுக்கியுடுக்கும் உடையினைக்கொச்சகமென்ப; அதுபோலச் சிறியவும் பெரியவும் விராயடுக்கியுந் தம்முளொப்ப அடுக்கியுஞ் செய்யப்படும் பாட்டதனைக் கொச்சகமென்றாராகலினென்பது. இக்காலத்தார் அதனைப்பெண்டிர்க்குரிய உடையுறுப்பாக்கிக்கொய்சகமென்று சிதைத்தும்வழங்குப. (ஷை, ஷை. கருஅ) எனவும் **பேராசிரியரும்**, "பலகோடுபட அடுக்கியுடுக்கும்உடையினைக்கொச்சக மென்பவாகலின் அதுபோலச் சிறியவும் பெரியவும் விராயடுக்கியுந் தம்முளொப்ப அடுக்கியும் வருஞ் செய்யுளைக் கொச்சகமென்றார். இது ஒப்பினாகியபெயர். இக்காலத்து இது மகளிர்க்குரியதாய்க் கொய்சக மென்றுவழங்கிற்று" (ஷை, ஷை, ஷை) என **நச்சினார்க்கினியரும்** கூறியவாற்றானறிந்துகொள்க. இனிக் கொச்சைத்தன்மையினென்பதூஉம் பாடம். "கொச்சக மராகம்" (தொல், செய், கஉக) என்பதனுரையில் "சிறப்பிலதனைக்கொச்சையென்று கூறும் வழக்கு நோக்கி இதனையும் சிறப்பின்மையாற் கொச்சகமென்றா ரென்பாருமுளர்" என அந்நச்சினார்க்கினியரே கூறினர்.

யம்மனை யூசல் யமகங் களிமறஞ்
சித்துக் கால மதங்கி வண்டே
கொண்டன் மருள்சம் பிரதம் வெண்டுறை
தவசு வஞ்சித் துறையே யின்னிசை
புறமே யகவல் விருத்த மெனவருஞ்
செய்யுட் கலந்துட னெய்திய வந்த
மாதி யாக வருமென மொழிப. (சஉ)

உகஉ. தேவர்க்கு முனிவர்க்குங் காவ லரசர்க்கு
நூறு கொண்ணூற் றைந்துதொண் ணூறே
ஒப்பி லெழுப தமைச்சிய லோர்க்குச்
செப்பிய வணிகர்க் கைம்பது முப்பது
வேளா ளர்க்கென விளம்பினர் செய்யுள்.

ங—உலா. (சங)

உகங முதனிலை பின்னெழு நிலையுலா வெண்கலி. (சச)

உகச பாட்டுடைத் தலைவ னுலாப்புற வியற்கையு
மொத்த காமத் தினையாள் வேட்கையுங்
கலியொலி தழுவிய வெள்ளடி யியலாற்
றிரிபின்றி * நடப்பது † கலிவெண் பாட்டே.

பொய்கையார். (சரு)

உகரு பேதை முதலா வெழுவகை மகளிர்கண்
டோங்கிய வகைநிலைக் குரியா னொருவனைக்

* 'நடப்பினது' பி-ம்.

† "இனி யொருபொருணுதலாது திரிந்து வருங் கலிவெண்பாட்டும் ஈண்டுக்கூறிய நெடுவெண்பாட்டோ டொருபுடை ஒப்புமையின் அக்கலி வெண்பாட்டாக இக்காலத்தார் கூறுகின்ற உலாச்செய்யுளும் புறப்புறக் கைக்கிளைப் பொருட்டாதல் ஒன்றெனமுடித்தல் என்னு முத்தியாற் கொள்க. அவ்வுலாச் செய்யுளிரண்டுறுப்பாயும் வெண்பாவிற் கெட்டும் வருதலிற் கலிவெண்பாவின் கூறும். இக்காலத்து அதனை ஓருறுப்பாகச் செய்து செப்பலோசையாகவுங் கூறுவர். அது துள்ளலோசைக்கே யேற்குமாறுணர்க" (தொல், செய், ககஅ) எனவும், "அது திருவுலாப்புறத்துள் 'வாமான வீசன் வரும்' (சேரமான் பெருமாளுயனுர் ஞானவுலா) எனமுடித்து மேல் வேறோருறுப்பாயவாறும் ஒழிந்தவுலாக்களுள் வஞ்சியுரிச்சீர் புகுந்தவாறும் அடிவரையறையின்மையும்" (ஷை, ஷை, கசுக) எனவும் நச்சினர்க்கினியர் கூறுவர்.

காதல்செய் தலின்வருங் கலிவெண் பாட்டே. (சசு)

உகசு குடிநெறி மரபு கொளல்கொடை விடிய
னன்னீ ராட னல்லணி யணித
ரொன்னக ரெதிர்கொள னன்னெடு வீதியின்
மதகளி றூர்தன் முதனிலை யாகும். (சஎ)

உகஎ ஆதி நிலையே குமார்கோள லென்றெடுத்
தோதிய புலவரு முளரென மொழிப. (சஅ)

உகஅ ஏழு நிலையு மியம்புங் காலை
பேதை பெதும்பை மங்கை மடந்தை
யரிவை தெரிவை பேரிளம் பெண்ணெனப்
பாற்படு மகளிர் பருவத் தாத
னோக்கி யுரைப்பது நுண்ணியோர் கடனே. (சகூ)

உககூ பேதைக் கியாண்டே யைந்துமுத லெட்டே. (ரு0)

உஉ0 பெதும்பைக் கியாண்டே யொன்பதும் பத்தும். (ருக)

உஉக மங்கைக் கியாண்டே பதினொன்று முதலாத்
திரண்ட பதினொ ளைவுஞ் சாற்றும். (ருஉ)

உஉஉ மடந்தைக் கியாண்டே பதினைந்து முதலாத்
திடம்படு மொன்பதிற் றிரட்டி செப்பும். (ருங)

உஉங அரிவைக் கியாண்டே யறுநான் கென்ப. (ருச)

உஉச தெரிவைக் கியாண்டே யிருபத் தொன்பது. (ருரு)

உஉரு ஈரைந் திருநான் கிரட்டி கொண்டது
பேரிளம் பெண்டிக் கியல்பென மொழிப.

பொய்கையார். (ருசு)

உஉசு காட்டிய முறையே நாட்டிய வாண்பாற்
கெல்லையும் பெயரு மியல்புற வாய்ந்து
சொல்லிய தொன்னெறிப் புலவரு முளரே. (ருஎ)

உஉஎ பாலன் யாண்டே யேழென மொழிப. (ருஅ)

உஉஅ மீளி யாண்டே பத்திவை காறும். (ருகூ)

உஉகூ மறவோன் யாண்டே பதினான் காகும். (சு0)

௨௩0 திறலோன் யாண்டே பதினைந் தாகும். (௬௧)

௨௩௧ பதினா றெல்லை காளைக் கியாண்டே. (௬௨)

௨௩௨ அத்திற * மிறந்த முப்பதின் காறும்
விடலைக் காகு மிகினே முதுமகன்.

அவிநயனார் (௬௩)

௨௩௩ நீடிய நாற்பத் தெட்டி னளவு
மாடவர்க் குலாப்புற முரித்தென மொழிப. (௬௪)

௨௩௪ சிற்றில் பாவை கழங்கம் மனையே
பொற்புறு மூசல் பைங்கிளி யாழே
பைம்புன லாட்டே பொழிலவிளை யாட்டே
நன்மது நுகர்ச் சின்ன பிறவும்
மலரவர்க் குரிய வாகு மென்ப. (௬௫)

௨௩௫ வேந்தர் கடவுளர் விதிநூல் வழிபுணா
மாந்தர் கலிவெண் பாவிற் குரியர். (௬௬)

௨௩௬ நாலு வருணமு மேவுத லுரிய
வுலாப்புறச் செய்யுளென் றுரைத்தனர் புலவர்,

அவிநயனார் (௬௭)

## எ—சின்னப்பூ †

௨௩௭ மலையுமி யாறு நாடு மூருமி
பரியுங் களிறுங் கொடியு முரசுந
தாரும் பெயரு மெனத்தெரி பத்துஞ்
சொல்லு மெல்லையின் முத்தப்பகுறட கண்ணே
சின்னத் தொழிலை மன்ன வைத்துப
பின்னர்க் குறளுட் பாடுடைத் தலைவ
ரியற்பெயர் வைத்தவர்க் குரிமை தோன்றுஞ்

---

* ‘மியன்ற’ பி-ம்.

† “வழக்கொடு சிவணிய வகைமை யான” (தொல். புற. ௩௧) என்பத னுரையில் நச்சினார்க்கினியர் “சிவணியவகைமை’ என்றதனானே முற்கூறிய வற்றோடே நாடும், ஊரும், மலையும் யாறும் படையுங் கொடியுங் குடையும் முரசும் நடைநவில்புரவியும் களிறுந் தேருந் தாரும் பிறவும் வருவனவெல் லாங் கொள்க. இவற்றுட் சிலவற்றை வரைந்துகொண்டு சின்னப்பூ என்று பெயரிட்டு இக்காலத்தார் கூறுமாறுணர்க” என்பர்.

செயல்பெற வைப்பது சின்ன மதுவே
யாதிப் பாவின தகனினம் வருமே. (சூஅ)

உகூஅ மலையே யாறே நாடே யூரே
பறையே பரியே †களிறே தாரே
‡பெயரே கொடியே யென்றிவை தசாங்கம். (சூகூ)

உகூகூ பத்தே யேழே மூன்றே சின்னம். (எ0)

அ.—பரணி.

உச0 மயக்கறு கொச்சகத் தீரடி யியன்று
நயப்புறு தாழிசை யுறுப்பிற் பொதிந்து
வஞ்சி மலைந்த வழிஞை முற்றித்
தும்பையிற் சென்ற தொடுகழன் *மன்னனை
வெம்புசின மாற்றான் றானைவெங் களத்திற்
குருதிப் போரா றுபெருகுஞ் செங்களத்
†தொருதனி யேத்தும் பரணியது பண்பே. (எக)

உசக தேவர் வாழ்த்தே கடைநிலை பாலை
மேவி யமருங் காளி கோயில்
கன்னியை யேத்த லலகை விநோதங்
கனநிலை நிமித்தம் பசியே யோகை
பெருந்தேவி பீட மழகுற விருக்க
வமர்நிலை நிமித்த மவள்பதம் பழிச்சா
மன்னவன் வாகை மலையு மளவு
மரபினி துரைத்தன் மறக்களங் காண்டல்
செருமிகு களத்திடை யடுகூழ் வார்த்தல்
பரவுத லின்ன வருவன பிறவுந்
தொடர்நிலை யாகச் சொல்லுதல் கடனே. (எஉ)

உசஉ யானை சாய்த்த வடுகளத் தல்ல
தியாவரும் பெறாஅர் பரணிப் பாட்டே. (எங)

---

† களிறெழுத்துப் படைகோடலுமுண்டு. அவ்வாறு திருவாசகத்துள்ள திருத்தசாங்கத்துக் காண்க.

‡ பெயரை ஆணை என்பாருமுளர். (இலக்கணவிளக்கப்பாட்டியல்-உஉ)

* 'மன்னன்' எனவும், † 'தொருவற்போற்றும்' எனவும் பி-ம்.

உ௪௩ ஏழ்தலைப்பெய்த நூறுடை யிபமே
யடிகளாத் தட்டாற் பாடுதல் கடனே. (எ௪)

௯.—மடல்.

உ௪௪ அறம்பொருள்*வீடு திறம்பெரி தழித்துச்
சிறந்த வேட்கை செவ்விதிற் பராஅய்ப்
பாட்டுடைத் தலைமக னியற்பெயர்க் கெதுகை
நாட்டிய வெண்கலிப் பாவ தாகித்
தனிச்சொல் லொரீஇத் தனியிடத் தொருத்தியைக்
கண்டபி னந்த வொண்டொடி யேத்தன்
மற்றவன் வடிவை யுற்ற கிழியெழுதிக்
காமங் கவற்றக் கரும்பனை படன்மா
வேறுவ ராடவ ரென்றனர் புலவர். (எ௫)

உ௪௫ மடன்மாப் பெண்டி ரேறா ரேறுவர்
கடவுளர் தலைவ ராய்வருங் காலை. (எ௬)

உ௪௬ கடவுளர் மேற்றே காரிகை மடலே. (எஎ)

உ௪எ எந்தை யுடைப்பெயர்க் கெதுகை சாற்றி
யந்தமி லின்பம் பொருளா வேத்திப்
பொருளு மறனும் வீடும் பழித்து
மடன்மா வேறுதன் மாதர்க் குரித்தே.* (எஅ)

௰.—மறம்.

உ௪அ பெருநில வேந்தன் மகட்பால் வேண்டி
யொருபெருந் தூத னுரைத்தமொழி கேட்டுக்
குறுநில மறவன் †வெஞ்சினந் திருகி
மாற்றமிக வுரைப்பது மறமென மொழிப. (எ௯)

௧௧.—பல்சந்தமாலை.

உ௪௯ சொன்ன கலம்பக வுறுப்புவகை நீக்கி
மன்னிய பத்து முதனூ றளவா

---

* இவ்வாறு வந்தன மங்கையர்கோன் அருளிச் செய்த பெரியதிருமடல் சிறியதிருமடல் என்பன.

† 'வெஞ்சின வஞ்சின' பி-ம்.

வந்த பரபின் வரூஉஞ்செய்யுண் முதலா
வந்தது பல்சந்த மாலை யாகும். (௮௰)

### ௧௨.—இணைமணிமாலை.

௨௫௦ இணைமணி மாலை தனிவிலந் தாதியாய்
மறையவர் பாவும் வணிகர்தம் பாவின்
முறையு மியைந்தீ ரைம்பது வருமே. (௮௧)

௨௫௧ வெண்பாக் கலித்துறை யிரண்டு மியைந்த
வொண்பா நூறவை யிணைமணி மாலை.* (௮௨)

### ௧௩.—இரட்டைமணிமாலை.

௨௫௨ வெண்பா முதலாக் கலித்துறை பின்வரு
மிந்த விருப திரட்டைமணி மாலை. (௮௩)

௨௫௩ ஆதி யந்தம் வெண்பாக் கலித்துறை
யேகமின்றி வருவ திரட்டைமணி மாலை
யதுவே நாலந் தியலு மென்ப. (௮௪)

### ௧௪.—மும்மணிமாலை.

௨௫௪ விருத்தவெள்ளை கலித்துறையகவல்
விருத்த மும்மணி விளம்புமந் தாதி.† (௮௫)

### ௧௫.—நான்மணிமாலை.

௨௫௫ வெண்பாக் கலித்துறை யகவல் விருத்த
நண்பாய் வருவது நான்மணி மாலை. (௮௬)

௨௫௬ ‡அகவலு மகவல் விருத்தமு நாற்ப
தகவலை முன்வைத் திறைவது கடனே. (௮௭)

௨௫௭ வெள்ளை கலித்துறை யகவல் விருத்தங்
கொள்வது நான்மணி ¶கோத்தவந் தாதி. (௮௮)

---

* வெண்பாவகவலிணைமணிமாலையுங் கொள்வர் இலக்கணவிளக்கப்பாட்டியலார்.

† 'மாலையந்தாதி' பி-ம்.

‡ இதற்கு அளவு முப்பது.

¶ வெண்பாக் கலித்துறை விருத்தம் அகவல் எனத்தொடுப்பர் பிற்காலத்தார்.

### கசு.—கலம்பகமாலை.

உ௫அ ஒருபோ கூடனம் மணைகனி நீக்கி
வெள்ளை முதலா வெல்லா வுறுப்புந்
தள்ளா வியலது கலம்பக மாலை. (அகூ)

உ௫கூ ஒருபோ கம்மனை யொழித்துவெண் பாமுதற்
கருதிய பெயரது கலம்பக மாலை. (கூ0)

### கஎ—மும்மணிக்கோவை.

உகூ0 வெள்ளையு மகவலு நேரிசை யாகக்
கலித்துறை வரவந் தாதி யாகி
முறைமையி னியல்வது மும்மணிக் கோவை. (கூக)

உகூக தோன்றிய வகவல் வெள்ளை கலித்துறை
மூன்றும் வருவது மும்மணிக் கோவை.* (கூஉ)

உகூஉ மும்மூன் றொருபொருண் மிசைவரு மென்ப. (கூ௩)

### கஅ—கலியந்தாதி.

உகூ௩ வல்லின மெல்லின மிடையின வெழுத்துப்
புல்லி மருங்கு போகா தொன்றிக்
குறிலெனிற் குறிலே நெடிலெனி னெடிலே
பொருந்தி நாற்கலை கொண்டோ ரடியாய்த்
திருந்து மிவ்வகை நான்கடி யாகியு
மோரொலி யாகியு மெண்ணான் காகிய
கலையொடு பொருந்தியுங் குறிலு நெடிலு
முறைமுதல் வரினு மவ்வெழுத் தாகியு
மிப்பரி சியன்ற முப்பது கட்டளை
மிக்கது கலியந் தாதி யாகும். (கூச)

உகூச வெண்கலி யுஞ்சில சிறுபான்மை வருமே. (கூ௫)

### ககூ.—ஒலியந்தாதி.

உகூ௫ தத்த மினத்தி லொப்புமுறை பிறழாது

---

* இதற்கும் அளவு முப்பது. இஃது ஆசிரியம் வெண்பாக் கலித்துறை யாகவருமெனவும், மும்மணிமாலை வெண்பாக் கலித்துறை ஆசிரியவிருத்த மாக வருமெனவுங் கொள்க.

நாலடி யீரெண் கலையொரு முப்பது
கோலிய தொலியந் தாதி யாகும். (௯௬)

௨௯௬ ஈரொலி யாகிய வெண்ணான்கு கலையெனச்
சீரியற் புலவர் செப்பினர் கொளலே. (௯௭)

௨௯௭ வன்னக மென்ப தொலியெனப் படுமே. (௯௮)

## ௨௰—யானைத் தொழில்.

௨௯௮ ஏழ்வகை நிலனு மேழ்வகை நிறையும்
பல்வகைத் தேயமு மெழுவகை யுறுப்பு
மங்கமும் வருணமும் யாண்டு மைவகைக்
கொலையு மிருவகை நடையு மைவகை
யுணர்வு முடையோர்ப் பேணலு முளப்பட
நண்ணிய வேளாண் பாவி னலம்பெற
வெண்ணி யுரைப்ப தியானைத் தொழிலே. (௯௯)

௨௯௯ கிரிசரம் வனசர நதிசர மென்றிவை
நிலைபெறு நிலமென நிறுத்திசி னோரே. (௧00)

௨௭0 உயரமு நீளமுஞ் சுற்று மளவினிற்
குறையா தியல்வது நிறையெனப் படுமே. (௧0௧)

௨௭௧ பல்வகைத் தோயங் கொல்களிறு பிறக்கும்
பல்வகைத் தேயமு மென்மனார் புலவர். (௧0௨)

௨௭௨ பாத நாலுங் கையும்வா லதியுங்
கோசமு நிலனுறத் தீண்டுதல் குறியே. (௧0௩)

௨௭௩ குலமெனப் படுவது பல்வகை வருணமு
நலனுற வுரைக்கு நலத்த தென்ப. (௧0௪)

௨௭௪ நலமிகு வாழ்நாள் பொலிவுற வியம்புதல்
யாண்டென மொழிப வியனெறிப் புலவர். (௧0௫)

௨௭௫ கையுமுற் கூறுங் கடியபிற் கூறுங்
கூர்ங்கோ டிரண்டுங் கொலைத்தொகை வகையே. (௧0௬)

௨௭௬ முன்ன ரூன்றிய காற்குறி தன்னிற்
பின்னர்ப்பத மிடுவது தோரண மென்ப. (௧0௭)

உஎஎ பிறழ விடுவது வக்கிர மதுவே
சாரிகை விகற்பமு மாகு மென்ப. (கOஅ)

உஎஅ நன்மை யியற்றலுந் தீமை யியற்றலும்
பற்றிய நன்மை தீமை நினைத்தலுங்
கயக்கறு கால நினைத்தலும் புலனே. (கOசு)

உஎசு வழுவா துடையோ ரேவ லியற்ற
லுடையோர்ப் பேண லென்மனார் புலவர். (ககO)

மேல் நண்ணிய என்றதனாலாசிரியவடியாற் பாடுவாருமுளர்.

உஅO அகவலு முரித்தென வறைகுந ருளரே. (ககக)

## உக—வருக்கமாலை.

உஅக மொழிக்குமுத லாகிய வெழுத்துக் கெல்லாம்
வருக்க முரைப்பது வருக்க மாலை. (ககஉ)

## உஉ—நாமமாலை, புகழ்ச்சிமாலை.

உஅஉ. * மைந்தர்க் காயின் வஞ்சிப் பல்வகை
நேர்ந்தவடி †மயக்க நாம மாலை. (ககங)

உஅங ஆடவர் திறத்து வஞ்சி யின்னெறி
நாடிய பாத மயங்க வைப்பி
னாம மாலை மற்றது மடந்தையர்க்
காமெனிற் புகழ்ச்சி மாலை யாகும். (ககச)

உஅச அதுவே-செங்கலை வண்ணப் பாவு மியங்கும் ;
கோவூர் கிழார். (ககரு)

உஅரு வெள்ளடி யியலாற் புணர்ப்போர் குறிப்பிற்
றுள்ளா வியல்பது புகழ்ச்சி மாலை ;
சேந்தம்பூதனார். (ககசு)

## உங—இன்னிசைத் தொகை.

உஅசு தொண்ணூ றேனு மெழுப தேனு
மின்னிசை தொடுப்பி னின்னிசைத் தொகையே. (ககஎ)

---

* 'மாந்தர்க்' பி-ம்.

† 'மடக்கு' பி-ம்.

உ௮௭ எண்ணிய வகையா னின்னிசை வெண்பாத்
தொண்ணூ றெழுபது தொடுப்பதத் தொகையே ;
கோவூர் கிழார். (௧௧௮)

## உ௪.—விருத்தவகை.*

உ௮௮ பரிசிலை யானை †வாள்குடை வேல்செங்
கோலொடு நாடூ ருறுப்பி னகவல்
விருத்தம் பத்தென வேண்டினர் புலவர். (௧௧௯)

## உ௫—ஐம்படைவிருத்தம்.

உ௮௯ சக்கரந் தனுவாள் சங்கொடு தண்டிவை
யைம்படை யகவல் விருத்த மாகும். (௧௨0)

## உ௬—நாழிகைக்கவி.

௧௯0 ஈரிரண் டியாமத் தியன்ற நாழிகைச்
சீர்திகழ் வெண்பாப் பாடுநர் யாவரு
மிருநான் கேழே ழிருநான் காமெனக்
கன்னன் முப்பது மெண்ணின ரினிதே. (௧௨௧)

உ௯௧ மன்னர் கடவுளர் முன்னிலை யாக
வன்ன கடிகை யென்னு மியல்பிற்
றெருகுநெறி யன்னவை நேரிசை வெண்பா.

முதல்யாமம் ஏழளவும் பாடி எட்டாவதில்யாமம்ஒன்றென்றும் இரண்டாம்யாமம் ஆறளவும்பாடி ஏழில் யாமம்இரண்டென்றும் மூன்றாம்யாமம் ஆறளவும்பாடி ஏழில் யாமம்மூன்றென்றும் நான்காம்யாமம் ஏழளவும்பாடி எட்டில் யாமம்நான்கென்றும் பாடின் முப்பது வெண்பாவாம். (௧௨௨)

## உ௭—நவமணிமாலை.

உ௯௨ பாவே யினமே யென்றிவை யிரண்டு
மேவிய வகையது நவமணி மாலை. (௧௨௩)

## உ௮—கைக்கிளைமாலை.

உ௯௩ ‡இரங்க வருவது மயங்கிய வொருதலை
யியைந்த நெறியது கைக்கிளை மாலை. (௧௨௪)

---

* பரி முதலியவற்றைப் பத்துப்பத்தாகக் கூறும் ஒன்பதுவகை விருத்தமும் அவ்வப்பெயரான் விளங்குமென்றுணர்க.
† 'வாளொடு வேறேர்' பி-ம்.
‡ 'இயங்க' பி-ம்.

௨௯௪ தாயர் சேரிய ராயர் தீங்குழ
றென்றல் சேமணி யன்றி றிங்கள்
வேலை வீணை மாலை கங்குல்
காம னங்கணை கண்வளர் கனவென
வெஞ்சிய நன்னிற வேனில் குயிலே
கொஞ்சிய கிள்ளை கொய்தளிர்ச் சேக்கை
பயிறரு நன்னலம் பாங்கர் பாங்கிய
ரியன்ற பருவர லென்மனார் புலவர். (௧௨௫)

௨௯௫ முல்லை யசோகு மாந்தளிர் தாமரை
யல்லி நீல மைங்கணை யாகும். (௧௨௬)

மயங்கிய என்றதனுல் ஒரினப்படுத்திப்பாடுவாருமுளர். பாடும்பொழுது மருட்பாவாற்பாடப்படும்: அல்லாதவழி ஆசிரியமும் வஞ்சியும்ஒழிய அல்லாத பாவானும் இனத்தானும் பாடப்படும். சிறுபான்மை ஆசிரியப்பாவானு மினத்தானும் பாடப்படும் எனக் கொள்க.

௨௯—அரிபிறப்பு.

௨௯௬ சேலே யாமை யேனஞ் சிங்கங்
கோல வாமனன் மூவகை யிராமர்
கரியவன் கற்கி யெனவரு கடவுளர்
புரிதரு தோற்றந் தெரிதரப் பராஅய்ப்
பாட்டுடைத் தலைவனைக் காக்க வேண்டி
யினமொழி நாட்டி யகவல் விருத்த
மொருப தியற்றுத லாழியோன் பிறப்பே. (௧௨௭)

௩௦—அட்டமங்கலம்.

௨௯௭ ஒருவனைக் காக்கவென் றிறைவனை யேத்திய
வெண்வகை யகவல் விருத்தம் புணர்த்த
னண்ணிய வட்ட மங்கல மென்ப. (௧௨௮)

௨௯௮ இறைவனை யேத்திய வெண்வகை மங்கல
மறிதரும் பாவே யகவல் விருத்தம்;

சேந்தம்பூதனூர். (௧௨௯)

### ௯௧—இல்லறவெள்ளை.

௨௯௯ கலிதரு வண்ணமும் வெள்ளையு மொன்பா
னிலைபெறப் புணர்ப்பினஃ தில்லற வெள்ளை. (௧௩0)

இதனுட் கலிதருவண்ணம் என்றதனால் வெண்கலிப்பா ஒன்றானும் பாடுவாருமுளர். நிலைபெற என்றதனாற் சந்தவகை யொன்பதும் வெண்பா ஒன்பதுமாகப் பாடுவாருமுளர்.

### ௯௨—மங்கலவெள்ளை.

௩00 சந்தமும் வெள்ளையுந் தருவன கற்புடை
மங்கல வெள்ளை வருவன வொன்பான். (௧௩௧)

௩0௧ அதுவே, வெண்கலி தானும் வருதற்கு முரித்தே.
மாபூதனார். (௧௩௨)

௩0௨ சந்தமும் வெள்ளையுந் தனித்தனி புணர்த்தனு
மந்தமில் புலவ ராமென மொழிப;
சீத்தலையார். (௧௩௩)

### ௯௩—தாரகைமாலை.

௩0௩ இரண்டு பொருள்புண ரிருபத் தெழுவகைச்
சீரிய பாட்டே தாரகை மாலை. (௧௩௪)

### ௯௪—செந்தமிழ்மாலை.

௩0௪ எப்பொரு ளேனு மிருபத் தெழுவகை
செப்பிய †நெறியது செந்தமிழ் மாலை. (௧௩௫)

பாவானும் இனத்தானும் பாடுவாருமுளர். நான்கு முதற்பாவானாதல் ஒருபாவி னினத்தானாதல் பாடுக என்பாருமுளர்.

### ௯௫—தாண்டகம்.

௩0௫ மூவிரண் டேனு மிருநான் கேனுஞ்
சீர்வகை நாட்டிச் செய்யுளி னடைவர்
கடவுளர்ப் புகழ்வன தாண்டக மவற்று
ளறுசீர் குறியது நெடியதெண் சீராம். (௧௩௬)

௩0௬ அறுசீ ரெண்சீ ரடிநான் கொத்தங்
கிறுவது தாண்டக மிருமுச் சீரடி
குறியது நெடிய திருநாற் சீரே;
பல்காயனார். (௧௩௭)

---

* 'வகையது' பி-ம்.

௩௦௭ மங்கல மரபின் மானிடர் கடவுளர்
தம்புக ழுரைப்பது தாண்டக வகையே. (௧௩௮)

௩௦௮ தாண்டக மானிடர் கடவுளர்க் குரித்தே;
மாபூதனர். (௧௩௯)

௩௦௯ அடிவரை நான்கும் வருமெழுத் தெண்ணி
நேரடி வருவது தாண்டக *மாகும்.
சீத்தலையார். (௧௪௦)

## ௬௬—பதிகம்.

௩௧௦ ஆசிரி யத்துறை யதனது விருத்தங்
கலியின் விருத்த மவற்றி னென்கடி
பெட்டின் காறு முயர்ந்த வெண்பா
மிசைவைத் திரைந்து நாலைந் தென்னப்
பாட்டுவரத் தொடுப்பது பதிக மாகும். (௧௪௧)

## ௬௭—சீர்மெய்க்கீர்த்தி.

௩௧௧ சீர்நான் காதி யிரண்டடித் தொடையாய்
வேந்தன் மெய்ப்புக ழெல்லாஞ் சொல்லியு
மந்தத் தவன்வர லாறு சொல்லியு
மவளுடன் வாழ்கெனச் சொல்லியு மற்றவ
னியற்பெயர்ப் பின்னர்ச் சிறக்க யாண்டெனத்
திறப்பட வுரைப்பது சீர்மெய்க் கீர்த்தி. (௧௪௨)

௩௧௨ நிலைபெறு சீர்மெய்க் கீர்த்தியி னந்த
முறையாய் முடியு மெனவுரைத் தனரே;
கோவூர்கிழார். (௧௪௩)

## ௬௮—செருக்களவழி.

௩௧௩ தலைவன் செய்த நிலைபெறு புகழ்புனை
நேரிசை வெண்பா வின்னிசை வெண்பாப்
பஃறொடை வெண்பா மறக்கள வழியே. (௧௪௪)

௩௧௪ நேரிசை யின்னிசை பஃறொடை வெண்பா
போரினக் களவழி புகலப் படுமே. (௧௪௫)

---

* 'மென்ப'பி-ம்.

௩௯.—மறக்களவஞ்சி.

௯௧௫ குறள்சிந் தளவடி யகவ லடிவிராஅய்
வஞ்சிச் செய்யுளின் மன்னவர் மறக்கள
மெஞ்சா துரைப்பது மறக்கள வஞ்சி. (௧௪௬)

௯௧௬ இயங்குபடை மன்ன ரிகற்களம் புகழ்ந்த
மயங்கியல் வஞ்சி மறக்கள வஞ்சி. (௧௪௭)

௪௦.—சேருக்களவஞ்சி.

௯௧௭ விருத்தவகை பத்தான் விளம்பு மதனைச்
செருக்கள மெனவே செப்பினர் புலவர். (௧௪௮)

௪௧.—ஆற்றுப்படை.

௯௧௮ புரவலன் பரிசில் கொண்டு மீண்ட
விரவலன் வெயிறெறு மிருங்கா னத்திடை
வறுமை யுடன்வரூஉம் புலவர் பாணர்
பொருநர் விறலியர் கூத்தர்க் கண்டப்
புரவல னூர்பெயர் கொடை பராஅ
யாங்குநீ செல்கென விடுப்பதாற் றுப்படை. (௧௪௯)

௯௧௯ ஓங்கிய வதுதா னகவலின் வருமே. (௧௫௦)

௯௨௦ புலவராற் றுப்படை புத்தேட்கு முரித்தே, (௧௫௧)

௪௨.—கண்படைநிலை.

௯௨௧ காலைபகன் மாலை யாழ்முறை யறத்திய
லமைச்சிய லரசிய லேனை யியலிசை
நாடகத்திய லோடு *நான்மறை
முறையே யெய்தினை யூழி வாழி
யினிய மகளிரோ டின்பத்துயில் கொள்கென்
†றிங்ஙன முரைப்பது கண்படை யாகும். (௧௫௨)

௪௩.—துயிலெடைநிலை.

௯௨௨ கண்படை மன்னவர் முன்னர்த் தண்பத
விடிய லெல்லை யியல்புறச் சொல்லித்

* 'நான்கு, முறைமுறை யெய்தினை' பி-ம்.
† 'றின்ன' பி-ம்.

தந்த திறையருந் தாராத் திறையரு
*மேத்தி நின்மொழி கேட்டினி தியங்க
வேண்டினை ரித்துயி லெழூகென விளம்பி
னதுவே மன்னவர் துயிலெடை நிலையே. (கறுரு)

சச.—விளக்குநிலை.

௫உ௩ துளக்கமின் மன்னர்க் காம்விளக் குரைப்பது
விளக்கு நிலையென வேண்டினர் புலவர். (கறுச)

சரு.—கடாநிலை.

௫உச கொற்றவை தனக்குக் கொற்றவ ரெறியுங்
கடாநிலை யுரைப்பது கடாநிலை யாகும். (கறுரு)

௫உரு வடாஅதுறை கன்னிக்கு மன்னவ ரெறிந்த
கடாநிலை யுரைப்பது கடாநிலை யாகும்:

பெருங்குன்றூர்க்கிழார். (கறுசா)

சசா—யாண்டுநிலை.

௫உசா வையக மன்னவன் †மன்னுக பல்யாண்
டெய்துக வென்ப தியாண்டுநிலை யாகும். (கறுள)

இது பெரும்பான்மை நேரிசை வெண்பாவாற் பாடப்பெறும். சிறு பான்மை எல்லாப்பாவானும் பாடப்பெறும்,

சஎ.—பறைநிலை.

௫உள காவல ரினிதுறத் தேவர்காத் தளிக்கெனக்
கடவுளர் விழவினுங் கதிர்முடி விழவினு
நாடு நகரமு நலம்பெற வியம்பி
வருநெறி வஞ்சி வழங்கப் பற்றிய
மொழிவரத் தொடுப்பது பறைநிலை யாகும். (கறுஅ)

சஅ.—அந்தாதித்தொகை.

௫உஅ வெண்பாக் கலித்துறை வேண்டிய பொருளிற்
பண்பா யுரைப்பதந் தாதித் தொகையே. (கறுசு)

---

*'மேத்திநின் மொழிகேட் டினிதியங்க வேண்டின, ரித்துயி லெழூகென வியம்பி னதுவே, மன்னவ ரின்பத் துயிலெடை நிலையே.' பி-ம்.

† 'மன்னிய பல்யாண், டெய்துவ னென்பது' பி-ம்.

சஅ.—மருட்பா.

௩௨௯ புறநிலை வாயுறை செவியறி வுறாஉவெனத்
திறமையின் மருட்பாச் செய்யுளின் வருமே. (௧௯0)

சகூ.—பாதாதி.

௩௩0 அகவடி யுகிரே விரல்புற வடியே
பரடே கழலே கணைக்கால் முழந்தாள்
குறங்கே யல்குல் கொப்பூழ் வயிறதன்
வரையே யிடையே மயிரி னொழுக்கே
முலையுகிர் விரலே முன்கை யகங்கை
தோளிணை கழுத்தே முகநகை செவ்வாய்
மூக்கே கண்ணே காது புருவ
நுதலெனு மாறைந் துறுப்புட னிரண்டும்
பாத மாதியா வேண்டுதல் புணர்ப்பினஃ
தோதிய பாத மாதியா மென்ப. (௧௯௧)

௫0.—பணைமுலைநயனம்.

௩௩௧ பணைமுலை நயனம் பாங்கா மகவல்
விருத்தம் பத்தென விளம்பினர் புலவர். (௧௯௨)

௩௩௨ ஆகிய கண்முலை யகவல் விருத்தம்:
பெருங்குன்றூர்க்கிழார். (௧௯௩)

௫௧.—உழத்திப்பாட்டு.

௩௩௩ புரவலற் கூறி யவன்வா ழியவென்
றகல்வயற் றொழிலை யொருமை யுணர்ந்தன
னெனவரு மீரைந் துழத்திப் பாட்டே. (௧௯௪)

௫௨.—குறத்திப்பாட்டு.

௩௩௪ இறப்பு நிகழ்வெதிர் வென்னுமுக் காலமுந்
திறப்பட வுரைப்பது குறத்திப் பாட்டே. (௧௯௫)

௩௩௫ குறத்திப் பாட்டு மதனோ றற்றே. (௧௯௬)

௫௩.—ஒருபாவொருபஃது.

௩௩௬ வெள்ளை யாத லகவ லாத
றள்ளா வொருப தொருபா வொருபஃது. (௧௯௭)

### ௫௪.—இருபாவிருபஃது.

௩௩௭ வெள்ளை யகவல் பின்னர் முறைவைத்
தெள்ளா தியல்வ திருபா விருபஃது. (௧௬௮)

௩௩௮ ஒருபா வொருபஃ திருபா விருபஃதுங்
கருதிய வெள்ளையு மகவலுங் காட்டினர். (௧௬௯)

### ௫௫.—கோவை.

௩௩௯ கோவை யென்பது கூறுங் காலை
மேவிய களவு கற்பெனுங் கிளவி
யைந்திணை திரியா வகைப்பொரு டழீஇ
மூந்திய கலித்துறை நானூ றென்ப. (௧௭௦)

௩௪௦ களவினுங் கற்பினுங் கிளவி வகையாற்
றிணைநிலை திரியாச் செம்மைத் தாகி
நாட்டிய கலித்துறை நானூ றுரைப்பது
கோட்ட மில்லாக் கோவை யாகும். (௧௭௧)

௩௪௧ ஐந்திணை தழுவிய வகைநிலைக் கோவை
தந்தநா னூறுந் தாங்கலித் துறையே. (௧௭௨)

### ௫௬.—கணக்கு. (மேற்கணக்கு—கீழ்க்கணக்கு.)

௩௪௨ மேல்கீழ்க் கணக்கென *விருவகைக் கணக்கே. (௧௭௩)

௩௪௩ மேற்கணக் கெனவுங் கீழ்க்கணக் கெனவும்
பாற்படும் வகையாற் பகர்ந்தனர் கொளலே. (௧௭௪)

௩௪௪ அகவலுங் கலிப்பா வும்பரி பாடலும்
பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீறா
மிகுத்துடன் றொகுப்பன மேற்கணக் கெனவும்
வெள்ளைத் தொகையு மவ்வகை யெண்பெறி
னெள்ளறு கீழ்க்கணக் கெனவுங் கொளலே. (௧௭௫)

௩௪௫ ஐம்பது முதலா வைந்நூ றீறா
யைவகைப் பாவும் பொருணெறி மரபிற்
றொகுக்கப் படுவது மேற்கணக் காகும். (௧௭௬)

* 'விதித்தனர் புலவர்' பி-ம்.

ருசசு அடிநிமிர் பிலவாய்ச் செய்யுட் டொகுதி
யறமுதற் பொருளின் பயந்தி *பவைத்
திறப்பட வுரைப்பது முக்கணக் காகும். (கஎஎ)

எ—தொடர்நிலைச் செய்யுள்.

ருசஎ விருத்தம் ரியைந்து நல்லமைந்த போலி
பொருத்த வெண்பாவிற் றிருத்தப் பதவல
வுறுத்த மையிருகொச்சக வுறுப்பு
டைமைய வருவது தொடர்நிலை யென்ப. (கஎஅ)

ருசஅ விருத்த மொன்றின் விரித்தியல் கொடியென
வொத்த சொற்றொடர் பிறமுமெனப் பொருந்தி
யொழுகிய சொற்கள் விருத்த மடக்கமு
முறைமுறைப் பாடிக் கொடுத்துக் கொச்சகத்
தொடர்பெற வருவது தொடர்நிலை வகையே. (கஎகூ)

ருசகூ தொடர்நிலை யெல்லா மிடைப்படக் கொடுத்துத்
தலைப்பிடைக் கவி யென நவையுய படுமே. (கஅ0)

ருரு0 அவையுமா.—
தலையெனப் படுபவை மங்கல முதலி
னறமுதற் பொருளின்ப மீடென விவற்றிற்
றிறமெய்ப் பாடிற் கொடுத்து
வைக்குமைகொள் வினைக்கை யெனறிவை யனைத்துஞ்
சுருங்கக் கருத்தமைவு பெறுமே. (கஅக)

அ—பாட்டு (பத்துப்பாட்டு.)

ருருக நூறடிச் சிறுமை நூறுமுப்பத் தளவே
பெருமை. அகவலின் வருமென வறைகுநர் புலவர்: (கஅஉ)

கூ.—கடைநிலை.

கடைநிலை யென்பது காணுங் காலை
யெழுப்புங் குரிசிலை முனிந்தோர்
புகுத் தியம்பும் காட்சித் தென்ப. (க ரு)

ருசு-ம். (கஅச)

௩௫௪ பரிசினீட் டித்த லஞ்சி வெறுத்தோர்
கடைநின் றுரைப்பது கடைநிலை யென்ப. (௧௮௫)

கடையெனினும் அங்கதமெனினு மொக்கும்.

௩௫௫ வலங்கெழு வேந்தர் வான்புகக் கவிஞர்
கலங்கித் தொடுப்பது கையறு நிலையே. (௧௮௬)

௩௫௬ வெற்றி வேந்தன் விண்ணக மடைந்தபின்
கற்றோ ருரைப்பது கையறு நிலையே. (௧௮௭)

௩௫௭ கலியே வஞ்சியிற் கையற வுரையார். (௧௮௮)

௩௫௮ மற்றவை வல்ல வினம்பிறி தொனறினு
மத்தகு மரபி னடக்கினர் கொளலே. (௧௮௯)

## இனவியல் முற்றும்.

## பன்னிருபாட்டியல் முற்றிற்று.